கனடாவின் மூத்த தமிழ் இதழ்
19 வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338
416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Scarborough, ON M1J 2H2
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Scarborough, ON M1X 0A6
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 19 பாலம் 22 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 15, 2009

# நிலாவில் நீர்

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா சமீபத்தில் நடத்திய ஆய்வுகளில், நிலவில் குறிப்பிடத்தக்க அளவு தண்ணீர் இருப்பது தெரியவந்துள்ளது.



பூமியின் துணைக்கோளான சந்திரனில் தண்ணீர் இருப்பதாக நாஸா ஆய்வு மையம் அறிவித்துள்ளது. நீண்டகாலமாக இந்த ஆராய்ச்சி இடம்பெற்றுவந்ததாகவும் அண்மைய ஆய்வுகளால் ஆதாரத்துடன் நிரூபிக்கக் கூடியதாக உள்ளதாகவும் அந்த மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தியா அனுப்பிய சந்திராயன் - 1 ஆய்வுக்கலத்தில் இணைக்கப்பட்டிருந்த ஆய்வு உபகரணங்கள் நிலவில் தண்ணீர் இருப்பதை கடந்த சில மாதங்களுக்கு முன் உறுதி செய்தது. இது விண்வெளி ஆய்வில் முக்கிய மைல்கல்லாக கருதப்பட்டது.

இதையடுத்து கடந்த சில வாரத்திற்கு முன் ராக்கெட்டை நிலவில் மோதச் செய்து அப்போது ஏற்படும் அதிர்வு மூலம் நிலவின் மேற்பரப்பை தகர்த்து அதில் தண்ணீர் இருக்கிறதா? என்ற ஆய்வு நாசா மேற்கொண்டது. இதில் தற்போது ஆச்சரியப்படும் வகையிலான தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிலவின் மீது ராக்கெட்டை மோதச் செய்து நாசா நடத்திய ஆய்வில் இடம்பெற்ற விஞ்ஞானி ஜான் லோக்ஸ்டோன் செய்தியா-ளர்களிடம் பேசுகையில், முன்பு மிகக் குறைந்த அளவிலேயே நிலவில் தண்ணீர் இருப்பதாக நம்பினோம். ஆனால் சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வு முடிவுகள் வியக்கத்தகு வகையில் உள்ளது. குவளையில் (பக்கெட்) அள்ளக் கூடிய குறிப்பிடத்தக்க அளவு தண்ணீர் நிலவில் உள்ளது தற்போது கண்டறியப்பட்டுள்ளது என்றார்.

ராக்கெட் மோதிய இடத்தில் ஏற்பட்ட பள்ளத்தில் குறைந்தது 25 கேலன் (95 லீட்டர்) தண்ணீர் இருந்ததாக நாசா தகவல்கள் தெரிவிக்கின்றன.

“சந்திரனில் தண்ணீர் உண்டு என்பதை நாம் கண்டுபிடித்துள்ளோம். மிகுந்த சந்தோசத்துடன் இந்தத் தகவலை உலகுக்கு கூறுகிறோம்” என நாஸா ஆய்வுநிலையத்தின் திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த விஞ்ஞானி எந்தனி கொலபிரேட் தெரிவித்துள்ளார்.

ஆய்வின் புதியதொரு பக்கம் திறந்திருக்கிறது எனக் குறிப்பிடும் எந்தனி, தண்ணீர் அதிகம் இருப்பதை தமது செயற்கைக் கோள்களில் தெளிவாக காட்டப்படுவதாகவும் கூறியுள்ளார்.

## சரத் பொன்சேக்கா தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்

சரத் பொன்சேக்கா தமது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்

“ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீது தாம் நம்பிக்கை இழந்திருக்கிறேன். இதனால் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியாக தொடர்ந்தும் பணியாற்றுவதில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றது” என்று தெரிவித்து கூட்டுப்படைகளின் தலைமையதிகாரி ஜெனரல் சரத் பொன்சேக்கா பதவியிலிருந்து ஓய்வுபெறும் கடிதத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பியிருப்பதாக ஜனாதிபதி செயலகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றது.

இலங்கை சென்றடைந்துள்ள மியன்மார் இராணுவ ஆட்சியாளரை வரவேற்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையம் சென்று திரும்பிய பின்னரே சரத் பொன்சேக்கா தமது ஓய்வுபெறும் கடிதத்தில் கையெழுத்திட்டு, அனுப்பியுள்ளார்.

பதவிக் காலம் முடிவடையும் முன்னர், 2009 டிசம்பர் 01ம் திகதி அமலுக்கு வரும் வகையில் தான் இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெறுவதற்கான அனுமதியை வழங்குமாறு சரத் பொன்சேக்கா தனது ஓய்வுக் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். தான் ஓய்வு பெற்றாலும் விடுதலைப் புலிகள் அமைப்பினால் தனக்கு வாழ்நாள் முழுவதும் அச்சுறுத்தல் இருக்கக்கூடும் எனக் குறிப்பிட்டுள்ள சரத் பொன்சேக்கா, தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஜனாதிபதியினது மாத்திர மல்லாது அரசாங்கத்தினதும் பொறுப்பு என சுட்டிக்காட்டியுள்ளார்.

சரத் பொன்சேக்கா இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற எண்ணினால் இதற்குத் தடை ஏற்படுத்தப் போவதில்லையென சரத் பொன்சேக்காவிடம் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி, இவருடைய ஓய்வுபெறுவதற்கான காலம் உடனடியாக அமலுக்கு வருமாறு திடீர் உத்தரவிட்டுள்ளார்.

தனது கடிதத்தில் தாம் ஓய்வு பெறுவதற்கான அழுத்தங்களை ஏற்படுத்திய காரணங்களை விளக்கியுள்ள சரத் பொன்சேக்கா அரசியலில் ஈடுபடுவது குறித்து எதுவும் குறிப்பிட்டிருக்க வில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவ நிர்வாக செயற்பாடுகளில் அரசாங்க நிர்வாகத்திற்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் சிறந்த நம்பகதன்மை இருக்க வேண்டும் என தெரிவித்துள்ள சரத் பொன்சேக்கா, இராணுவத்தின் உயர் அதிகாரி யான தனக்கும், ஜனாதிபதிக்கும் மற்றும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டு நிலைமைகள் காரணமாக இராணுவத்திற்குள் ஒழுக்கம் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளார்.

இதே சமயம் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றுகின்ற, கூட்டுப்படைதலைமை அதிகாரி சரத் பொன்சேகாவின் உறவினர்கள், தமது பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சரத் பொன்சேகா உத்தியோக பூர்வமாக பதவி ஓய்வுக்கான கடிதத்தை வழங்கியுள்ள நிலையில், அது ஏற்கப்பட்டதன் பின்னர்,

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

**துரித பணமாற்றுச் சேவை**
• 51 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 18 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

**VASANTHAM HOME SERVICES**
வசந்தம் வீடு சேவைகள்
• Cleaning: Carpet, Duct, Sofa, Car, Window, Home & Office
• Painting & Home Renovation
• Moving to any town
• Airport Services
வீடு, ஜன்னல், சோபா, காரியாலயம் சுத்தம் செய்தல். வர்ணம் பூசுதல். விமானநிலைய சேவை. வீட்டு பொருட்கள் நகர்த்தல்.
Call: 647.296.9374/ 416.836.6791

Sales & LEASING
MARKVILLE TOYOTA
➤KUMAR JEGASOTHY⮜
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

**SATHYA SAIRAM DRIVING SCHOOL**
• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

இன்றைய காலகட்டத்தில் இனிய திருமண வாழ்க்கைக்கு பெரும் இடையூறாக இருக்கும் காரணிகளில் முக்கியமானது எது தெரியுமா? பணம் தான். கனடாவில் நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வு ஒன்றின்படி 86 சதவீதத் தம்பதியர் பணத்தின் காரணமாக கனடாவில் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்கிறார்கள்.

பணத்திலும் சண்டைக்குப் பெரிதும் காரணமாக இருப்பது செலவு செய்யும் முறைகளும், கடன்களுமே ஆகும். செலவு செய்யும் முறையே கடனுக்கு இட்டுச் செல்லும். செலவு செய்யும் முறையே சேமிப்புக்கும் இட்டுச் செல்லும். கடன் - செலவு - சேமிப்பு எல்லாம் ஒன்றோடு ஒன்று நெருங்கிச் சம்பந்தப்பட்டது. ஆய்வுகளின் படி எதற்கு எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்பதும் கடன் சுமைகளுமே பெரும்பாலான தம்பதியரின் சண்டைகளுக்குக் காரணம்.

1950 களில் பிறரிடம் முறையற்ற ஈடுபாடு, கஷ்டப்படுத்துதல் போன்ற காரணங்களுக்காக பெரும்பாலான விவாகரத்துக்கள் நடந்தனவாம். இன்றைக்கு அந்தக் காரணங்களைச் சற்றே பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னால் நிற்பது 'பணம்' தான் என்றால் அது மிகைப்படுத்தப்பட்டது அல்ல என்கிறார்கள். நிதிச் சிரமங்களும், கடன் தொல்லைகளும் இன்றைக்குப் பல விவாகரத்துக்களுக்குக் காரணமாகி இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

கிரிடிட் கனடா அமைப்பின் நிர்வாகிகளில் ஒருவரான லாரி கேம்பிளின் கூற்றுப்படி, நிதி நெருக்கடி இல்லாத இடங்களிலும் பணம் விவாகரத்துக்கு முக்கியமானதொரு காரணம் ஆகின்றது. பெரும்பாலான தம்பதிகள் பணத்தைச் சரிவர நிர்வகிப்பதில்லை. ஒருவரின் வரவு செலவுகளும், சேமிப்புகளும் மற்றவருக்குத் தெரிவதில்லை. ஏறத்தாழ பல தம்பதிகள் தங்கள் வரவு செலவுகளையும், சேமிப்புக்களையும் வாழ்க்கைத் துணைக்கு தெரியப்படுத்துவதில்லை. இதில் ஒளிவு மறைவான நிலையே இருக்கக் காண்கின்றோம். இதுவும் 'லாரி கேம்பளின் கூற்று. பல தம்பதிகள் உடல் உறவுக்காகவோ, குழந்தைகளுக்காகவோ சண்டையிடுவதை விடப் பணத்துக்காக சண்டையிடுவதே இன்றைக்கு அதிகம் என்கிறார் லாரி கேம்பளின். மேல் எழுந்த வாரியாகப் பார்த்தால் பணம்தான் பல தம்பதியரின் மகிழ்வான மணவாழ்வுக்கு இடையூறாக இருப்பது போலத் தோன்றும். உண்மையில் இடையூறாக இருப்பது பணம் அல்ல. ஒருவருக்கு ஒருவர் மனம்விட்டு உண்மையாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளாமல் இருப்பதே முக்கியமான காரணம். அதன் வெளிப்பாடே பணமும் மற்றக் காரணங்களும் ஆகும்.



நல்ல தம்பதியருக்கு இடையிலும் பணம் பற்றிய விவாதங்கள் வரக்கூடும். ஆனால் அந்த விவாதங்கள் அறிவு பூர்வமானதாகவும், ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கக் கூடிய தன்மையினதாகவும் இருக்கக் காண்கின்றோம். பிரச்சினைகள் என்று வரும்போது தள்ளிப்போடாதீர்கள். நேர்மையாகவும் உண்மையாகவும், திறந்த மனத்தோடும் தம்பதியர் இருவரும் பிரச்சினைகளை அணுக வேண்டும். மனம் விட்டு பேச வேண்டும். தீர்வுகள் என்னென்ன என்று ஆராய்ந்து அவற்றில் சிறந்தது எதுவோ அதைச் செயல்படுத்த முடிவு செய்ய வேண்டும்.

இருவரும் ஒரு விடயத்தில் ஒத்த மனப்பான்மை வரவில்லை என்றால் இருவரின் நம்பகத்துக்கும் பாத்திரமான குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரையும் கலந்து சுமூகமான முடிவுகளை எடுக்கலாம்.

பெரும்பாலான ஆண்டுகளுக்கு ஓய்வு காலத்தைப்பற்றிய எண்ணம் முக்கியமானது. பெரும்பாலான பெண்களுக்கு குழந்தைகளைப் பற்றிய எண்ணம் முக்கியமானது என்று சில ஆய்வுகள் கண்டறிந்திருக்கின்றன.

என்னுடைய அனுபவத்தில் ஆண்கள் பெண்களை விட அதிகம் 'ரிஸ்க்' எடுக்கத் தயாராக இருப்பதைப் பார்த்திருக்கிறேன். பெண்கள் பொதுவில் 'ரிஸ்க்' ஆன எதையும் விரும்புவதில்லை. இந்தப் பொதுத்தன்மை மொழி, மதம், இனம், நிறம் இவற்றின் அடிப்படையில் மாறாமல் இருப்பதையும் பலமுறை நான் கண்டிருக்கிறேன். பணம் மற்றும் நிதி இவற்றை எவ்வாறு கையாள்வது என்பது வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் திறமைகளில் ஒன்றாகும். இந்தத் திறமை பலபேரிடம் போதுமான அளவுக்கு இல்லை என்ற கருத்தின் அடிப்படையில் கனடிய பெடரல் அரசும், ஒன்ராறியோ மாநில அரசும் பெரியவர் மற்றும் குழந்தைகளிடையே நிதி பற்றிய அறிவை (Financial Literacy) பெருக்கப் பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.



**பெரி. முத்துராமன்**

# சரத்...

அவரின் உறவினர்கள் பதவியில் இருந்து முற்றாக விலக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றிய, சரத் பொன்சேகாவின் உறவின ரான சரத் முனசிங்க, அந்த பதவியில் இருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டு போக்குவரத்து பொலிஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, சரத் பொன்சேகாவின் மகளின் கணவரின் தந்தையான பிரதி காவற்துறை மா அதிபர் சிசில் பெரேரா, தமது பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன் சேகாவிற்கு எதிராக களனிய பிரதேசத்தில் எதிர்ப்பு ஆர்ப்பட்டமொன்று நடத்தப்பட்டுள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக அறிவித்ததன் பின்னர், மத வழிபாடுகளில் ஈடுபடும் நோக்கில் ஜெனரல் பொன்சேகா களனி ரஜ மஹா விஹாரைக்கு சென்றிருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தின் போது அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் சிலர் ஜெனரல் பொன்சேகாவிற்கு எதிராக கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளியிட்டதாக நேரில் கண்ட சாட்சியொருவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தகவல் வழங்கியுள்ளார். சுமார் 200க்கும் மேற்பட்ட நபர்கள் இவ்வாறு ஆப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும், ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாதுகாப்பு அதிகாரிகள் குறித்த நபர்களை விரட்டியடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு சக்திகளின் சதித் திட்டங்களுக்காக நாட்டை காட்டிக் கொடுக்க வேண்டாம் என குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பியுள்ளனர்.

கொழும்பு மகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள் தமிழ் கைதிகளில் 22 பேர் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிய வருகிறது. அதில் கடும் காயங்களுக்குள்ளான ஏழு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

சம்பவம் நடைபெற்றதை உறுதிப்படுத்திய பிர-தியமைச்சர் இராதாகிருஸ்ணன் உண்மை நிலையை அறிவதற்கு சிறைக்குச் சென்று பார்வையிட சிறை அதிகாரிகள் அனுமதி யளிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.



தமிழ் அரசியல் கைதிகள் 92 பேர், இருந்த அறைக்கு வந்த புதிய அதிகாரி ஒருவர் தமிழ்க் கைதிகளைத் தகாத வார்த்தைகளால், பேசியுள்ளார். இதற்கு தமிழ்க் கைதிகள் எதிர்ப்புத் தெரிவித்ததால் மோதல் உருவானதாகக் கூறப்படுகின்றது. இச்சம்பவத்தின் போது நூற்றுக்கணக்கான சிங்கள சிறைக்கைதிகளும் சேர்ந்து கொண்டு தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இதேவேளை இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு சிங்கள கைதியும் கைது செய்யப்படாத நிலையில், ஐந்து தமிழ் கைதிகள், ஒழுக்காற்று விசாரணைக்காக சிறைச்சாலைக்குள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் பிரதி அமைச்சர் ராதாகிருஸ்ணன் குறிப்பிட்டுள்ளார்



## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Scarborough, ON M1S 0C2
2. Fax: 416.282.8059
3. email: vlambaram@sympatico.ca

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran**, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

**HomeLife GTA Realty Inc.** Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**


# கனடாவின் கதை - 9

## பீடபூமிக் கலாசாரத்தின் இறுதிக்காலம்

### (Late Plateau Culture )

கனடா பீடபூமியானது கரையோர மலைத் தொடர்களுக்கும் றொக்கி மலைத் தொடர்களுக்கும், கனடா அமெரிக்கா எல்லைக்கு வடக்கேயும் அமைந்துள்ளது. இப்பகுதியில் பிரேசர் ஆறும் ஆற்றின் கிளைகளும் கொலம்பியா ஆறும், ஸ்கினா ஆறும் காணப்படுகின்றன. இப்பகுதியில் றொக்கி மலையின் அகழி ஒன்றும் காணப்படுகின்றது. இது பிரிட்டிஷ் கொலம்பியாவின் வடமேற்கு எல்லை யான மொன்ரானாவில் ஆரம்பித்து வடமேற்குப் பிரதேசங்களின் லயாட் ஆறுவரை (Liard river) பரந்திருக்கும். இவ்வகழியின் தென்பகுதியில் 725 மீற்றருக்கு, 3 முதல் 16கி.மீ அகலமுள்ள பள்ளத்தாக்கு உள்ளது. இப்பகுதியில் பிரேசர் ஆற்றின் முக்கிய பகுதியும் கொலம்பியா ஆற்றின் முக்கிய பகுதியும் அமைந்துள்ளன. பின் இவ்விரு ஆறுகளும் தென்மேற்காகத் திரும்புகின்றன. கொலம்பியா ஆறு வோஷிங்டனுக்கும் ஒறிகனுக்கும் இடையாக ஓடி பசுபிக் சமுத்திரத்தை சேருகின்றது. பிரேசர் ஆறு வன்கூவரில் பசுபிக் சமுத்திரத்தை அடைகின்றது. இப்பீட பூமியின் பெரும் பகுதி குளிர்ந்த உஷ்ண மண்டலக் காட்டுத் தாவர வகைகளைக் கொண்டிருக்கும். குறிப்பாக ஸ்புறூஸ் (Spruce) அஸ்பென் (Aspen) பைன் (Pine), சீடர் (Cedar) எம்லொக் (Hemlock), பேர் (Fir) மரங்களைக் கொண்டிருக்கும். இப்பகுதியின் ஈரப்பதன் 30 முதல் 70 செ.மீற்றருக்கு இடைப்பட்டதாய் இருக்கும். ஆண்டுப் பனி வீழ்ச்சி 75 - 500 செ. மீ ஆகவிருக்கும். ஜனவரிக்கும் ஜுலை மாதத்துக்குமான ஆண்டு வெப்ப நிலை - 20 முதல் - 30 பாகை செல்சியசுக்கும் 10 முதல் 21 பாகை செல்சியசுக்கும் இடைப்பட்டிருக்கும். இரு நீர் வாழியான செவ்வாளை மீன் நன்னீரில் முட்டையிட்டு குஞ்சுகளாக வளர்ந்து, விடலைப் பருவத்தைச் சமுத்திரத்தில் கழிக்கும். பின் இது கொலம்பியா வாவியை வந்தடையும். இப்பகுதியில் பைசன் மாடுகள், வெள்ளை வால் மான்கள், கறிபோக்கள், மலை ஆடுகள், கருங்கரடிகள் ஆகியனவும் காணப்படும்.

இக் கலாசாரம் பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டிருந்தது. ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் நிலையான குழி வீடுகளைக் கொண்ட கிராமங்களிருந்தன. கோடை காலத்தில் தற்காலிகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டு அங்கு கிடைத்த மூலவளங்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. குளிர் காலத்துக்குத் தேவையான உணவுப் பொருட்கள் குழிகளில் சேமித்து வைக்கப்பட்டன. குழிப் போறணைகள் பாவிக்கப்பட்டன. வெப்பமாக்கப்பட்ட கற்கள் நீர் கொதிக்கவைப்பதற்கும் உணவுகளைத் தயாரிப்பதற்கும் பாவிக்கப்பட்டன. குளிர்காலத்தில் மீன்கள் முக்கிய உணவாகப் பயன்பட்டன. எனினும் சேமிக்கப் பட்ட கிழங்குகள், பெறிப்பழங்கள், மானின் உடனிறைச்சிகள் அல்லது புகையூட்டப் பட்ட இறைச்சிகள் ஆகியனவும் பாவிக்கப்பட்டன. என்பிலிருந்து ஆயுதங்கள் செய்யும் தொழினுட்பம் குறைவாக இருந்தது. ஆனால் கற்களைச் செதுக்கி ஆயுதங்கள் செய்யும் தொழினுட்பம் நன்கு விருத்தியடைந்திருந்தது. விலங்குவடிவ ஆயுதங்கள் செதுக்கும் கலையும் காணப்பட்டது. கரையோரப்பகுதி மக்களோடு வியாபாரத் தொடர்புகள் காணப்பட்டன.



**விலங்கு வடிவ உலக்கை**

படம் - 1 தென் லிலூவெற் புதை பொருள் அகழ்விடத்திலிருந்து கிடைத்த மினுக்கப்பட்ட கல்லாயுதம். இது மரவேலையில் ஒரு மரக் கைபிடி செலுத்தப்பட்டு சுத்தியல் போல் பாவிக்கப்பட்டிருக்கலாம். அல்லது உலர்ந்த மரங்கள் அல்லது இறைச்சிகள் அரைப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இதன் மேற்புறம் தவளையின் தலை போல் செதுக்கப்பட்டுள்ளது.

குழி வீடுகள் முதன் முதலாக மூன்றாம் காலப்பகுதியிலிருந்த மத்திய பீடபூமிக் கலாசாரத்தில் தோன்றின. இவை அரைவாசி நிலக் குழிகளாக வட்ட வடிவில் அமைந்து, கூம்பு அல்லது பிரமிட் கூரைகளைக் கொண்டிருந்தன. இவ்வீடுகளுக்கான வாசல் கூரையிலிருந்தது. இவர்கள் ஒரு மர ஏணி வழியாக உள்ளே இறங்கியிருக்கலாம். உட்புற அமைப்புக்கள் வேறுபட்டிருந்தன. இவை கி.மு. 1000 ஆண்டளவில் கட்டப்பட்டிருக்கலாம். இவ்வீடுகளைக் கொண்ட கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அக்கால மக்கள் நிரந்தரமாக வாழ முற்பட்டமையை அறிந்து கொள்ளலாம். நிரந்தர வாழ்வுக்குத் தேவையான உணவு சேமிப்பதற்கு வேட்டையாடுதல் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டது. இது கி.மு. 4000க்கும் கி.பி. 1ஆம் ஆண்டு கால பகுதியில் நடைபெற்றது. இதன் பின்னர் சேமிக்கப்பட்ட உணவுகளோடு தேவையேற்பட்டபோது வேட்டையாடுதல் மேற்கொள்ளப்பட்டது. நிரந்தர வாழ்வுக்கு உணவு மட்டுமல்லாது, சமூக, பொருளாதார, தொழினுட்ப மாற்றங்களும் காரணங்களாய் இருந்தன.

குழி வீடுகளின் தரையிலே சவத்தை அடக்கஞ் செய்யும் எளிய முறைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. வீட்டுக்கப்பாலுள்ள மைதானத்தில் காணப்பட்ட மயானத்தில் அரைகுறையாக எரிந்த நிலையிலுள்ள நான்கு குழந்தைகளின் சடலங்கள், கம்லூப்சிலுள்ள புதைவிடத்தில் இருந்து பெறப்பட்டன. இதிலிருந்து இறந்தவர்களை எரியூட்டும் முறையும் அக்காலத்தில் இருந்தது என அறியக் கிடக்கின்றது. இந்த சடலங்களோடு மான் கொம்பிலிருந்து தயாரிக்கப்பட்ட கத்தி கைபிடிகள், மரப்பட்டையைச் சீவப் பயன்படுத்தும் வாய்ச்சுக்கள், கடல் விலங்குப் பற்களிலிருந்து செய்யப்பட்ட மாலைகள் ஆகியனவும் காணப்பட்டன. மேலும் மனித உருவங்களில் கல்லிலிருந்து செதுக்கப்பட்டு மினுக்கப்பட்ட குவளைகள் கனடியபீடபூமியிலும், தெற்கு கரையோரப் பகுதிகளிலும் காணப்பட்டன. இவை 250 முதல் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றது.

**- துறையூரான் -**

போதியளவு என்புக் கூடுகள் கிடைக்காத-தனால் அக்கால மக்களின் உருவவியல், உயிரியல் தகவல்கள் எதுவும் கூறமுடியாதுள்ளது. இங்கு வாழ்ந்த மக்கள் சுற்றியிருந்த மலைகளின் காரணத்தால் அயலில் உள்ள கலாசாரங்களுடன் கூடியளவு தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் பிரேசர் ஆற்றின் மத்திய பகுதியில் வாழ்ந்தவர்களும், தொம்சன் ஆற்றின் பகுதியினரும் கடலோர மக்களுடன் தொடர்புகள் கொண்டிருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகினறன. சோப்புக்கல், வாய்ச்சுக்கள் செவ்வாளை மீன் கருவாடு ஆகியன பீடபூமியிலிருந்து கரையோரத்துக்கும் அங்கிருந்து எயுலாக்கன் மீனெண்ணெய், சிப்பிகள், பீடபூமிக்கும் வியாபாரபொருட்களாய் இருந்துள்ளன. இவற்றுடன் சில கல்லாயுதங்களும் வணிகப் பொருட்களாகப் பரிமாறப்பட்டுள்ளன.

இக்கலாசாரத்தில் பல குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து உள்ளூர் குழுக்களாக வாழ்ந்தனர். இக்குழுக்கள் தமக்கிடையே திருமணத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டன. பல குழுக்கள் சேர்ந்து குளிர் காலக் கிராமங்களில் தற்காலிகமாக வாழ்ந்தனர். இங்கு காணப்பட்ட பெரிய, சிறிய குழி வீடுகளிலிருந்து சமூக ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டிருக்கலாமென கருதப்பட்டாலும் அதற்கான போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் குறிக்கப்பட்ட குழுவொன்று தொடர்ச்சியாக பெரிய வீடுகளில் 1000ம் ஆண்டுகளாக வாழ்ந்ததிலிருந்து சிக்கலான சமூகப் பொருளாதார முறையொன்று இருந்திருக்கலாமென கருத இடமுண்டு. இப்பெரிய வீடுகள் உள்ளூர் தலைவர்களின் அல்லது பல குழுக்களின் தலைவர்களின் வசிப்பிடமாக இருந்திருக்கலாம். மேலும் இப்பெரிய வீடுகள் குளிர்கால கொண்டாட்டங்களுக்கும் பயன் படுத்தப்பட்டிருக்கலாம். பரம்பரையாக வந்த தலைவர்களும் மூலவளங்களின் தனியார் உரிமையும், கட்டுப்படுத்தப்பட்ட வியாபாரமும், சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தியிருக்கலாம். கம்லூப்ஸ் ஒதுக்கிடங்களில் பெரிய வீடுகள் தற்காலிகமாகவே பாவிக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. கீற்லி கிறீக் (Keatly Creek) புதை பொருளாராய்ச்சி இடத்திலிருந்து கிடைத்த சான்றுகளில் சிறிய வீடுகள் சில விசேட காரணங்களுக்காகக் கட்டப்பட்டிருந்தன என்பதை அறியமுடிகின்றது.

தொடரும்...


ஆதாரம்: *History of native people canada*

STATE FARM INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# விழிப்புணர்வின் தேர்வு

## உங்களுக்குப் பிடிக்காத ஒன்றை நீங்கள் செய்ய வேண்டுமென்றால் விழிப்புணர்வோடு தான் செய்ய வேண்டும். வேறு வழியேயில்லை.



### சத்குரு வாசுதேவ்

எல்லோருமே சிலவற்றை தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விழிப்புணர்வில்லாமல் செய்கிற தேர்வுகள் நிர்பந்தங்களாக மாறுகின்றன. இப்போது நீங்கள் கோபப்படுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். கோபமாக இருப்பது என்று நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள். இந்த சூழலைக் கையாள இதுதான் வழி என்று நினைக்கிறீர்கள். ஆனால் நீங்கள் விழிப்புணர்வில்லாமல் முடிவு செய்திருப்பதால் அதுவே நிர்பந்தமாக மாறுகிறது. எனவே நீங்கள் தேர்ந்தெடுத்து வாழ்கிறீர்கள். விழிப்புணர்வுகள் இல்லாத தேர்வுகள் நிர்பந்தங்களாக மாறுகின்றன.

இவற்றை விழிப்புணர்வு மிக்க தேர்வாக மாற்றுவது தான் அடுத்த நிலை. காலை விழித்தெழுவது என்கிற சின்னச் செயல் கூட விழிப்புணர்வில்லாமல் எடுக்கிற முடிவு. என்னவென்றால் விழிக்க வேண்டாம் என்பது தான். சூரியன் உதிக்கிறபோது உங்கள் போர்வையை இழுத்து உங்கள் முகத்தை மூடிப் போர்த்திக்கொண்டு தூங்க முற்படுகிறீர்கள். இது விழிப்புணர்வு இல்லாமலேயே நீங்கள் செய்கிற தேர்வு. இந்த உடல் எத்தனையோ காரணங்களுக்காக எழ விரும்பவில்லை. இன்னும் கொஞ்சநேரம், இன்னும் கொஞ்ச நேரம் படுத்திருக்கலாம் என்று நினைக்கிறது.

வாழ்வின் பல அம்சங்கள், வாழ்வின் பல குறுகிய அனுபவங்களின் விளைவுகள் எல்லாம் உங்களையும் அறியாமல் உங்களுக்கு பல தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஒரு நாளின் விடியல் உங்கள் எதிர்பார்ப்பில் இல்லை. மறுநாள் நீங்கள் உல்லாசப்பயணத்திற்குப் போக திட்டமிட்டு இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். சூரியன் உதிக்கும் முன்னே எழுந்து விடுகிறீர்கள். ஏனென்றால் முதல் நாளே விழிப்புணர்வோடு நீங்கள் முடிவு செய்திருக்கிறீர்கள். அடுத்த நாளை நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இது மகிழ்ச்சியான அனுபவம். அதனால் சூரியன் உதிக்கும் முன்பே எழுகிறீர்கள். இல்லையென்றால் இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கப் போயிருப்பீர்கள். நீங்கள் ஏன் அடுத்த நாளை எதிர்கொள்ள விரும்பாமல் இருக்கிறீர்கள் என்றால் மறுநாள் பங்குச் சந்தைகளின் முடிவுகள் வரும், அந்த நாளினுடய சிக்கல்கள் வரும். வெளிச்சம் வருகிறபோது இந்த முழு உலகமே உங்கள் வாழ்க்கைக்குள் வருகிறது. எனவே, உங்களை அதிலிருந்து தடுத்து காப்பாற்றிக் கொள்ள நினைக்கிறீர்கள். ஆனால் இப்போது நீங்கள் விழிப்புணர்வோடு முடிவெடுக்க வேண்டும். விழித்தபிறகு கூட விழிப்புணர்வில்லாமல் நீங்கள் எடுக்கிற முதல் தீர்மானம் ஒரு கோப்பை காபி அருந்துவது. அது உடம்புக்கு வசதியாக இருக்கிறது. ஆனால் நீங்கள் விழிப்புணர்வோடு எடுக்க வேண்டிய முடிவு என்ன? தண்ணீரில் குளித்துவிட்டு யோகாசனம் செய்வேன் என்பது.

ஆன்மீகத்தில் இதுபோன்ற ஒழுக்கநெறிகள் உருவாக்கப்பட்டதன் அடிப்படையே இதுதான். இயல்பாக எது வசதியோ அப்படிப்பட்ட நாளைத் தொடங்க முற்படுகிறீர்கள். உங்களுக்கு வசதியில்லாத உணர்வோடு ஒருநாளை நீங்கள் தொடங்குவீர்களேயானால் அது உங்களுக்குப் பிடிப்பதில்லை. பிடிக்காத ஒன்றை செய்ய வேண்டுமென்றால் விழிப்புணர்வோடு தான் செய்ய வேண்டும். பிடித்த விஷயங்களை உங்களை அறியாமலேயே செய்து கொண்டிருப்பீர்கள். அதற்குத்தான் சில ஆன்மீகப் பாதைகள் உங்களுக்கு வகுக்கப்பட்டன. விழிப்புணர்வோடு எதையும் செய்யத் தொடங்குகிறீர்கள். வேறு வழியேயில்லை.

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www.ishafoundation.org
www.ishayoga.org

இப்போது மெல்ல மெல்ல வாழ்வில் வெவ்வேறு சூழ்நிலைகளை எப்படி விழிப்புணர்வோடு கையாள்வது என்று நீங்கள் பயின்று கொண்டிருக்கிறீர்கள். பசி எடுக்கிறபோது சாப்பிடுவது என்பது இயல்பான உந்தல். எனக்கு பசிக்கிறது. இப்போது நான் சாப்பிடப் போவதில்லை என்று விழிப்புணர்வோடு முடிவெடுக்கிறீர்கள். உணவிலிருந்து விலகி இருப்பவர்களுக்கு விழிப்புணர்வோடு முடிவெடுத்தால் தான் முடியும். பசித்தவுடன் போய் சாப்பிடுவதற்கு பெரிய விழிப்புணர்வு தேவயில்லை. பசி வந்த போது அவசர அவசரமாக உணவை அள்ளி விழுங்கி விட முடியும். இந்த எளிய விஷயத்தைக் கற்றுத் தருவதன் நோக்கமே, வாழ்க்கையில் செயல்களை இன்னும் விழிப்புணர்வோடு செய்யத் தொடங்குவீர்கள் என்பதற்காகத்தான். உதாரணத்திற்கு நாங்கள் ஒருநாளைக்கு இரண்டுமுறை தான் உணவு சாப்பிடுகின்றோம். சிலசமயங்களில் ஒருவேளையாகக் கூட இருக்கும். உணவு நேரம் வந்தவுடன் நீங்கள் பசியோடு இருப்பது இயற்கை. ஆனால் உடன-டியாக யாரும் சாப்பிடுவதில்லை. எல்லோரும் வந்து அமர்வதற்காக காத்திருக்கிறீர்கள். ஒவ்வொருவரின் தட்டிலும் உணவு நிரம்பக் காத்திருக்கிறீர்கள். பிறகு ஒரு பிரார்த்தனை சொல்லிவிட்டு மெல்ல சாப்பிடத் தொடங்குகிறீர்கள். இதற்கு விழிப்புணர்வு வேண்டும். பசியிருக்கிறபோது மூன்று, நான்கு நிமிடங்களுக்கு பொறுத்திருப்பதற்கு ஒரு மனிதருக்கு அளவுகடந்த விழிப்புணர்வு வேண்டும்.

எனவே இப்படி உங்கள் வாழ்வில் பல்வேறு அம்சங்களுக்குள் நம் விழிப்புணர்வு விழித்துக் கொண்டிருக்கும். ஆரம்பகாலத்தில் இந்த விழிப்புணர்வு அரைமணி நேரம் மட்டும் இருந்திருக்கக்கூடும். ஆனால் மெல்ல மெல்ல வாழ்வின் மற்ற அம்சங்களிலும் விழிப்புணர்வைக் கொண்டுவருகிறோம். விழிப்புணர்வை இப்படி உருவாக்குவதன் நோக்கமே இது உங்கள் வாழ்க்கையோடு ஊடுருவ வேண்டும் என்பதற்காகத்தான். ஒருவிதத்தில் விழிப்புணர்வை வளர்த்துக் கொள்கிறீர்கள், இன்னொரு விதத்தில் உங்கள் வாழ்க்கையின் தரத்தை உயர்த்திக் கொள்கிறீர்கள். ஆனால் அதற்காக மட்டும் இது செய்யப்படுவதில்லை. வாழ்வின் வெவ்வேறு சூழ்நிலையில் நீங்கள் விழிப்புணர்வோடு இருக்க முடியும் என்று சொன்னால் அப்போதான் இந்த உடலை விட்டு உங்கள் உயிர் விடைபெறுகிறபோதும் நீங்கள் விழிப்புணர்வோடு இருக்கமுடியும். இல்லையென்றால் அதற்கான வாய்ப்பு உங்கள் வாழ்வில் ஏற்பட வழியேயில்லை.

யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

YARL
WINDOW BLINDS & DRAPERY
Since 1991
Tel.: 416-806-5397
905-201-7733
Call for Free Estimates
We have experience to make your home more beautiful...
VENETIAN/VERTICAL
ROLLER/WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
We are specialized in
Custom Made
Drapery & Blinds
Call :
N.SELVAM





விற்பனையாகின்றன!
கனி விமலநாதனின்
மூன்று நாவல்கள்

❶ வேற்றுக்கிரக மனிதர்கள்

யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்?
அவர்களின் பின்னணி என்ன?
வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா?
வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

❷ பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்

எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது? தோன்றியபோது எப்படி இருந்தது?
எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது?
பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?

❸ இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்

பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா? அவை எங்கிருந்து வருகின்றன?
பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்
கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை
GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch



# கியுபெக் பாலமும் இரும்பு மோதிரமும்

கியுபெக் நகரத்தில் சென். லோரன்ஸ் நதிக்கு மேலாக பெருந்தெரு 175 இல் அமைந்திருக்கும் கியுபெக் பாலத்துக்கும் இரும்பு மோதிரத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. 1800 ஆம் ஆண்டு பிற்பகுதிகளில் கியுபெக் நகரத்தின் தெற்கு பகுதியில் அமைந்து இருக்கும் லிவிஸ் நகருக்கும், கியுபெக் நகரத்துக்கும் இருந்த ஒரே ஒரு தொடர்பு கடல் வழிப் பாதையாகும். இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு, 1904 ஆம் ஆண்டளவில் இப்பாலம் அமைக்கும் பணி ஆரம்பமானது. இந்தப் பாலத்தின் நடுப்பகுதியானது, நதியின் இருபக்கத்திலும் இருந்து அமைக்கப்பட்ட இரும்பு தீராந்திக-ளினால் (Girders) உருவமைக்கப்பட்ட தூண்களில் இருந்து நீட்டப்பட்ட பாலத்தின் மற்ற இரண்டு பகுதிகளின்மேல் தூக்கி வைக்கப்பட்டிருப்பதால் இது தூக்குப்பாலம் (Cantilever Bridge) என்று அழைக்கப்படும்.

3125 அடி நீளமான இப்பாலத்தின் நடுப்பகுதியானது 1800 அடி நீளம் கொண்டது. உலகத்திலே அதிநீண்ட தூக்குப்பாலம் என்ற பெருமையையும் கொண்டது. 1903 ஆம் ஆண்டளவில் இந்தப்பாலத்தின் திட்டப்பணிகள் போனிக்ஸ் பாலம் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டது. இதற்குரிய திட்டமேற்பார்வை பணிகள் நியுயோர்க்கை சேர்ந்த பிரசித்திபெற்ற கட்டிட பொறியியலாளர் தியோடோர் கூப்பரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பாலத்தின் அமைப்பு முறையானது சில தேவைகளை பூர்த்தி செய்யவேண்டியிருந்தது. பாலம் அமைக்கப்படும் இடத்தில், கப்பல் போக்குவரத்து இருப்பதால் அது நீர் மட்டத்துக்கு மேல் 150 அடி உயரத்தில் அமைக்கப்படவேண்டும். அத்துடன் ரயில் மற்றும் வாகன போக்குவரத்துக்கு ஏற்றதாக அதன் அகலம் 67 அடி கொண்டதாக இருக்க வேண்டும்.

1903 ஆம் ஆண்டு ஆரம்ப வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு, சில மாற்றங்களுடன் கூப்பரினால் உறுதி செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் பாலத்தின் கட்டுமானத்துக்கு தேவையான இரும்பு தீராந்திகளின் நிறை கணிக்கப்பட்டது. 1904 ஆம் ஆண்டு நிர்மானத்துக்கான இறுதி வரைபடம் தயாரிக்கப்பட்டு, கட்டுமானப்பணியும் ஆரம்பமானது. அனுமதிக்காக அனுப்பப்பட்ட இந்த இறுதி வரைபடங்கள் எட்டு மாதங்களுக்கு பின்புதான் கூப்பரின் கைகளுக்கு சென்றடைந்தன. இதேவேளையில் கட்டுமானப் பணிகள் தொடர்ந்தன. கூப்பரின் கைகளுக்கு இறுதி வரைபடம் கிடைத்தபோதுதான், பாலத்துக்கு தேவையான இரும்பின் நிறை 8 மில்லியன் இறாத்தலால் குறைந்திருந்ததை கண்டு பிடிக்க முடிந்தது. இத்தருணத்தில் கூப்பர் ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். ஒன்றில் தற்போதைய வரைபடங்களை நிராகரித்து விட்டு, முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் அல்லது வருவது வரட்டும் என்று முடிவை எடுத்து, கட்டுமானப்பணிகளை தொடரவேண்டும். கூப்பர்



அந்த அபாயகரமான இரண்டாவது முடிவை எடுத்தார். அவரின் இந்த முடிவுக்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டன. உலகத்திலேயே மிகப்பிரசித்தி பெற்ற தூக்குப்பாலத்தை திட்டமிட்ட பொறியியலாளர் என்ற புகழை தான்தான் பெறவேண்டும் என்பதுதான் முதல் காரணமாக அமைந்தது. முடிக்குரிய இளவரசர் வேல்ஸ் அவர்களால் இப்பாலமானது 1908 ஆம் ஆண்டளவில் திறந்து வைக்கப்பட இருந்ததால், கட்டுமானப் பணிகளை தாமதிப்பதும் இதற்கு தடங்கலாக அமையலாம் என்பதும் இன்னுமொரு காரணமாக அமைந்தது.



கூப்பரின் அந்த முடிவானது ஒரு பெரிய துன்பியல் நிகழ்வுக்கு அடித்தளமாக அமைந்தது.

1907 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்த பொறியியலாளரால் இரண்டு இரும்பு தீராந்திகள் கால் அங்குலத்தால் விலகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கூப்பரினால் அவை ஒரு ஆபத்தான பிரச்சனை அல்ல என்று அறிவிக்கப்பட்டது. 1907 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி, இன்னுமொரு பொறியியலாளர் குழுவால் இரும்பு சட்டங்கள் சில அங்குலங்களால் விலகி இருப்பதும், தீராந்திகள் வளைந்து இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது, பிரச்சனை அபாயகரமாக இருப்பதை உணர்ந்த அவர்கள் உடனடியாக பொறியியலாளர் குழுவை நியுயோர்க் நகருக்கு அனுப்பி கூப்பரை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. வேலைத்தளத்தில் தொலைபேசி வசதி இருந்தும், உரையாடலை மற்றவர்கள் கிரகிப்பது தவிர்க்க முடியாமையால், கூப்பருடன் தொலைபேசியில் கலந்து ஆலோசிப்பது தவிர்க்கப்பட்டது.

அடுத்தநாள் காலை, குழு நியுயோர்க் நகருக்கு புறப்பட்ட கையுடன், சிரேஸ்ட பொறி யியலாளரால் பணிகள் மீண்டும் ஆரம்பமானது. நிலைமை மோசமாக இருக்கும் போது ஏன் மீண்டும் தொடங்கப்பட்டது என்று கேள்விக்கு, நான் இரவு ஒரு கனவு கண்டேன் அதில் வளைந்த தீராந்திகள் அவ்வளவு பிரச்சனையான விடயமல்லவென்று எனக்கு உரைக்கப்பட்டது என்று பதில் கொடுக்கப்பட்டது.

1907 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் திகதி மாலை 5 மணியளவில் அந்த துக்ககரமான சம்பவம் நிகழ்ந்தது. பாலத்தின் தெற்குப் பகுதியின், மத்திய பகுதி பாரிய சத்தத்துடன் உடைந்து சென். லோரன்ஸ் நதியில் விழ்ந்தது. பாலத்தில் வேலைசெய்து கொண்டிருந்த 75 உயிர்களையும் காவு கொண்டது.

இப்பாலத்தின் திட்ட வரைவுகள் மீள் பரிசீலனை செய்யப் பட்டு கட்டுமானப் பணிகள் மீண்டும் ஆரம்பமானது. 1916 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி பாலத்தின் மத்திய பகுதி, மேலே உயர்த்தப் பட்டு அதற்குரிய இடத்தில் பொருத்த முனைந்த வேளை யில் அது நதியில் வீழ்ந்து மேலும் 11 உயிர்களை பலி-கொண்டது. இப்படி பல பின்னடைவு களை எதிர்கொண்ட கியுபெக் பாலமானது இரண்டு சகாப்த கட்டுமானப்பணிகளின் பின் 1917 ஆம் ஆண்டு பாவனைக்கு திறந்து விடப்பட்டது. இப்பாலமானது இன்றும் உலக வரலாற்றிலே நீண்ட தூக்குப்பாலமாக (cantilever bridge) கருதப்படுகிறது. 1916 ஆம் ஆண்டு, இதற்கு அருகாமையில் இன்னுமொரு தொங்குபாலம் அமைக்கப்பட்டு பெருந்தெரு 73 போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டது.

இந்த கியுபெக் பாலத்தின் நிகழ்வானது, கனடா வில் மட்டுமல்ல பலநாடுகளிலும், பொறியியல் துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த பேரவலத்துக்கு மூலகாரணமாக கருதப்படுவது, கூப்பருக்கு கொடுக்கப்பட்டிருந்த அபரிமிதமான அதிகாரமும், அவர் தனது கடமையை சரிவர செய்யாமையுமே ஆகும்.

இதன்காரணமாக 1922 ஆம் ஆண்டு மொன்றியலை சேர்ந்த பொறியியலாளர்கள் குழு ஒன்றுகூடி, விவாதித்து ஏழு காவலர்களின் பாசறை என்ற ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். பொறியியலாளர்கள் சமுதாய அமைப்பின்மீது கொண்டுள்ள பாரிய பொறுப்பை அவர்களுக்கு உணர்த்தி அவர்கள் தங்கள் கடமையை சரிவர செய்யவேண்டும் என்பதை அறிவுறுத்த இந்த அமைப்பை உருவாக்கினார்கள். இதன் மூலமாக உறுதிமொழி எடுக்கும் சடங்கை (Iron Ring Ceremony) நடத்துகிறார்கள். இந்த சடங்கில் பங்குகொள்ளும் இளம் பொறியியலாளர்கள் சத்தியபிரமாணம் எடுத்தபின் அவர்களின் (எழுதும் கையின்) சின்ன விரலில் இரும்பு மோதிரம் அணியப்படுகிறது. அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்களையும் அதனால் கிடைக்கும் அதிகாரத்தை சரிவர பயன்படுத்த வேண்டும் என்பதை எப்போதும் அறிவுறுத்தவே இரும்பு மோதிரம் அணியப்படுகிறது.

கனடாவிலுள்ள பல்கலைகழகங்களில் பொறியியல் பயிலும் மாணவர்களுக்கு மூன்றாம் அல்லது நான்காம் ஆண்டின்போது இரும்பு மோதிரம் அணியும் சடங்கு ஏழு காவலர்களின் பாசறை அமைப்பால் நடத்தப்படுகிறது. அதேதினத்தில், வெளிநாட்டில் பயின்று இங்கு பொறியியல் வல்லுனராக (Professional Engineer - P.Eng.) கடமை புரிவோருக்கும் இச்சடங்கு நடத்தப்படுகிறது. இச்சடங்கில் பாவிக்கப்படும் சில பொருட்கள், உடைந்து போன பாலத்திலிருந்து கொண்டுவரப்பட்டவை. இதன் காரணமாகவோ என்னவோ, சடங்கில் அணியப்படும் இரும்பு மோதிரமும் உடைந்த பாலத்திலிருந்து பெறப்பட்ட இரும்பு சட்டங்களிலிருந்து செய்யப்பட்டவை என்ற கதைகளும் இருக்கத்தான் செய்கிறன. ஆனால் ஆரம்பகாலத்தில் செய்யப்பட்ட மோதிரங்கள், ரொறொன்ரோ வைத்தியசாலையில் சேர்ந்த இளைப்பாறிய இராணுவ வீரர்களால் உருவமைக்கப்பட்டன என்பதே உண்மை. பிற்காலத்தில் இரும்பு மோதிரம் விரலின் நிறத்தை கருமையாக்குவதையும், அது வியர்வையுடன் தாக்கமடைந்து விரலை விட்டு இழகி போவதையும் கண்டு, உருக்கு கம்பிகளிலும் மோதிரங்கள் உருவாக்கப்பட்டன. இன்றும் பொறியியலாளர் சமூகத்தில் தங்களை இனம்கண்டுகொள்ளும் ஒரு கருவியாக இம்மோதிரத்தை பெருமையாக அணிவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.

இப்பொழுது பாலத்துக்கும் இரும்பு மோதிரத்துக்கும் உள்ள முடிச்சு உங்களுக்கு புரிந்து இருக்கும் என்று நம்புகிறேன். அதற்காக அருகில் உள்ளவரின் சின்னி விரலில் இருக்கும் மோதிரத்தை பார்த்து விட்டு இதுதானா அந்த மோதிரமென்று உங்களை அறியாமல் தலையை ஆட்டவேண்டாம். ஏனெனில் அவர் அணிந்து இருப்பது ஒரு வெள்ளி மோதிரமாக கூட இருக்கலாம்.

அ. அன்ரனி மனோகரன்
vlambaram@sympatico.ca

S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்
மக்கள் சேவை சதாசிவ சேவை

மூத்தோருக்கான சேவைகள்
- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச்செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

முதல் சேவைகள்
> All Mortgage / Refinance > Line of Credits
> Personal Business Loan > Bankruptcy
> All kind of Insurances > Accident Claims

சதாசிவா - 416.454.2810
ASATHN@hotmail.com

Telemarketers wanted In Mississauga area

Telemarketers wanted In Mississauga area.
Minimum 6 months experience & Fluency in Tamil and English is must.
Forward your resume to below address or Call



Ramenjit- 416.366.6767
Visionlife Inc.
Unit 102, 1090 Dundas Street. East, Mississauga, ON l4Y 2B8

# விளையாட்டுத் தகவல்கள் 271

## சச்சினின் அபார இன்னிங்ஸ் வீண் இந்தியா தோல்வி

ஹைதராபாதில் நடைபெற்ற 5-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சச்சின் டெண்டுல்கரின் அபாரமான 140 பந்து 175 ரன்கள் இன்னிங்ஸ் விரயமானது. இந்தியா 347 ரன்கள் எடுத்து 3 ரன்களில் தோல்வியைத் தழுவியது. தோனி ஆட்டமிழந்தவுடன் 162 - 4 என்று இருந்த இந்திய அணி, தோல்வியை நோக்கி சரியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ரெய்னாவும், சச்சினும் 19 ஓவர்களில் 133 ரன்களை விளாச ஸ்கோர் 42.3 ஓவர்களில் 299 ரன்களை எட்டியது. அப்போது 45 பந்துகளில் 51 ரன்களே தேவை என்ற நிலையிலும், சச்சின் டெண்டுல்கர் தனது வாழ் நாளின் சிறந்த ஒரு நாள் போட்டி இன்னிங்ஸை விளையாடி வருகிறார் என்று தெரிந்தும் ரெய்னாவின் இள ரத்த கொதித்து தேவையில்லாத ஷாட்டை ஆடி ஆட்டமிழக்க நேர்ந்தது.

சிங்கிள் எடுத்து விக்கெட்டை பாதுகாக்க வேண்டிய நேரத்தில் ஷேன் வாட்சனின் பந்தை ஏதோ ஒரு புரியாத ஷாட்டை ஆடி ஆட்டமிழந்தார் ரெய்னா. 59 பந்துகளில் 3 அபார பவுண்டரிகளையும், 3 மிகப்பெரிய சிக்சர்களையும் அடித்து 59 ரன்களில் ரெய்னா ஆட்டமிழந்தார். அதே ஓவரின் கடைசி பந்தில் ஹர்பஜன் சிங்கும் ஆட்டமிழந்தார். இந்தியா 300-6 என்று இருந்தது. அதன் பிறகும் டெண்டுல்கர் தொடர்ந்து சிறப்பாக ஆட, ஜடேஜா 3 பவுண்டரிகளை அடித்து 23 ரன்களை எடுக்க இருவரும் இணைந்து 4 ஓவர்களில் 32 ரன்களை எடுத்தனர்.

3 ஓவர்களில் வெற்றி பெற 19 ரன்கள் இருக்கும்போது பவர் பிளேயும் உள்ளது. ஆனால் டெண்டுல்கர் ஆ∴ப் ஸ்டம்பில் நகர்ந்து கோன்டு ∴பைன் லெக் திசையில் உள்ள ∴பீல்டர் தலைக்கு மேல் பவுண்டரி அடிக்க முயன்றார். ஆனால் மெக்காய் அந்த பந்தை சற்றே மெதுவாக வீச அது கேட்சாக அமைந்தது.

சச்சின் டெண்டுல்கர் உண்மையில் இன்று ஆஸ்ட்ரேலியர்களின் வயிற்றில் மோட்டர் ஓட வைத்த இன்னிங்ஸை விளையாடினார். அவரது ஒரு நாள் கிரிக்கெட் வாழ்வில் ஆடிய மிகச்சிறந்த இன்னிங்ஸ் இது என்றால் மிகையாகாது.

81 பந்துகளில் சதம் எடுத்த டெண்டுல்கர், அதற்கு அடுத்த 59 பந்துகளில் 74 ரன்களை மேலும் சேர்த்தார். 141 பந்துகளில் 19 பவுண்டரிகள் 4 சிக்சர்கள் என்று அவர் 175 ரன்களைச் சேர்த்து துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்தது இன்று இந்தியாவின் வெற்றியை பறித்தது. ஆனால் இந்த இன்னிங்ஸ் தோல்வியில் முடிந்தது குறித்து அவர் மிகவும் வருத்தப்படுவார் என்பது உறுதி.

ரவிந்தர் ஜடேஜா, பிரவீண் குமார் இறங்கியவுடன், பிரவீண் குமாருக்கு ஏதோ விளையாடத் தெரியாது போல் ஒரு ரன் எடுக்க முயன்றார். கவர் திசையில் நேராக பந்து செல்கிறது. ஆனால் ஜடேஜா அதற்கு அரை கிரவுண்ட் தாண்டி ஓடி தன் விக்கெட்டை தானம் செய்தார். இதனால்தான் தோல்வி ஏற்பட்டது.
ஆனால் அவர் ஆட்டமிழந்த பிறகும் கூட டக் போலிஞர் பந்தை பிரவீண் குமார் எக்ஸ்ட்ரா கவர் திசையில் மிகப்பெரிய சிக்சருக்கு தூக்கினார்.

கடைசி ஓவரில் 8 ரன் தேவைப்பட்டபோது இந்தியா 4 ரன்களே எடுக்க முடிந்தது. கடைசியிலும் பிரவீண் குமார் எக்ஸ்ட்ரா கவர் திசையில் ஓங்கி அடிக்க பந்து நேராக ∴பீல்டரிடம் சென்றது. ஆனால் இரண்டாவது ரன்னை எடுக்க பிரவீண் குமார் ஓடினார். ஆனால் டைவ் அடித்து ரீச் செய்திருந்தால் பிழைத்திருப்பார். அதனால் நெருக்கமாக ரன் அவுட் ஆனார். இந்தியா தோல்வி தழுவியது. அனைவரின் முகமும் தொங்கியது. இந்திய வீரர்கள் முகமும் தொங்கியது. ஆட்ட நாயகனாக சச்சின் டெண்டுல்கர் தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு மோட்டர் சைக்கிள் பரிசாக வழங்கப்பட்டது. ஆனால் அவர் சொரத்தில்லாமல் மிகுந்த ஏமாற்றத்துடன் காணப்பட்டார். அவர் பேசும்போதும் வெற்றி பெற முடியாமல் போன ஏமாற்றத்தை தெரிவித்தார். கம்பீர், தோனி, யுவ்ராஜ் ரன்கள் அடிக்காததும், ரெய்னாவின் அவசரக்குடுக்கை ஷாட்டும், ரவிந்தர் ஜடேஜாவின் பள்ளிச் சிறுவன் போன்ற ஓட்டமும் இந்திய அணியை சச்சினின் மகா இன்னிங்ஸிற்கு இடையிலும் தோல்விக்கு அழைத்து சென்றுள்ளது. ஆனால் ஆஸ்ட்ரேலிய அணியிடம் நாம் ஒன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். எப்போதும் அவர்கள் ஆட்டத்திலேயே கவனத்தை வைத்திருக்கின்றனர். அதனால்தான் அழுத்தமான நேரங்களில்கூட அவர்களால் அபாரமான கேட்ச்களையும், ∴பீல்டிங்கையும் செய்ய முடிகிறது.

இன்றும் கடைசி ரன் அவுட். கமீருக்கு எடுத்த கேட்ச், ஷேன் வாட்சன் நெருக்கடியிலும் 3 விக்கெட்டுகளை முக்கியமான தருணத்தில் சிக்கனமாக வீசி கைப்பற்றியது. அபாரமான ∴பீல்டிங் என்று ஆஸ்ட்ரேலியா எப்போதும் ஒரு அணியாக போராடுகிறது. இந்திய அணி எவ்வளவுதான் நெருக்கமாக வந்து தோற்றது என்று நாம் வருந்தினாலும் மகிழ்ந்தாலும், இந்த அணியாக திரண்டு ஆடுவதில் கவனம் இருப்பதில்லை. அதனால்தான் இன்று 4 கேட்ச்கள் கோட்டை விடப்பட்டன. மிஸ் ∴பீல்டிங்குகள் செய்யப்படுகின்றன. பந்து வீச்சாளர்கள் இவ்வளவு ரன்களை கவலை யில்லாமல் கொடுக்கின்றனர். இந்த விஷயங் களில் முன்னேற்றம் இல்லாமல் இது போன்று சச்சின் டெண்டுல்கரின் மகா பிரமாத ஆட்டமும் வெற்றியின்றி விரயமாகவே போய் முடியும்.

## ஆஸ்ட்ரேலியா தொடரை வென்றது

குவஹாத்தியில் நடைபெற்ற 6-வது ஒரு நாள் போட்டியில் இந்தியா நிர்ணயித்த 171 ரன்கள் இலக்கை ஆஸ்ட்ரேலியா 41.5 ஓவர்களில் எட்டி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரை 4 - 2 என்று கைப்பற்றியது. 171 ரன்கள் இலக்கை எதிர்த்து துவக்க வீரர்கள் ஷேன் வாட்சனும், ஷான் மாரஷ்ும் நிதானமாக துவங்கினர். நெஹ்ராவும், பிரவீண் குமாரும் ஓவரின் கடைசி பந்துகளில் பவுண்டரி கொடுத்தனர். முனா∴ப் படேல் பந்து வீச அழைக்கப்பட்டவுடன் ஷான் மாரஷ் 6 ரன்களில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.

அதன் பிறகு பான்டிங்கும், ஷேன் வாட்சனும் இயல்பான முறையில் பவுண்டரி பந்துகளை பவுண்டரிக்கு அடித்து இன்னிங்ஸை மெதுவே முன்னெடுத்துச் சென்றனர். ஷேன் வாட்சன் 49 பந்துகளில் 49 ரன்களை 10 பவுண்டரிகளுடன் எடுத்தார். நெஹ்ரா பந்து வீச்சிற்கு சாதகமான ஆட்டக்களத்தில் ஷாட் பிட்ச் பந்துகளையும் ஓவர் பிட்ச் பந்துகளையும் மாறி மாறி வீசி 3 ஓவர்களில் 21 ரன்களை கொடுத்தார். இதனால் தோனி அவரை அகற்றினார்.

ஹர்பஜன் சிங் பந்து வீச அழைக்கப்பட்டபோது ஸ்கோர் 85 ரன்களை எடுத்திருந்தது. ே்ன் வாட்சன் ஹர்பஜனின் திரும்பிய பந்தை மிட் விக்கெட் திசையில் ஸ்லாக் ஸ்வீப் செய்ய முயன்று மிட் ஆனில் நின்று கொண்டிருந்த சேவாகிற்கு எளிதான கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். அதன் பிறகு உடனேயே ஸ்கோர் 90 ரன்கள் இருந்த போது ஹர்பஜன் பந்தில் சிலி மிட் ஆன் திசையில் கேட்ச் கொடுத்து பாண்டிங் ஆட்டமிழந்தார்.

80-3 என்ற நிலையில் புதிதாக களமிறங்கும் பேட்ஸ்மென்களுக்கு நெருக்கடி கொடுக்காமல் ∴பீல்டை தள்ளி நிறுத்தி சுலபமான சிங்கிள்களை தோனி அனுமதித்தார். இதனால் விக்கெட் விழும் சுவடேயில்லாமல் ஸ்கோர் முன்னேறியது.

கேமரூன் ஒயிட் பவுண்டரியே இல்லாமல் 25 ரன்கள் எடுத்து ரெய்னா பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார். 143-4 என்ற நிலையிலிருந்து மைக் ஹஸ்ஸி (35 நாட் அவுட்), வோஜஸ் (23 நாட் அவுட் 4 பவுண்டரிகள்) ஆகியோர் எளிதில் வெற்றி இலக்கை எட்டினர். முடிவில் 41.5 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு ஆஸ்ட்ரேலியா வெற்றி பெற்று தொடரை 4 - 2 என்று கைப்பற்றியது. தோனியின் தவறான முடிவினால் இந்த தொடரை அவர் இழந்துள்ளார். மொஹாலியில் பேட் செய்ய வேண்டிய போட்டியில் ஆஸ்ட்ரேலியாவை பேட் செய்ய அழைத்தார். பந்து வீச வேண்டிய ஆட்டக்களத்தில் தவறாக பேட் செய்தார். மேலும் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு பந்துகள் திரும்பும் விக்கெட்டில் ∴பீல்ட் எப்படி அமைப்பது என்று யாராவது தோனிக்கு கற்று கொடுக்க முன் வர வேண்டும். பந்து வீச்சாளர்களை விடுத்து சேவாக், சச்சின், ரெய்னா என்று 9 பந்து வீச்சாளர்களை அவர் பயன்படுத்தியுள்ளார். இவர்களிடம் விக்கெட்டை கொடுத்து தோற்கும் அளவுக்கு ஆஸ்ட்ரேலியா பலவீனமான அணியல்ல.

இரண்டாவது முறையாக பாண்டிங் தலைமையில் இந்தியாவில் அந்த அணி ஒரு நாள் தொடரை கைப்பற்றியுள்ளது. முதல் முறை இந்தியா 20 - 20 உலக கோப்பையை வென்று வந்த பிறகு ஒரு நாள் தொடரை ஆஸ்ட்ரேலியா பாண்டிங் தலைமையில் 5 - 2 என்று வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக 5 விக்கெட்டுகளை வீழ்த்திய டக் போலிஞ்சர் தேர்வு செய்யப்பட்டார்.

## சுழற்பந்து வீச்சு - ஷேன் வார்ன் எச்சரிக்கை

உலகின் தலை சிறந்த சுழற்பந்து வீச்சாளரான ஷேன் வார்ன், சுழற்பந்து வீச்சு என்ற கலையை பயிற்சியாளர்களும், அணித் தலைவர்களும் புரிந்து கொள்ளவில்லை எனில் அந்தக் கலை விரைவில் அழிந்து விடும் என்று எச்சரித்துள்ளார்.

அடிலெய்டில் இது குறித்து அவர் நீண்ட உரையாற்றியுள்ளார். சுழற்பந்து வீச்சிற்கு சரியான கள வியூகம் அமைத்து கொடுக்கும் திறமையின்மை, ரன் இல்லாத பந்தை வீசியாகவேண்டும் என்பதன் மீது அணித்தலைவர்களுக்கு இருக்கும் பீடிப்பு ஆகியவை இந்தக் கலையை எதிர்நோக்கும் அச்சுறுத்தலாகும் என்று கூறியுள்ளார். இதனால் அடுத்த தலைமுறை சுழற்பந்து வீச்சாளர்களை சுழற் பந்து வீச்சு என்பது ஒரு ஆயுதம் என்று கூறி வளர்த்தெடுக்க விரும்புவதாக கூறியுள்ளார்.

"தற்போது ஆஸ்ட்ரேலியாவில் உள்நாட்டு கிரிக்கெட் மட்டத்தில் சுழற்பந்து வீச்சிற்கு நல்ல ∴பீல்டிங் அமைத்துக் கொடுத்து அதனை ஒரு ஆயுதமாக பயன்படுத்தும் கேப்டன்கள் இல்லை என்பதுதான் தற்போது ஆஸ்ட்ரேலியாவில் உள்ள பிரச்சனை. இதனால் ஆஸ்ட்ரேலிய கிரிக்கெட் வாரியத்தின் சுழற்பந்து வீச்சு ஆலோசகராக பொறுப்பேற்றுள்ள நான் அனைத்து மாநில கிரிக்கெட் அணி கேப்டன்களையும் சந்தித்து சுழற்பந்து வீச்சிற்கு களம் அமைப்பது குறித்து விவாதிக்கப் போகிறேன்.

"எங்களிடம் சில நல்ல சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். ஆனால் சிக்கனமாக வீசுவது என்பது தற்போது அதிக கவனம் பெறுகிறது. 20 ஓவர்களை சுழற்பந்து வீச்சாளர் வீசினால் 50 ரன்கள் கொடுத்து ஒரு விக்கெட் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். ஆனால் என்னைக்கேட்டால் 100 ரன்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றுவதுதான் சிறந்தது என்று கருதுகிறேன். எனவே தற்போது ஸ்பின்னர் ரன்கள் கொடுக்கக்கூடாது என்று கவனம் செலுத்தப்படுகிறது. இதனால் விக்கெட் எடுக்கும் ஸ்பின்னர்களாக யாரும் உருவாவதில்லை. கடந்த சில மாதங்களாக 4 அல்லது 5 சுழற்பந்து வீச்சாளர்களை ஆஸ்ட்ரேலிய தேர்வு குழுவினர் அணியில் தேர்வு செய்தனர். ஆனால் ஒருவர் கூட தங்களது திறமையை நிரூபிக்கவில்லை. இதனால் தேர்வாளர்களை குறைகூறிப் பயனில்லை. தேர்வுக் குழுவிற்கு பாதுகாப்பான ஸ்பின்னர் தேவையா அல்லது எதிர்தாக்குதல் தொடுக்கும் ஸ்பின்னர் தேவையா என்பதில் குழப்பம் நிலவுகிறது." இவ்வாறு கூறினார் ஷேன் வார்ன்.

## ஜெயசூரியாவின் கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக்குறி

ஜெயசூரியா இனிமேல் இலங்கை ஒரு நாள் கிரிக்கெட் தொடக்க வீரராக களமிறங்க மாட்டார் என்று இலங்கை அணித் தேர்வுக் குழு அறிவ-ித்துள்ளது. இந்தியாவிற்கு எதிரான தொடருக்கு பிறகு அவர் சிறப்பாக விளையாடினால் மட்டுமே அணித் தேர்வுக்கு பரிசீலிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கடந்த காலங்களில் சனத் ஜெயசூரியாவின் ஆட்டத்தால் இலங்கை அணி 3 போட்டிகளுக்கு ஒரு போட்டியை வென்றுள்ளது. ஆனால் சமீபமாக அது குறைந்துள்ளது. சாம்பியன் கோப்பை தொடரில் அவரது ஆட்டம் சரியாக அமைய வில்லை. இதனால் அவரை ஆல்-ரவுண்டர் என்ற முறையில் பின்னால் களமிறக்கத் திட்டமிட்டுள்ளோம்" என்று தேர்வுக் குழு தலைவர் அசந்தா டிமெல் தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை அணியில் ஜெயசூரியா இடம்பெறவேண்டுமென்றால், அவருக்கு கொடுக்கப்பட்ட இந்த புதிய பங்கை அவர் சிறப்புற செயல்படுத்தவேண்டும் என்று அசந்தா டிமெல் தெரிவித்துள்ளார். தற்போது பவர் பிளே என்பது 20 ஓவர்களாக அதிகரிக்கப்பட்டு, 5 ஓவரகளை பேட்டிங் அணி தேர்வு செய்யுமாறும், 5 ஓவர்களை பந்து வீசும் அணி தேர்வு செய்யுமாறும் மாற்றப்பட்டுள்ள நிலையில், சனத் ஜெயசூரியா பேட்டிங் பவர் பிளே தருணத்தில் விளையாடினால் நன்றாக இருக்கும் என்று இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக டிமெல் தெரிவித்தார். இதனால் சனத் ஜெயசூரியாவின் மேல் அழுத்தம் அதிகரித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


## பாகிஸ்தானை வீழ்த்தி நியூஸீலாந்து தொடரை வென்றது



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# மாறுகின்ற வாழ்விடம்
# LIVING ABOVE THE STORE NEXT GENERATION

காலம் மாறுகின்ற வேகத்துடன், வாழ்வின் ஒவ்வொரு அங்கங்களும் மாறிக் கொண்டே இருக்கின்றன. ஐரோப்பிய கண்டத்துடன் ஒப்பிடும் போது வடஅமெரிக்காவின் மாறும் வேகம் குறைவாகவே காணப்படுவதாக, பொதுவான குறைபாடு அல்லது குற்றச்சாட்டு. முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. கனடிய அரசு இதனை ஊக்குவிப்பதற்காக பலவிதமான ஊக்குவிப்புகளை நடைமுறைப் படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இதன் விழிப்புணர்வு அதிகரித்தே செல்லும் என்பது மிகத் தெளிவு. இதனால் அனேகமான கட்டிட,



இலத்திரனியல் (எலெக்றோனிக்) பொருட்களாக இருந்தாலும், வாகன உற்பத்தி முறைகளாக இருந்தாலும், நிலத்திற்கு கீழான போக்குவரத்து முறைகளாக இருந்தாலும் வட அமெரிக்கா, ஐரோப்பாவின் பல நாடுகளுடன் ஒப்பிடும்போது பின் தங்கியுள்ள நிலையிலேயே உள்ளதாக அறியப்படுகின்றது. இதன் அடுத்த கட்டமாக வீடு, மனை அமைப்பு முறைகளும் கூறப்படுகின்றது. ஐரோப்பாவில் குறிப்பாக ஜேர்மனியில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி வெப்பத்தை பெறும் முறை மிகவும் நேர்த்தியான தொழில்நுட்ப முறையில் கையாளப்படுகின்றது. அண்மைக்காலத்திலேயே கனடாவில் இந்த

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 308

வீடு கட்டுனர்கள் சூழலின் பாதுகாப்பு கருதி அதற்கேற்றவாறு பாவிக்கப்படும் பொருட்களும் புதிய தொழில்நுட்பங்களும் அறிமுகப்படுத்தப் படுகின்றன.

ரொறொன்ரோவிலும், ரொறொன்ரோ பெரும் பாகமாக (Greater Toronto Area (GTA) இருந்தாலும், இவற்றிலுள்ள ஒவ்வொரு மாநகர சபை, நகரசபைகள், உள்ளூராட்சி சபைகள் தமக்கேற்ப சில சட்டதிட்டங்களை உள்ளடக்கியுள்ளன. அதாவது ஒரு குறிப்பிட்ட பகுதிகளில், குறிப்பிட்ட வகையான கட்டிடத்தொகுதிகளே நிர்மாணம் செய்யலாம் என நிர்ணயித்துள்ளார்கள். அதாவது Zoning செய்து வைத்துள்ளார்கள். குறிப்பிட்ட பகுதியில் வீடு மட்டுமே கட்டலாம். சில பகுதியில் வியாபார நிலையங்கள் மட்டுமே கட்டமுடியும். வேறுசில இடங்களில் தொழில்கள் செய்யக்கூடிய கட்டிடங்கள், கடவுளை தரிசிக்கும் கட்டிடங்கள் போன்றவையே நிர்மாணிக்கலாம் என முடிவு செய்துள்ளார்கள். இதனை இப்பொழுது காணக்கூடியதாக உள்ளது. இதுவே பல ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது.

உதாரணத்தை கொண்டு விளக்குவது என்றால் Finch Ave. E. இற்கும் Steeles Ave. East இற்கும் Kennedy வீதிக்கும் Midland வீதிக்கும் இடைப்பட்ட பகுதி வியாபாரக்கட்டிடங்கள் கடவுளைத் தரிசிக்கும்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

1711 McCowan Rd.
#206, Toronto
Tel.: 416.321.6969

145 Traders Blvd
# 29, Mississauga
Tel.: 905.712.2666

## FOR SALE

Mccowan & Finch, 5 Bedroom Detached House for sale. Separate entrance to the basement. out side swimming pool. close to Woodside square.
Asking price only $449,900.





## CONDO. for Sale

- 480 Mclevin Ave - Sheppard / Neilson
- 2 Bedrooms - 2 Washrooms
- Open Balcony - Asking $159,900
- Close to schools and other amenities
- Ceramic Tile In Kitchen And Bathrooms.
- Gatehouse & State Of The Art Facilities.
- Close to all Amenities - Fridge, Stove, B/I-Dishwasher, Washer And Dryer, All Electrical Light Fixtures, All Window Coverings.

## Commercial/Retail Lease

- Markham/Steeles
- 3331 Markham Rd
- Great Location! Brand New Plaza Located At The High-Traffic
- Golden Opportunity To Start Your Own Business.
- Asking price $1,799 Gross Lease



## Townhouse Sold

- Morningside / Sheppard • 3-Storey
- 3 bedrooms • 3 washrooms
- Fridge, Stove, Washer, Dryer, Central Air, All Elf's And Window Coverings. Walking Distance To Ttc, Park, Shops, Easy Access To 401, Ttc & Go Station. • Price $319,900

## Party Rental Business for Sale

- Brimley/Progress
- Lots Of Rental Items Meant For Variety Of Functions/Occasions.
- Complete Training To Be Provided.
- Gross Rent $2800/Month Plus Utilities.
- Asking Price $99,000 Plus Stock

## Commercial/Retail for sale

- 9909 Highway 48 Rd. • Markham/Major Mac
- Total Area: 1,233 Sq Ft • Price $429,900
- Sought After Location In A High Visibility Strip Plaza. • Many Suitable Uses Including Restaurant/Retail & Services.

## Commercial/Retail for Lease

- 5215 Finch Ave E, Middlefield & Finch
- Rent $950 Gross Lease
- Lowest Rent To Afford Any Bussiness, Great Opportunity!
- Underground And Surface Parking

## Condo. for sale

- Finch / Middlefield
- 2 bedrooms • 1 washroom
- Fridge, Stove, Built-In-Dishwasher, Washer, All Existing Electric Light Fixtures And Window Coverings.
- Upgraded Appliances.
- Price $174,900




Nantha Aiyadurai
Cell: 613 850 9931

COLDWELL BANKER
COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# மாறுகின்ற...

இடம், Banquet Hall, Office Complex போன்றவை கட்டுவதற்கு அனுமதி கொடுத்தும் வாழ்வதற்கான வீடு, மனை அமைப்பதற்கு வழங்கவில்லை என்பதனை காணக்கூடியதாக உள்ளது. இதுவே பல ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது

இவ்வாறே சில குறிப்பிட்ட பகுதியில் வீடுகள் கட்டுவதற்கு மட்டுமே அனுமதிக்கப் பட்டுள்ளது. வேறுவிதமான வியாபாரக் கட்டிடங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட வில்லை. இருந்தும், சில சந்திகளில் மக்களின் வசதிகளைக் கருதி Neighbor hood Plaza போன்றவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் வாழும் முறையில் மாற்றம் ஏற்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இதுவே அடுத்த கட்டத்தை எதிர்வு கூறுவது போல் தோன்றுகின்றது.

எதிர்காலங்களில் உருவாக்கப்படும் கட்டிடத் தொகுதி Projects களில் (பொதுவான விற்பனை கடைகள் (Retail) வாழும் இடம் (Residential), அலுவலகங்கள் (Office Components) போன்றவைகளும், அத்துடன் பெரிய வியாபாரக் கட்டிடங்களும் (Example - The Home Depot) ஒன்றாக அமைந்து வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு உதாரணமாக Vancouver பகுதியில் பெரிய Home Depot கட்டிடப்பகுதிக்கு மேலாக அடுக்கு மாடிக்கட்டிடம் கட்டப்பட்டு, அந்த மனைகளில் மக்கள் வாழத் தொடங்கி யுள்ளார்கள். வேறு ஒரு உதாரணமாக, ஒரு அடுக்குமாடிக் கட்டிடத்தின் முதல் இரண்டு அடுக்குகளில், Grocery Store, Winners, kid, Sushi Restaurant, A Cellphone கடை, Starbucks கடைகள் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு எல்லாம் கலந்த கட்டிடத் தொகுதிகள் (Mixed used Projects) வெளிவரத் தொடங்கியுள்ளன.

இதனால் ஏற்கனவே ரொறொன்ரோ பெரும்பாகத்தில் குறிப்பிட்ட பகுதிகள் குறிப்பிட்ட வகை தேவைகளிற்காகவே பாவிக்க கூடியதாக இருந்த நிலங்கள். இவ்வாறான Mixed - Used தேவைகளிற்காக மாற்றப்பட்டால் ஆச்சரியப்பட வேண்டிய அவசியம் கிடையாது. இந்நிலைமை மிகவிரைவில் குறிப்பாக ரொறொன்ரோ பகுதியில் ஏற்படும் என்பதனை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கலாம்.

எதிர்காலத்தில் பெரிய பெரிய கடைத்தொகுதிகள் முதல் இரண்டு அடுக்குகளிலும், அதற்கு மேலாக Townhomes களும், அதற்கு மேலாக Condominium Units களும், அதற்கு மேலாக பச்சை பசேலான தோட்டங்களும் கட்டப்படலாம். இதுவே நியதியாகவும் வரக்கூடும். இவற்றை சில நகரசபைகள் ஊக்குவித்தும் வருகின்றன. இவ்வாறான Mixed Used Project ஒரு புதிய அணுகுமுறை ஆகும். இப்புதிய அணுகுமுறை நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.



இதற்கு முக்கிய காரணமாக குறிப்பிட்ட பகுதி நிலத்தில் கூடிய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பதால், அதிக பகுதிகளை Green Land ஆகவே பராமரிக்க கூடியதாக இருக்கும். அத்துடன் மக்கள் நெருக்கமாக வாழலாம். கூடியதூரத்திற்கு பயணம் செய்து தொழில் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. தேவைகளை இலகுவாக பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது. இது குறிப்பாக சுற்று, சூழலிற்கு உகந்ததாக மாறலாம் என்பது கணிப்பு.

இந்த வகை Mixed Used Projects இன்றைய காலகட்டத்தில் Vancouver பகுதியிலேயே அதிகமாக முன் எடுக்கப்படுகின்றது. ஒரு உதாரணத்திற்கு ஒரு கட்டிடத்தொகுதியில் ஒரு சர்வகலாசாலையும் அமைக்கப் பெற்றுள்ளது.

இருந்தபோதிலும், சமுதாயத்தில் சகல மட்டத்திலும் இந்த வகை Projects வரவேற்பு பெற்றதாக கூறமுடியாது. உதாரணமாக Restaurant இலிருந்து வரும் மணம், சத்தங்கள், 24 மணிநேரமும் மக்கள் நடமாட்டம், பெரிய பெரிய Truck களின் தொடர்ச்சியான இயக்கங்கள் போன்றவை மக்களிற்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. இதனால் எல்லோரையும் ஓரளவு சமாளிக்க கூடிய சிற்சில புதிய முறைகளை அறிமுகப்படுத்தலாம். எதற்கும், எப்பொழுதும் எதிர்ப்புகள் இருந்தே தீரும். காலம்தான் பதில் சொல்லும். இருந்தபோதிலும் கனடிய மக்களில் அனேகர் இதனை விரும்புவதாகவே அறியப்படுகின்றது.

காலமாற்றத்தால் மக்கள் வாழும் முறையும் மாறும் என்பது உண்மையே. எனவே இதுபோன்ற வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்டு வாழப்பழகவேண்டும் என்பது மறுக்கமுடியாத நியதியாக வரும்.

என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon
best time to buy Real Estate

ESSO Gas Station with property at HWY exit to Quebec

Scarborough Bankrupt Sale
30,000sq.ft Banquette Hall in 4.5 acre Land with zoning

Buy low, Sell high - 40 years Low Interest
வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost
What's your Risk?

வீடும் வியாபாரமும் Business Zoning
Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

## எட்டாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா
## படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது. தாயக நிலைமையை வெளிப்படுத்தும் படங்கள் வரவேற்கப்படுகின்றன.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும். அவையாவன:
- முதற் பரிசு -- 500 கனடிய டொலர் - இரண்டாம் பரிசு -- 300 கனடிய டொலர்
- மூன்றாம் பரிசு -- 200 கனடிய டொலர்

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

- படைப்புக்கள் தை 15, 2010க்கு (Jan. 10, 2010) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
  Tam Sivathasan
  Exeutive Director - IAFS
  1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு:1-416-450-6833, 1-416-804-3443, rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com /Independent Art Film Society of Toronto

## ஒன்டாரியோவின் உடல் நலத்திற்காக பிரதம மருத்துவ அதிகாரியிடமிருந்து ஒரு செய்தி

# H1N1 புளூ தடுப்பூசி பற்றிய புதிய தகவல்

**கீழ்காணும் முன்னுரிமைபெற்ற குழுக்கள் H1N1 ஊசி போட்டுக்கொள்வது அதிமுக்கியம்:**

- உடல்நல பராமரிப்பு பணியாளர்கள்;
- கர்ப்பிணிகள்;
- 6 மாதம் தொடங்கி 5 வயதுக் குறைவானது வரையான பிள்ளைகள்;
- 65 வயதுக்கு குறைவான தீராத மருத்துவ நிலையில் இருப்போர்;
- வெகுதூரத்திலும் தனித்திருக்கும் சமூகங்களில் வாழ்பவர்கள்;
- நோயெதிர்ப்புச் சக்திபெற முடியாத அதிக ஆபத்திலிருப்போரோடு வாழுகின்ற அல்லது அவர்களைப் பராமரிக்கின்றவர்கள்.

பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பது மிகவும் முக்கியம். நீங்கள் முன்னுரிமை பெறுவோர் குழுவில் இல்லை என்றால் தயவுசெய்து பொறுமையாக இருங்கள். அனைவரும் H1N1 ஃப்ளூ ஊசியைப் பெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.



ஒன்டாரியோவின் பிரதம சுகநல மருத்துவ அதிகாரி டாக்டர் ஆர்லீன் கிங்

**ஃப்ளூ ஊசி கிடைக்கப் பெறுவதுபற்றியும் உங்களுக்கு அருகிலுள்ள ஃப்ளூ கிளினி பற்றிய மிகப் புதிய தகவலுக்கு விஜயம் செய்யுங்கள்:**

**ontario.ca/flu**

**அல்லது ஒன்டாரியோ இன்பொலைனை அழையுங்கள்: 1-800-476-9708 TTY: 1-800-387-5559**

## இந்த வருடம் ஒரு வித்தியாசமான ஃப்ளூக் காலம்

**ஃப்ளூவிலிருந்து உங்களை எவ்வாறு பாதுகாக்கலாம்?**



Ontario

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## தோல் - Skin

மஞ்சள் காமாளை (Jaundice) வரும் போதும் மேல் சருமப்பகுதி மஞ்சள் நிறம் கொண்டதாக இருக்கும். கண்களுக்கும் நிறமாற்றம் ஏற்பட்டு வரும். கல்லீரலில் பித்தநீர் காணப்படுகின்றது. இந்த நோய் ஏற்படும்போது மாற்றம் ஏற்பட்டு இரத்தத்துடன் கலந்து உடம்பு பூராகவும் பரவும். அவ்வேளையில்தான் ஒரளவு சருமம் மஞ்சள் நிறமாகக் காட்சியளிக்கின்றது. எனவே நோயின் காரணமாகவும் தோலில் மாற்றம் ஏற்படும்.

சிலருக்கு முகப்பரு வருவதை நாம் நன்கு அறிவோம். எண்ணெய் (நெய்சுரப்பி) சுரப்பி அதிகம் சுரப்பதினால் இளம் வயதினருக்கு ஏற்படுகின்றது. இவர்கள் அதிக கொழுப்பு உணவுகளைப் புசிப்பவர்களாக இருப்பார்கள். உ+ம் இறைச்சிவகை (ஆட்டிறைச்சி), எண்ணெயால் ஆன பொரியல், கரியல் ஆகாரம், பலகாரவகை போன்றவற்றைக் கூறலாம். இவற்றை ஓரளவு தவிர்த்துக் கொள்வது நன்று. எனவே தாவர உணவுகள், சூப்புவகை சலாட் வகை கீரைவகை, நாளாந்தம் பாவிப்புதுடன் வேண்டி நீராகாரத்தைப் பாவித்து வருதல் வேண்டும். நமது சருமத்தில் காணப்படும் வியர்வை நமது உடலைச் சுத்தப்படுத்தி குளிர்மையாக்கின்றது. வியர்வையில் மணம் இல்லை. ஆனால் தோலில் நுண்கிருமிகள் உள்ளன. (பக்டீரியா) இவைதான் வியர்வையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. பெரும்பாலும் அக்குள் பகுதியில் இந்தக் கிருமிகள் அதிகம் உண்டு. அவ்விடத்தில் வியர்வை வரும்போது நாற்றம் கூடிக்காணப்படும். எனவே உரிய இடத்தைச் சுத்தம் செய்து வருதல் வேண்டும். இந்நிலையில் தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் தகுந்த பூசுவதற்குரியவற்றை தந்துகொள்வார்கள். ஆனால் நாம் நமது உடம்பை எந்நேரமும் சுத்தமாக வைத்திருந்தால் நிலைமையை சமாளிக்கமுடியும்.

சிலருக்கு தோல் பகுதியின் மேல் வலியுடன் கூடிய கட்டிகள் வருவதை அறிவோம். இது நமது தோலின் மயிர்கால்களில் Staphylococcus Bacterium என்ற நுண்கிருமியினால் ஏற்படுவதாக கூறப்படுகின்றது. ஆனால் இந்த ஒன்றால் மட்டும் இப்படிக் கட்டிகள் வருவதுமில்லை. பல காரணங்கள் இருக்கலாம். எனவே எதற்கும் உரிய வைத்தியர்களிடம் சென்றால் நன்கு பரீட்சித்து தகுந்த சிகிச்சைமுறைகளைப் பெற்று சுகமடையமுடியும்.

சிலரைச் சந்திக்கும் போது தங்கள் தோல் பகுதி வரண்டு போய் இருப்பதாகக் கூறுகின்றார்கள். இவர்களின் தேகம் வெப்புநிலையால் பாதிப்படையலாம். சில நோய்களின் முற்குறியாகவும் இருக்கும் அல்லது இவர்கள் வேலைசெய்யும் இடத்தின் வெப்பச்சூழ்நிலையாகவும் அமையலாம். எதற்கும் குளிர்ச்சியான ஆகாரங்களை எடுத்தல் வேண்டும். பழவர்க்கம், கீரைவகை, பழரசம், தண்ணீர், சூப்பு, சலாட்வகை மிக நன்மை பயக்கும். குளிர்நீராடுதல், போன்றவற்றைக்கையாள வேண்டும். இவற்றைக் கையாண்டு பயன்கிடைக்காவிடில் தங்கள் வைத்தியரிடம் செல்வது மிகநன்று.



சிலர் அணியும் கால் உறையினாலும் கால் பகுதியின் சருமப்பகுதியில் கடி, சொறி, நமச்சல், மணம் ஏற்படுவதை அறிவோம். இது கால் உறைகளின் தன்மையை பொறுத்தும் இருக்கும். காலநிலைக்கு ஏற்ப உறைகளைப் பாவிக்க வேண்டும். துப்பரவு செய்து உறைக-ளைப் பாவிக்க வேண்டும். கால்களை நன்கு சுத்திகரித்து கொள்ள வேண்டும். தொற்று நீக்கித் திரவங்களை கையாளவேண்டும். சுத்தம் சுகம் தரும் என்பார். அதன்படி நடந்து கொள்ளவேண்டும்.

நமது தேகத்தில் அதாவது சருமத்தில் வியர்க்குரு பருக்கள் வருவதை அறிவோம். இது பெரும்பாலும் வியர்வை ஏற்பட்டு உரிய இடத்தை சுத்தம் செய்யாவிடில் ஏற்படும். தொழில் சாலைகள், வெப்பமான சமையல் செய்யும் இடங்கள், வெப்புத்தன்மை பொருந்திய காரியாலயங்கள் போன்ற இடங்களில் வியர்வைச் சுரப்பிகள் வியர்வை அதிகமாக வெளியேற்றும். உடம்பு எவ்வளவுக்கு அசைகின்றதோ அதற்கு அமையவும் வியர்வை அதிகம் வெளிவரும். உ+ம் விளையாட்டு வீரர்களைப் பார்க்கலாம். இவர்களுக்கு வியர்வை அதிகம் வெளியேறும். எனவே உடம்பிற்கு அதிகவேலை கூடினாலும் இந்நிலை ஏற்படும். வியர்வை வெளியேறுவது நல்லது. ஆனால் அந்த வியர்வை நன்கு துடைத்துப் துப்பரவு செய்து கொள்ளவேண்டும். தூய்மைப் படுத்தாவிடில் தற்காலிகமாக காய்ந்து அடைப்பு (தூவாரங்கள்) ஏற்படும். இதனால் தான் சிறுபருக்கள் (radiesse) வரும். எனவே நமது சருமத்தை தூய்மையாக வைத்திருப்பதற்கு ஈரம் கொண்ட நூல் துவாயால் துடைப்பதும் தொற்று நீக்கித் திரவங்களை கலந்து நீராடுவதும் மிகநன்று. நிலைமைக்கு ஏற்ப பருத்தி நூல் ஆடைகளை அணிந்தால் பாதுகாப்பு உண்டு.

**

மேலும் சருமத்தில் ஏற்படும் வியர்வை வேலைகள் செய்யாத வேளையில் வருமாயின் அது ஒரு நோயின் முன்குறியாகவும் அமையும். இதனுடன் ஏதும் மாற்றமான நிலை ஏற்படின் உடன் வைத்தியசாலைக்கு தாமதியாமல் சென்று பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

சிலரைப் பார்த்துள்ளேன், கால் குதியில் கால் ஆணி என்ற மொட்டு காணப்படுவதை. இது சருமப்பகுதியில் அதாவது பாதத்தில் தடிப்பாக இருக்கும். கெட்டியாக இருக்கும். காலணியில் உள்ள பொருட்கள் அண்டினால் கால் ஆணி ஏற்படும். பாதத்தோலில் கல், முள் போன்றன குத்துவதாலும் சிலருக்கு வரலாம். இந்நிலையில் மஞ்சள் + வசம்பு மருதோன்றித் தூள்களைச் சேர்த்து குழைத்து உரிய இடத்தில் பூசிவர குணம் கிடைக்கும். ஒருகிழமை பூசவே குணம் கிடைக்கும். குணம் கிடைக்காவிடில் தாமதிக்காமல் உரிய வைத்தியரிடம் செல்லவும்.

சிலருக்கு குதிக்காலில் வெடிப்பு சருமத்தில் ஏற்பட்டிருப்பதை நாம் அறிவோம். இதனை நாம் பித்த வெடிப்பு எனக் கூறுவோம். உடம்பின் வெப்புத் தன்மையாலும் இது ஏற்படுவதுண்டு. இது ஏற்பட்டால் பெரும் வேதனையாகவும் இருக்கும். நடப்பதற்கு இயலாமலும் இருப்பவர்களைக் காண்கின்றோம். இது உயிர்சத்து குறைவில் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது. சில நோய்களின் குணம் குறிகளின் ஒன்றாகவும் இருக்கும். அதற்கும் வைத்தியர்களின் பார்வை முக்கியம். தற்பாதுகாப்பாக பின்வருவனவற்றைச் செய்து பார்க்கலாம். பாதத்தை நன்கு சுத்தமான வெதுப்பு நீரினால் சுத்தம் செய்ய வேண்டும். தேசிக்காயை வெட்டி அதன் புளி உரிய இடத்தில் படும் படி உரஞ்சல் வேண்டும். மேலும் வேப்பெண்ணை அல்லது இலுப்பெண்ணையை உரிய இடங்களில் பூசிவரலாம். அல்லது கசுக்கொட்டை ஓட்டின் பாலைப் பூசினாலும் மாறும். (கசுக்கொட்டை ஓட்டைத் தட்ட பால் வரும்) குணம் கிடைக்காவிடில் வைத்தியர்களிடம் சென்று பார்வையிட்டு உரிய மருந்தைப் பெற்று சுகம் பெறுங்கள்.

தோலில் ஏற்படும் பற்று படை மற்றும் சொறி சிரங்கிற்கும் துப்பரவு முக்கியமாகும். சுகாதாரத்துக்கு குறைவான இடங்களில் Sarcoptes Scabies என்ற ஒட்டுக் கிருமிகள் ஏராளமாகவுள்ளன. இவை சொறி சிரங்குள்ளவர்களின் உடலில் காணப்படும். இவர்கள் பாவிக்கும் உடுப்பு, சோப்பு, சீப்பு, பொருட்களை மற்றோர் பாவிக்கும் போது இலகுவில் தொற்றக்கூடியது. இவை உடம்பில் ஒட்டியவுடன் சில மணித்தியாலத்தில் பலவாகிப் பெருகிவிடும். எறும்புகள் மாதிரி உடம்பு பூராகவும் கெதியில் பரவும். எனவே தூய்மை முக்கியம். நோயாளி பாவித்த பொருட்களை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். மற்றோர் அவர்கள் பாவித்த பொருட்களை தொடுவது நன்று அல்ல. எனவே தாமதியாமல் வைத்தியர்களிடம் சென்று குணப்படுத்திக் கொள்வது சாலச் சிறந்தது. பாரிசவாதம் போன்ற வியாதிகளில் படுக்கைப் புண் ஏற்படுவதுண்டு. தோல் பகுதி ஒரே இடத்தில் அமர்த்தப்பட்டு காணப்படும். இரத்தோட்டம் தடைப்படும். தோல் நிறம் மாறுதல் அடையும். கெட்ட மணம் வீசும். எனவே இந்நோயாளிகளைப் பராமரிப்போர் கண்ணும் கருத்துமாய் இருந்து தோலில் புண் ஏற்படாது சுகாதாரமுறைகளைக் கையாள வேண்டும். ஒரே படுக்கையில் நோயாளியைப் படுக்க விடக்கூடாது என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள். மேலும் சிலரைப் பார்த்தால் முகத்தின் கன்னப் பக்கத்தின் தோலில் முள் போன்ற பருக்கள் காணப்படுகின்றன. இது முகப் பருவல்ல. இதனை Tuberous Sclerous எனக் கூறப்படுகின்றது. தோல் பகுதி முள்ளுத் தன்மையாக மாற்றமடையும். ஒவ்வொரு மயிர்கால்களின் வேர்பகுதியில் சீழ் தங்கி கட்டிநிலை ஏற்படுத்தும். இவர்களைக் கவனிக்கும் போது ஞாபகசக்தி குறைந்தவர்களாக காணப்படுவர். இவர்களுக்கு வைத்திய ஆலோசனை சிகிச்சை முக்கியம்.

தோலின் சில பகுதியில் வெள்ளை நிறத் தழும்புகள் உள்ள சிலர் இருக்கின்றார்கள். இவர்களின் நகப்பகுதியை பார்க்கும் போது நகத்தைச் சுற்றி தோலில் கட்டி போன்ற உருவமும் காணப்படும். இந்நிலையில் உள்ளவர்கள் உயிர்சத்து A குறைவினால் ஏற்படுவதாக கூறப்படுகின்றது. எதற்கும் தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் தகுந்த வைத்தியம் செய்து சுகம் பெற முடியும்.


தோலில் ஏற்படும் பங்கஸ் என்று அழைக்கப்படும் காளான்களால் தோல் பகுதியில் அரிப்பு நிலை ஏற்படும். இந்நிலை மருந்துகளால் குணமடைவது அரிது எனக் கூறப்படுகின்றது. இப்பகுதியை பெரும்பாலும் அறுவைச்சிகிச்சை மூலம்தான் குணப்படுத்த முடியும். (காளான்களை)

இந்தக் காளான் நோய் பக்டீரியா நோய்களோடு சேர்ந்துதான் காணப்படும். பக்டீரியாவை இல்லாமல் செய்வதற்கு மருந்து கொடுத்தாலும் காளான்கள் அதிகரித்து நோய் அதிகரிக்கும் எனவும் கூறப்படுகின்றது. எதற்கும் சரும ரோக விசேட வைத்தியருடன் தொடர்பு கொள்வது மிக நன்று.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் வேலை செய்வோருக்கு தோலில் பாதிப்பு ஏற்பட வழியுண்டு. அதாவது பெற்றோலியம் அது தொடர்பான பொருட்களினால் தாக்கப்பட்டு தோல்பகுதி நன்கு உலர்ந்து அரிப்புத் தன்மையாக காணப்படும். இரத்த அணுக்களையும் சேதப்படுத்தும். Aromatic என்ற புற்று நோய் கூட ஏற்பட வாய்ப்புண்டு எனவும் கூறப்படுகின்றது. மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் வேலை செய்வோர் தம்மைப் பாதுகாப்பாக பெரும்பாலும் கைஉறை அணிவதுடன் கண்களை பாதுகாக்க கண்ணாடியும் அணிவதுடன் ஈரமான முகமூடியும், தடையில்லாத காற்றோட்டமும் முக்கியமாகும். எனவே எதற்கும் பாதுகாப்பு உபகரணங்களை பாவித்து தொழில்களைச் செய்து கொள்ள வேண்டும் இந்நாட்டைப் பொறுத்த மட்டில் சகலதும் பெற்றுக் கொள்ள முடியும். தொழில் செய்யும் இடங்களில் இருக்கும் இவை அனைத்தும் இருந்தாலும் நம்மைப் பொறுத்ததே எம்மைக் காப்பாற்ற என்பதைப் புரிந்து கொண்டால் போதும்.

குழந்தைகளுக்கு கரப்பான் போன்ற கிரந்திகள், சொறி வருவதுவுண்டு. இதில் இருவகை உண்டு. செங்கிரந்தி - பருக்கள் சிவப்பு நிறம் கொண்டதாக இருக்கும். மற்றது கருங்கிரந்தி - கறுப்புநிறம் கொண்டது. நிறத்தைக் கொண்டு அறியமுடியும். இதற்கு உள் மருந்தும் உண்டு. வெளிப் பாவனைக்கும் மருந்துண்டு. இந்நிலைச் சரும நோய்க்கு மூலிகை வைத்தியம் சாலச் சிறந்ததாக நம் நாட்டில் செயல்படுகின்றது. இதற்கு பச்சிலை மூலிகை முக்கிய இடத்தைப் பெறும். இவை இங்கு பெறுவது கஸ்டம். வெளிப்பிரயோகத்திற்கு சிறந்த கிரந்தி எண்ணெய் நம் நாட்டில் உண்டு. வருத்தம் மாறினால் மீண்டும் வராது இருக்க பாதுகாக்கும். இதற்குரிய மருந்து, எண்ணெய்வகை தயாரிப்பது அனுபவமுள்ள

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



தொடர்ச்சி 19ஆம் பக்கம்

REAL ESTATE வகுப்புகள்
றொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (Real Estate) வகுப்பு ஆரம்பிக்க இருக்கின்றது.
தொடர்புகளுக்கு: Vane - 416.321.6969



SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL

# 10TH ANNIVERSARY SPECIAL!



# BREAD MASTER BAKERY

10th

## SPECIAL STARTING FROM NOVEMBER 01, 2009

**TAKE - OUT AND CATERING FOR ANY OCCASIONS**

SPECIAL
**SAMOSA**
Vegi. Mutton Chicken Or Fish
4 FOR
**$1.00**

SPECIAL
**RICE & CURRY** Vegi.
(வடை, பாயசம், அப்பளம், மிளகாய், ரசம்) 6 கறியுடன்
**$4.99** (Tuesday & Friday)

SPECIAL
கொத்து ரொட்டி
(Chicken, Mutton, Beef)
**$3.99**

SPECIAL
25 இடியப்பம்
சம்பல், சொதி, கிழங்கு குளம்பு
**$2.99**

SPECIAL
புட்டு
கிழங்கு குளம்பு
**$2.99**


SPECIAL
இடியப்ப மிக்ஸ் **$1.99**
புட்டு மிக்ஸ் **$2.99**

SPECIAL
நூடில்ஸ்
(Chicken & Shrimp)
**$4.99**
Lunch Special for Students
1 Box Noodles **$1.99**

SPECIAL
ரொட்டி
(Plain) **0.60¢**
வீச்சு ரொட்டி
**0.75¢**

SPECIAL
Lunch Special for Students
2 Rolls + Can Juice
**$1.99**

10வது வருடத்தில்
கால் பதிக்கும் முகமாக
வாடிக்கையாளர்களுக்கு
**BREAD MASTER**
தரும் சிறப்பு விலை



FRESH FROM THE OVEN

திருமணம்,
பூப்புனித நீராட்டு விழா,
பிறந்தநாள் வைபவம்,
ஒன்றுகூடல்கள், அந்தியேட்டிக்
கிரியைகள் மற்றும் எந்த
வைபவங்களானாலும்
சுத்தமான முறையில்
எத்தனை பேர்களுக்கும்
கேற்றறிங் செய்து தரப்படும்

SPECIAL
**CROISSANT**
3 FOR
**$1.00**



**OPEN 7 DAYS A WEEK!** 7.00 A.M - 9.00 P.M

**MANY MORE ITEMS FOR SPECIAL**

## 31 TAPSCOTT ROAD, UNIT #B3

LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH

## TEL: (416) 299-5083




SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL

SELVA GRAPHICS 416-724-8315


# இருதய நோய்க்கு யோகாசன சிகிச்சை


## பகுதி - 04

இருதய நோய் என்பது அதிக இரத்த அழுத்த நோயில் ஆரம்பித்து அதற்கான சிகிச்சை மேற்கொண்டு தொடர்ந்து மருந்துகள் சாப்பிட்டு வர, உடன் சர்க்கரை நோயும் சேர ஏற்படுவதுதான் இருதய நோய்கள்.

இயற்கை விதிகளை மீறும்போது இயற்கை அளிக்க கூடிய தண்டனைதான் நோய்கள் மற்றும் பிணிகள் என்கிறது யோக மருத்துவம்.

அதிக இரத்த அழுத்த நோய் என்பது உடம்பில் எங்கோ கோளாறு என்பதைக் காட்டுகின்றது. அதை விடுத்து தொடர்ந்து ஏழாண்டுகள், பத்து ஆண்டுகள் என்று அதற்கான மருந்துகளைத் தொடர்வது இருதய நோய் ஏற்படக் காரணமாகின்றது.





ஆண்கள் புதன், சனியிலும் பெண்கள் செவ்வாய், வெள்ளியிலும் தவறாது எண்ணெய்க் குளியல் எடுக்க வேண்டும். அப்படி எடுத்து வருவதுடன் யோகாசன பயிற்சிகளைத் தவறாது செய்து வந்தால் அந்த நபருக்கு இருதய நோய் வருவதற்கு வாய்ப்பில்லை. மாரடைப்பு நோயும் வராது என்கிறது சித்த மருத்துவம்.


ஆனால், நடைமுறையில் இந்த நாட்களில் எண்ணெய்க் குளியல் எடுக்கும் பழக்கம் மிகவும் குறைந்து கொண்டு வருகின்றது. காரணம் நவீன மருத்துவர்களின் பொன்னான ஆலோசனைகள்தான். அதனால் இன்று மாரடைப்பு, இருதய நோய்கள் சர்வ சாதாரணமாக போய்விட்டது.


கேட்டாலும் கிடைக்காது மனிதப் பிறவி. தெய்வத்திற்கு அடுத்த பிறவி மனிதப் பிறவி என்கிறது சாஸ்திரங்கள். இந்த

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

பிறவியில்தான் புண்ணிய காரியங்கள் செய்ய முடியும். மற்றவர்களுக்கு உதவியாக இருக்க முடியும். நமக்கே நாம் பகையாக இருந்து வாழ்க்கையை வெறுத்து வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் எத்தனையோ பேர்.

அதாவது யோகாசனம், பிராணாயாமம், தியான பயிற்சி செய்பவர்கள் தனக்கும், மற்றவர்களுக்கும் உபயோகமாக இருப்பார்கள். அவர்களுக்கு மற்றவர்கள் மேல் அக்கறை மிகும். ஆனால் யோகாப் பயிற்சி - குறிப்பாக - தியானம் செய்யாதவர்கள் தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உபத்திரவமாக இருப்பார்கள் என்கிறார்.





யோகாசனங்கள் உடல் உள் உறுப்புக்களை பிரபஞ்ச தொடர்பு உடைய இராஜ உறுப்புக்களான ஐந்து உறுப்புக்களையும் சீர்செய்வது மட்டுமன்றி வாழ்நாள் முழுவதும் பலப்படுத்துகின்றது .

ஆகாயம் - காது - கிட்னி
நீர் - நாக்கு - இருதயம்
காற்று - மூக்கு - நுரையீரல்
நெருப்பு - கண் - கல்லீரல் (லிவர்)
பூமி - உதடுகள் - மண்ணீரல்

உடன் சித்த, ஆயுர்வேத, ஹோமியோ மருந்துகள் துணையோடு ஆசனப் பயிற்சிகளை முறையாக தொடர்ந்து செய்து வந்தால் எப்படிப்பட்ட நோய்களையும் கட்டுக்குள் கொண்டு வரலாம். மூச்சுப் பயிற்சிகள், தியானம், கிரியை, சூரிய நமஸ்கார பயிற்சிகளைத் தவறாது செய்து வந்தால் நிச்சயம் நோயின்றி வாழ முடியும் என்பது எனது 26 ஆண்டுகால ஆராய்ச்சியின் முடிவாகும்.

நமது உடம்புக்குள் கண்களுக்குத் தெரியாத ஆறு சக்கரங்கள் உள்ளது. மூலாதாரம், ஸ்வதிஸ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை மற்றும் ஏழாவது சக்கரம் சகஸ்ராமம் எனப்படும்.

நமது உடம்புக்கு வெளியே கண்களுக்கு தெரியாத "ஆரா" எனப்படும் சக்தி மண்டலம் உள்ளது. இந்த ஆராவும் உடல் உள்ள சக்கரங்களையும் ஐக்கியம் செய்வதுதான் யோகப் பயிற்சிகள். ஆரா + ஐக்கியம் அதாவது "ஆரோக்கியம்" ஆகும். நம்பிக்கை உள்ளவனுக்கு ஆரோக்கியம் இருக்கும். ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும்.

இன்று மக்கள் நம்பிக்கை இழந்து மருந்து, மாத்திரைகள் நம்பி வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு வழிகாட்டத்தான் நம்நாட்டு சித்தர்கள் இந்த யோகாசன பயிற்சிகளை அன்புடன் கொடுத்துள்ளார்கள்.

இருதய நோய்களுக்கு யோகாசன சிகிச்சைத் திட்டம்:
1) அர்த்த ஹலாசனம் 2) புஜங்காசனம் 3) சலபாசனம் 4) மகராசனம் 5) வக்ராசனம் 6) மச்சாசனம் 7) விபரீதகரணி 8) கபாலபதி கிரியை 9) யோகி முறை மூச்சுப் பயிற்சி 10) ஆல்ஃபா தியானம்.

மேற்கண்ட எளிமையான ஆசனங்களை முறையான பயிற்சி (யோகாசன சிகிச்சை முறைகள்) பெற்ற ஆசிரியரிடம் நேரில் சென்று பயின்று தொடர்ந்து ஆறு மாதங்கள் பழகி வந்தால் இருதய நோய்கள் மறைந்து ஆரோக்கியத்துடன் வாழலாம். வாழ்த்துக்கள்.

இதயம் பாதிக்காது இருக்க உப்பு, காரம், இனிப்பை மிதமாக உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

மிகுதி தொடரும்


ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
தொடர்புகுகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# பூ - ஒரு மனோபாவம்

## ஓடும் நீர் உறைவதில்லை 91

நம் ஒவ்வொருவரதும் நாளாந்த வாழ்வு என்பது நமது மனோபாவத்தின் வெளிப்பாடாகவே அமைகின்றது. இந்த உண்மையின் நிலைப்பாடு பற்றிய தெளிவின்மையே பல்வேறான பிரச்சினைகளுக்கு அடிப்படையாக அமைகின்றது என்பதை நாம் இலகுவில் புரிந்து கொள்வதில்லை. நமது மனோபாவமே நமது இன்பம் - துன்பம், மகிழ்ச்சி - கவலை, விருப்பு - வெறுப்பு என்பவற்றைத் தெரிவு செய்யும் காரணியாக அமைகின்றது என்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் புரிந்து கொள்கின்றோம். இருப்பினும் அவற்றை நாம் நிலையானதாக அமைத்துக் கொள்வதில் தவறிவிடுகிறோம்.

உலகம் என நாம் கூறுகின்ற விடயங்கள் நமது மனோபாவத்தின் பிரதிபலிப்பே. நாம் எதுவாக இருக்கின்றோமோ அதுவாகவே உலகம் என்பதை நாம் புரிந்து கொள்கின்றோம். நாம் காணும் உலகம் நமது எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றதாயின் நல்ல உலகம், மாறாக அமையுமாயின் கெட்ட உலகம் என வகைப்படுத்தி விடுகின்றோம். எம்மிடத்தில் எவையெல்லாம் இருக்கின்றனவோ அதுவே உலகமாக நமக்குக்காட்சி தருகின்றன. உண்மையில் உலகம் என்பது ஒரு திரைச்சீலை. அந்தத் திரைச்சீலையில் எவையெல்லாம் தெரிவதாக நாம் நினைக்கின்றோமோ அவையெல்லாம் நமது மனம் எனும் ஒளிப்படக் கருவியில் இருந்து வெளிவருபவை தான். ஒரு திரைப்படம் எவ்வாறு ஒரு கருவியின் மூலம் திரைக்கு அனுப்பப்படுகிறதோ அவ்வாறே மனம் எனும் கருவி மூலம் திரை எனும் உலகத்தில் நாம் சம்பவங்களைப் பார்க்கின்றோம். இங்கே ஒளிப்படக் கருவியாகிய மனத்தின் மூலம் நம்மிடம் பதிவு செய்யப்பட்ட மனோபாவங்க ளாகிய ஒளிப்பதிவு நாடாக்களின் பிம்பங்கள் திரை எனும் உலகில் விசாலமாக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

உலகத்திரையில் காணப்படும் நமது மனோபாவ விம்பங்கள் அனைத்தும் நம்மால் பதிவு செய்யப்பட்டவை மட்டுமே என்பதை நாம் மறந்து விடலாகாது. உண்மை, நேர்மை, சத்தியம், சமத்துவம் போன்றவையும் களவு, பொய், சுயநலம், பொறாமை போன்றவையும் நாமாகக் கற்றுக்கொண்ட விடயங்களே. இச்சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை நாம் மிக உறுதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது நாம் எவற்றைக் கற்றிருந்தாலும் நமது வாழ்க்கையின் சிறப்புக்கு எது அடிப்படையாக அமைய முடியுமோ அதை நாம் உறுதியாகப் பயன்படுத்துவதன் மூலம் சிறப்பாக வாழலாம் என்பதே. இன்னொரு வகையில் கூறுவதாயின் நமது உலகம் நமக்கான-தாக அமைய நமது சிறந்த மனோபாவங்களைப் பயன்படுத்தக்கூடிய அத்தனை வலிமையும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இப்போது ஒரு பூவுக்கும் மனோபாவத்துக்கும் இடையில் என்ன தொடர்பு என்பதைப் பார்ப்போம். பூ ஒரு மனோபாவமா? புதிராக இருக்கிறதா? புரியும்வரை தான் எதுவும் புதிர், புரிந்த பின் அது உண்மையல்லவா. முதலில் பூ என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். உண்மையில் ஒரு பூவானது அதன் மரம் அல்லது செடியின் மனோபாவமே. வியப்பாக இருக்கிறதா? விளம்பரம் வாசகர்களுக்கான பிரத்தியேகமான விளக்கம் இது. இப்போது ஒரு பூவின் உண்மையான வெளிப்பாடு என்ன என்பதைச் சிறிது ஆழமாகப் பார்ப்போம். ஒரு விதை மரமாவதற்குத் தேவைப்படுவது பலவாக இருப்பினும் அதாவது மண், தண்ணீர், வெப்பம், காற்று, வெளிச்சம் என்பவையாக இருந்தாலும் இவற்றுள், அதி முக்கியமாக அமைவது ஒன்றே ஒன்றுதான், அதுவே ஒரு பூவின் அடிப்படையாகவும் அமைகின்றது. அது என்ன தெரியுமா அதுதான் தண்ணீர்.

**KG Master-kgmaster@rogers.com**

ஒரு பூவானது தண்ணீரின் வெளிப்பாடே. ஒரு பூவின், அழகு, அதன் நறுமணம் எல்லாம் அந்தப் பூவானது ஈரத்தன்மையில் இருப்பதன் மூலமே வெளிப்படுத்தப்படுகின்றன. விதை முளையாகி, மரமாகிப் பின் பூக்களை அது தருவது அதனுள் உள்ள நீரின் அளவினால் தான். இதனால் தான் மெதுமையான பூவாக இருந்தாலும் சரி, நறுமணம் வீசும் பூவாக இருந்தாலும் சரி, அழகை அள்ளித் தரும் பூவாக இருந்தாலும் சரி, நமக்குப் பயன்படாத பூவாக இருந்தாலும் சரி அது தண்ணீரின் பிரதிபலிப்பே. எப்போது அந்த பூ அதன் ஈரப்பதனை இழக்கின்றதோ அப்போது கருகி, அழகிழந்து, மணமற்று மண்ணோடு மண்ணாகி விடுகின்றது. பூ மட்டும் தானா தண்ணீரின் பிரதிபலிப்பு. இலைகளும் தானே என்று கேட்பதாகத் தோன்றுகின்றது. ஆம் இலைகளும் தண்ணீரின் பிரதிபலிப்புத்தான். ஆனால் ஆயிரம் இலைகள் ஒரு கிளையில் இருந்தாலும் அக்கிளையில் காணப்படும் ஒரு பூத்தானே எம்மைக் கவர்ந்து விடுகின்றது. பூ எம்மைக் கவர்ந்ததா இல்லையா என்பது எம்மைப் பொறுத்த விடயம். ஆனால் பூமரத்துக்குத் தெரிந்தவிடயம் ஒன்றேயொன்று தான். ஏற்றல் மறுத்தல் எல்லாம் மனிதனின் தெரிவு. ஆனால் பூமரத்துக்குத் தெரிந்த விடயம் கொடுத்தல் மட்டுமே.

இப்போது ஒரு பூவைக் கொடுப்பதற்கு ஒரு தாவரம் மேற்கொள்ளும் முயற்சியைப் பார்ப்போம். நம்மைப் போன்றே பிறப்பு, வாழ்வு, இறப்பு என்பன தாவரங்களுக்கும் உண்டு. இவற்றுக்கு பல்வேறுபட்ட வகைகளும் உண்டு. கண்களைக்கவரும் இயற்கை அழகைத் தன்னகத்தே கொண்ட அழகான பூக்களைத் தரும் தாவரங்கள், அழகும் சிறந்த நறுமணம் தரும் பூக்களைத் தரும் தாவரங்கள், அழகும் நறுமணமும் ஒருங்கே இணைந்த பூக்களைத் தரும் தாவரங்கள், சிறந்த தேனைக் கொடுக்கும் பூக்களைக் கொண்ட தாவரங்கள் என நேர்த்தியான பயன்தரும் பூக்களைத் தரும் தாவரங்கள், நச்சுத்தன்மை கொண்ட பூக்களைத் தரும் தாவரங்கள், சுணைப்புத் தரும் பூக்களைக் கொண்ட தாவரங்கள், சிறுசிறு பிராணிகள் அதன் மீது அமர்ந்ததும் அவற்றைத் தனது உணவாக்கிக் கொள்ளும் தன்மை கொண்ட பூக்களைக் கொண்ட எதிர்மறையான விளைவு களைத் தரும் தாவரங்கள் எனப் பலவகைகள் உண்டு. தாவரங்கள் பலவகையாக இருந்தா லும் அவற்றின் முயற்சிகள் அடிப்படையில் ஒரே மாதிரியாகத்தான் அமைகின்றன.

பெரும்பாலான தாவரங்கள் விதை, முளை, விருட்சம் எனும் படிமுறைகளைக் கொண்டிருக் கின்றன. ஒரு சில தாவரங்கள் விதையல்லாமல் வேரிலிருந்து உருவாகுகின்றன. இன்னும் சில அவற்றின் கிளைகளிலிருந்து மீள் நடுதலால் உருவாக்கப்படுகின்றன. தாவரங்களின் வளர்ச்சிக்கு விதையில் இருந்து விருட்சம் வரை தண்ணீரின் பங்களிப்பு தவிர்க்கப்பட முடியாததாகின்றது. இந்தத் தண்ணீர் மண்ணுடன் சேர்ந்து ஈரத்தைக் கொடுக்க அந்த ஈரத்தைப் பயன்படுத்தி அந்த விதை வேரூன்றி முளையாகி விருட்சமாகின்றது. மிகச் சில தாவரங்கள் தரையைத் தொடாமல் தண்ணீரில் மட்டும் வாழ்கின்றன. இதனால் ஒரு தாவரத்திற்கு அதிமுக்கியமானது தண்ணீர் என்பது அறியப்பட வேண்டிய உண்மை.

இப்போது ஒரு பூ என்பது அந்தப் பூவைத் தரும் தாவரத்தால் உள்வாங்கிக் கொள்ளப்பட்ட தண்ணீரின் மறுவடிவம் என்பது உறுதியாக்கப்பட்டு விட்டது. ஆனால் இந்தப் பூவைத்தருவதற்கு அந்தத் தாவரம் தான் உள்வாங்கிக் கொண்ட தண்ணீரை இலைகளாக வும், கிளைகளாகவும் மாற்றிக் கொள்கின்றது. இந்த இலைகளும், கிளைகளும் தாம் பெற்றுக் கொண்ட தண்ணீரின் பயன்பாட்டை இன்னுமொரு வடிவத்தில் அந்தத்தாவரத்தின் மூலம் உலகுக்குத் தருகின்றன. அதுதான் பூ. இயற்கையின் இந்த அபரிமிதமான பங்களிப்பை நமது வாழ்க்கையுடன் நாம் தொடர்புபடுத்துவோம். அதி பெரும்பான்மையான தாவரங்கள் அதிக இலைகளையும் குறைந்த பூக்களையும் பங்களிப்பு செய்கின்றன. இலைகள் அதிகமாகவும் செழிப்பாகவும் இருக்கும்போது சிறந்த பூக்களையும் அவை தருகின்றன. பல நூற்றுக்கணக்கான இலைகளின் பங்களிப்பின் பின்னரே பூவையும் அந்தத் தாவரம் தருகின்றது. இதிலிருந்து நமக்கு ஒரு உண்மை வெளியாகின்றது. ஒரு பூவைக் கொடுப்பதற்கு நூற்றுக்கணக்கான இலைகளை முதலில் பரவலாக்கித் தானும் உயிர்வாழ்வதுடன் சிறந்த பூக்களைக் கொடுக்கவும் அந்தத் தாவரம் முனைகின்றது. நமது வாழ்க்கையும் இந்தத் தாவரங்களை போன்றது தான் வாசகர்களே.

இப்போது ஒரு தாவரத்தையும் நமது வாழ்க்கையையும் தொடர்புபடுத்துவோம். ஒரு தாவரத்திற்கு அதிமுக்கியமானது தண்ணீர் என்று குறிப்பிட்டுள்ளேன். இந்தத் தண்ணீர் தான் நாம் வாழ்வியலில் பெற்றுக்கொள்ளும் உள்ளீடுகள். ஒரு தாவரத்தைப் போன்றே நாமும் பலகிளைகளை உருவாக்குகின்றோம். குழந்தையிலிருந்து படிப்படியாக வளர்ந்தது. ஒரு தாவரமும் பல கிளைகளும் போல் கணவன் - மனைவி, பெற்றோர் - குழந்தைகள் தலைவன் - தலைவி, முதலாளி - தொழிலாளி எனவும் சமூக அரசியல், பொருளாதார, ஆன்மீக விடயங்களில் பலவாறாகக் கிளைகளை உருவாக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறு உருவாக்கப் பட்ட கிளைகள் மூலம் பல நூற்றுக்கணக்கான அறிதல், உணர்தல் எனும் இலைகளைப் பரப்பிவிடுகின்றோம். ஒரு தாவரம் எதிர் கொள்ளும் சாதகமான, பாதகமான விடயங்கள் போல் நாமும் எதிர்கொள்கிறோம். தாவரங்களின் இலைகளில் பறவைகள் எச்சங்களையிட்டுச் செல்லும், தூசிகள் படிந்து அதன் குளுமையைத் தடைசெய்யும். பூச்சிகளும் வண்டுகளும் சிறு சிறு துவாரங்களை இட்டுச் செல்லும். பூப்பதற்கான ஆரம்பத்தை அறிமுகப்படுத்தும் போது குரங்குகள் தாவித் தாவிக் கும்மாளம் போட்டுக் காயப்படுத்தும். இவையெல்லாம் இத்தாவரங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்.

இந்தச் சவால்களில் எச்சங்களும் தூசிகளும் அடுத்துவரும் மழையால் (தண்ணீர்) அகற்றப்பட்டு இலைகளும், கிளைகளும் புதுப்பொலிவு பெறும். பூச்சிகளும், வண்டுகளும் குரங்குகளும் எவ்வளவு தான் கொட்ட மடித்தாலும் தண்ணீரை மீண்டும் மீண்டும் உள்வாங்கி இந்தப் பூச்சிகளும், வண்டுகளும் குரங்குகளும் புறமுதுகுகாட்டி ஓடும்வரை புதிய இலைகளையும், கிளைகளையும் பெருக்கி கொண்டேயிருக்கும். ஏன் தெரியுமா? அதன் இலட்சியம் தனது வாழும் காலத்தில் பூவைக் கொடுக்க வேண்டும் என்பதுதான். ஒரு தாவரத்தின் தன்மை அதன் பூவின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. ஏனெனில் பூவே அத்தாவரத்தின் மனோபாவமாகின்றது. பூ சிறந்ததாயின் தாவரத்தையும் ஏற்றுக் கொள்கிறோம். பூ பயனற்றதாயின் தாவரத்தையும் ஒதுக்கி விடுகிறோம்.

### ஆம் வாசகர்களே!

நமது வாழ்க்கை ஒரு தாவரம். அதன் வாழ்வுக்குத் தேவைப்படும் தண்ணீர் தான் நமது உள்ளீடுகள். அறிதல் உணர்தல் எனும் இலைகளையும் கிளைகளையும் பரப்பிப் பெறும் உள்ளீடுகள், நமது, மனோபாவங்களின் மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையா கின்றன. நமது நோக்கம் தூய்மையாய் இருப்பின் இலைகளையும் கிளைகளையும் நாம் பரப்பும்போது ஒரு சிலரது எச்சங்களும், தூசிகளும் மழை எனும் சிறந்த உள்ளீடுகளைக் கொண்டவர்களால் கழுவப்பட்டு புதுப்பொலிவு நமக்குக் கிடைக்கும். பூக்களில் பயன்தரும் பூக்கள், பயனற்ற பூக்கள் எனப் பிரிவுகள் உண்டு. ஒரு தாவரம் பூவைத் தரமுடியுமே யொழிய அதன் தன்மையை அதனால் மாற்றமுடியாது. ஒவ்வொரு தாவரமும் அது உள்வாங்கும் தண்ணீரின் வெளிப்பாட்டின் சிறப்புப் பங்களிப்பாகப் பூவைத் தருகின்றது. ஆனால் அந்தப் பூவின் சிறப்பையும் சிறப்பின்மையையும் தீர்மானிக்கும் திறன் அவற்றுக்கு கிடையாது. ஆனால் வாழ்க்கை எனும் நமது தாவரத்தில் நாம் உள்வாங்கிக் கொள்ளும் தண்ணீர் எனும் உள்ளீடுகளை முற்றுமுழுதாக ஒழுங்குபடுத்திச் சிறந்த மனோபாவங்களாக மாற்றக்கூடிய அத்தனை தகுதியும் திறனும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. நாம் ஒவ்வொருவரும் தண்ணீரை உள்வாங்கி அழகும், நறுமணமும், இனிய தேனும் ஒருங்கிணைந்த பூவைத் தரும் தாவரத்தைப் போன்று நமது வாழ்வில் நாம் பெற்ற உள்ளீடுகள் அவை சாதகமானவையாக இருந்தாலும் சரி, பாதகமானவையாக இருந்தாலும் சரி பிறருக்கு மகிழ்ச்சியையும் சிறப்பையும் உயர்வையும் தரும் மனோபாவப் பூக்களாக மலரச் செய்வோம். ஒரு பூ அந்தத் தாவரத்தின் மனோபாவம் மட்டுமல்ல நமது மனோபாவமும் தான் என்பதை ஒவ்வொரு பூவையும் பார்க்கும் போது நினைவுபடுத்திக் கொள்வோம்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹராஜியின் உரைகள்**



| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3223 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# ஆயுள் காப்புறுதி கம்பனி ஒன்று கனடாவில் சரிந்து கொண்டு போனால்? காப்புறுதி செய்தவரின் நிலை என்ன?

## கனடிய தகவல் தொடர் 113

கடந்த யூலை 02, 2009!
திடீர் என ஒரு அதிர்ச்சியான செய்தி! அந்த மனிதன் இன்று மரணமாகிவிட்டார். அவரைத் தெரிந்தவர்கள் யாவருக்கும் இது ஒரு அதிர்ச்சியான செய்தி என்பதில் சந்தேகமில்லை.

தனது உயிரிழப்பின் பின்பு தமது மனைவி, பிள்ளைகள் நிர்க்கதியாகிவிடக்கூடாது என்னும் நோக்கில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்காக சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு மே 07, 1999 யில் சந்தித்ததே எனது முதல் சந்திப்பு.

இன்று அந்த மனிதன் மரணமாகிவிட்டார்.

அந்த நேரம் அவர் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொண்டது "நோர்விச் யூனியன்" (Norwhich Union) என்னும் பிரித்தானியாவினை தலைமையகமாக கொண்டு கனடாவிலும் இயங்கி வந்த ஒரு கம்பனி ஆகும். சில வருடங்களின் பின்பு அந்த கம்பனி கனடாவில் இயங்கவில்லை. அந்த பெயரில் காப்புறுதி கம்பனியும் கனடாவில் இல்லை. இதே காப்புறுதி கம்பனியில் ஒப்பந்தங்கள் வைத்திருந்த சகலருக்கும், இக்கம்பனியில் இருந்த சகல ஒப்பந்தங்கள், முதலீட்டு திட்டங்கள் யாவும் இன்னொரு கம்பனிக்கு மாற்றப்பட்டது என்ற அந்த செய்தி மட்டும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. அந்த புதிய கம்பனியின் பெயர்.

"ஏ. ஐ. ஜி இன்சூரன்ஸ் கம்பனி ஒவ் கனடா" (American Insurance Group Of Canada) என்பதாகும். அமெரிக்காவினை தலைமையகமாக கொண்டு பிரபல்யமாக இயங்கிய இக்கம்பனியின் சர்வதேச பிரிவின் ஒரு கிளை நிறுவனமாக இக்கம்பனி கனடாவிலும் இயங்கி வந்தது.

என்ன ஆச்சரியம்?
சர்வதேச வர்த்தக செய்திகளில் மீண்டும் சில வருடங்களில் பின்பு ஒரு பரபரப்பான செய்தி! அது வேறு ஒன்றுமல்ல.!
பிரபல்யமான இவ் ஏ. ஐ. ஜி லைவ் இன்சூரன்ஸ் கம்பனியும் அமெரிக்காவில் சரிந்து போகின்றது என்பதாகும்.

கனடாவில் இயங்கி வந்த இக்கம்பனியின் சர்வதேச பிரிவின் கிளை நிறுவனமாக "ஏ. ஐ. ஜி லைவ் இன்சூரன்ஸ் கம்பனி ஒவ் கனடா" என்னும் பெயரும் சில வருடங்களின் பின்பு செயல்படுவது இல்லை. இக்கம்பனியின் வாடிக்கையாளர்களின் ஒப்பந்தங்கள், முதலீட்டு திட்டங்கள் யாவும் இது சரிந்து கொண்டு போகும் போது, இன்னொரு கம்பனிக்கு மாற்றப்பட்டுவிட்டது அல்லது இன்னொரு கம்பனியினால் வாடிக்கையாளர்கள் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக இதன் ஒப்பந்தங்கள், அரசின் நிர்ப்பந்தத்தினாலும் தலையீட்டினாலும் விலை கொடுத்து வாங்கப்பட்டு விட்டன என்ற செய்தி பகிரங்கப்படுத்தப்பட்டது. புதிதாக இக்கம்பனியின் ஒப்பந்தங்கள், முதலீட்டு திட்டங்கள் யாவும் மாற்றம் செய்து வைக்கப்பட்டது. "பாங்க் ஒவ் மொன்றியல் லைவ் இன்சூரன்ஸ் கம்பனி" (BMO Life Insurance - Bank Of Montrael Life Insurance Company) என்னும் கனடாவினை தலைமையகமாக கொண்டு இயங்கும் கம்பனிக்கு இவை யாவும் மாற்றப்பட்டது. இங்கு இந்த மரணமான மனிதனின் விடயத்தில், அடிப்படையில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து வைத்திருக்கும் பத்திரங்கள் யாவும் ஒரு கம்பனியின் பெயரில் ஆகும். ஒப்பந்தங்கள் யாவும் வேறு கம்பனியின் பெயரிற்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டது என்பது மட்டும் கடிதத்தில் ஒரு செய்தியாக காப்புறுதி செய்தவருக்கு வந்து சேர்ந்திருந்தது.

பத்து வருடங்களுக்கு முன்பு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து இன்று மரணமாகியவரின் கையில் இருக்கும் ஒப்பந்த பத்திரங்கள் யாவும் நோர்விச் யூனியன் லைவ் இன்சூரன்ஸ் கம்பனியினால் (Norwhich Union Life Insurance Company) வழங்கப்பட்டதே ஆகும். அதனை தவிர ஏதோ கம்பனிகள் மாறியது என்ற செய்தியாக கடிதம் வந்திருந்தது என்ற ஒரு ஞாபகம் மாத்திரம் அவரது குடும்பத்தவர்களுக்கு இருந்ததே தவிர வேறு ஒரு பத்திரமும் அவர்கள் கையில் இல்லை. ஆனால்

* அதே பெயரில் காப்புறுதி இலக்கம்
* அதே தொகை
* அதே காப்புறுதி ஒழுங்கு சட்ட விதிகள் அவ்விதிகளின் படி உள்ள விலைகள்.
* அதே கம்பனி இருந்த இடத்தில் கம்பனியின் விலாசம். அதே தொலைபேசி இலக்கம்.
* ஒரு மாற்றமும் இல்லாது வங்கி கணக்கில் இருந்து தொடர்ச்சியாக மாதா மாதம் கட்டணம் அதே காப்புறுதி ஒப்பந்தத்திற்கு போய் கொண்டேயிருந்தது.

ஆனால் கம்பனியின் பெயர் மட்டும் இரண்டாவதுக்கு மாறி இப்போது மூன்றவதாக உள்ளது. மரணமாகியவரின் செய்தியினை பெற்று, காப்புறுதி கோரும் விண்ணப்பப்படிவங்களை பரிசீலனை செய்து எதுவிதமான தடங்கலும் இல்லாது காப்புறுதி தொகையின் காசோலையினை மரணமாகியவரின் குடும்பத்திற்கு வழங்கியது மூன்றாவதாக கைமாறிய "பாங்க் ஒவ் மொன்றியல் லைவ் இன்சூரன்ஸ் கம்பனி" (BMO Life Insurance Company) என்பதாகும்.

ஆனால் ஆயுள் காப்புறுதி செய்தவரிடம் கையில் இருக்கும் ஒப்பந்த பத்திரங்கள் யாவும் "நோர்விச் யூனியன் லைவ் இனிசூரன்ஸ் கம்பனி" (Norwhich Union Life Insurance Company) என்று கருத்து எதுவும் எடுக்காது எதுவித பிரச்சனைகளும் இல்லாது பெருந்தொகை காசோலை மரணமாகியவரின் குடும்பத்திற்கு போய் சேர்ந்தது. **பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு முகவர் என்ற ரீதியில் கம்பனியின் சார்பாக மிக பெரும் காசோலையினை நேரடியாக கையளிக்கும் போது ஏற்படும் ஒரு பரம திருப்தி உள்ளதே!** அது வர்த்தகம் அல்ல! ஒரு சேவையின் திருப்தியாகவே தென்படும்.

இது ஒன்று அல்ல! இப்படி ஏராளமான அனுபவங்களை எங்கள் முகவர் தொழில் வாழ்வில் இங்கு குறிப்பிடலாம். இவ் அனுபவரீதியான சம்பவங்களை தொடர்ந்து இங்கு குறிப்பிட்ட தலைப்புக்கு வருவோம்.

### ஆயுள் காப்புறுதி கம்பனி ஒன்று கனடாவில் சரிந்து கொண்டு போனால்? காப்புறுதி செய்தவரின் நிலை என்ன?

கனடாவில் உள்ள சகல காப்புறுதி கம்பனிகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் யாவற்றினையும் கனடிய மத்திய மாகாண அரசுகளின் நிதி அமைச்சு ஒவ்வொரு நிமிடமும் கண்காணித்து கொண்டேயுள்ளது.

எந்தவொரு காப்புறுதி கம்பனி, வங்கி, நிதி நிறுவனமும் இக்கண்காணிப்பில் இருந்து தப்பவே முடியாது. ஒரு கம்பனியின் நிதி நிலைமைகள், வருமானங்களை கூர்ந்து பார்க்கும் மத்திய மாகாண அரசுகளின் நிதி அமைச்சு, இக்கம்பனி சரிந்து கொண்டு போகின்றது என்றால் வாடிக்கையாளர் எந்த நிலையிலும் பாதிக்காமல் இருப்பதற்காக இன்னொரு கம்பனிக்கு ஒப்பந்தங்களை மாற்றி அமைத்து ஏதோ, ஒழுங்குகளை செய்து கொள்ளும்.

சில சந்தர்ப்பங்களில் ஒரு காப்புறுதி கம்பனியின் ஒப்பந்தங்களை இன்னொரு கம்பனி வாங்கி கொள்ளும் நிலைமைக்கு அல்லது அவற்றினை ஏனைய கம்பனிக்கு விற்பனை செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு காப்புறுதி கம்பனிகள் அரசினால் தள்ளப்படும்.

சில நேரங்களில் அரச நிதி அமைச்சுகளின் கண்காணிப்புக்களையும் மீறி ஒரு ஆயுள் காப்புறுதி கம்பனி ஒன்று சரிந்து சென்று கொண்டிருக்கும் நிலைமைக்கு உள்ளடக்கப்பட்டால் வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக பாதுகாப்பினையும், உத்தரவாதத்தினையும் அரச நட்டஈடு வழங்கும் நிறுவனம் ஒன்று வழங்குகின்றது.

இந்நிறுவனமும் அது தொடர்பான விபரங்களும் முன்னர் "Compensation Corporation" என்னும் பெயரில் இருந்து கடந்த டிசம்பர் 01, 2005 ஆம் ஆண்டிலிருந்து பின்வருமாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ரொரன்ரோவில் அதன் முகவரி பின்வரும் இடத்தில் உள்ளது.

Assuris, 250, Yonge Street
Suite # 3110, P.O Box - 23
Toronto, ON M5B 2L7
இணையத்தளம் www.Assuris.ca
தொலைபேசி - 1.866.878.1225
மின்அஞ்சல் - Info@Assuris.ca

கனடாவின் சகல ஆயுள் காப்புறுதி கம்பனிகளும் தங்களை இந்நிறுவனத்தில் தங்களின் வங்குரோத்து நிலைமை ஆபத்துக்கு பாதுகாப்பாக ஒரு காப்புறுதி செய்து இந்நிறுவனத்தின் அங்கத்தவராக இருக்க வேண்டும் என்பது அரசின் நிர்ப்பந்தமாகும். வாடிக்கையாளர் ஒருவர் ஆயுள் காப்புறுதி கம்பனியின் வங்குரோத்து நிலைமையினால் பாதிக்கப்பட்டால் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் $200,000 டொலர் வரை இவ் அரச நிறுவனம் உத்தரவாதம் வழங்குகின்றது.

$200,000 டொலருக்கு மேற்பட்ட ஆயுள் காப்புறுதி தொகைகளுக்கு அம்மொத்த ஆயுள் காப்புறுதி தொகையில் 85% வீதம் வரை உத்தரவாதம் வழங்குகின்றது. உடல் இயங்க முடியாத நிலைமையில் மாத வருமான இழப்பீடு பெற ஒப்பந்தம் செய்து வைத்திருக்கும் காப்புறுதி ஒப்பந்தத்தில் (Disability Income Insurance) மாதம் $2,000 டொலர் வரை உத்தரவாதம் இந்நிறுவனம் வழங்குகின்றது.

இதற்கு மேற்பட்ட பெருந்தொகை மாதவருமான இழப்பீடு ஒப்பந்தமாக இருந்தால் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகையின் 85 வீதத்திற்கு உத்தரவாதம் வழங்குகின்றது. இது தவிர ஆயுள் காப்புறுதி கம்பனிகளில் ஒப்பந்தம் வைத்திருப்பவர்களுக்கு கம்பனி மீது ஏதாவது முறைப்பாடுகள் அல்லது பிரச்சனைகள் இருந்தால் பின்வரும் முகவரியில் உள்ள அரச நிறுவனத்திற்கு தங்கள் முறைப்பாடுகளை எடுத்துச் செல்லும் போது அதனை விசாரித்து நியாயமான தீர்வை வழங்குவதற்கு என என்றும் தயார் நிலையில் ஒரு நிறுவனம் உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு! ரொரன்ரோவில் இந்நிறுவனத்தின் முகவரி.

Canadian Life Health Insurance Association
01, Queen Street East , Suit # 1700
Toronto, ON MSC 2X9
தொலைபேசி - 416.777.2221
இணையத்தளம் - www.clhia.ca

வாடிக்கையாளர்களுக்கு ஆயுள் காப்புறுதி கம்பனியோடு உள்ள பிரச்சனைகளையும் முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கும் ஆலோசனை வழங்கவும் எதுவித செலவும் இல்லாது என்றும் இவ் அரச நிறுவனம் கை கொடுக்கும் நிலையில் உள்ளது.


### எனவே ஆயுள் காப்புறுதி கம்பனி ஒன்று சரிந்து கொண்டு போனால்?

வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கப் பட்டால்? காப்புறுதி செய்தவரின் நிலை என்ன? என்ற அச்சம் எதுவும் கனடாவில் காப்புறுதி செய்தவர்களுக்கு என்றுமே தோன்றத் தேவையில்லை. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள், சரத்துக்கள், விதிகளை புரிந்து கொண்டு தங்கள் வருமானங்கள், தேவைகளுக்கு ஏற்ற மாதிரி ஒரு ஒப்பந்தத்தில் சேர்ந்து அதன் விலை என குறிப்பிடப்பட்ட மாத அல்லது வருட கட்டுப்பணத்தை தொடர்ந்து செலுத்தி அவ் ஒப்பந்தம் ரத்தாகும் நிலைமைக்கு உள்ளாகாமல் பார்த்துக் கொண்டால் சரி.

காப்புறுதி என்றும் கை கொடுக்கும் "அது உறுதியான நம்பிக்கை" சரியாக கை கொடுக்கின்றதா? என்பதனை அரசு தமது உத்தரவாதத்துடன் கண்காணிக்கும். ஆயுள் காப்புறுதி முகவர்களின் செயல்பாடுகளையும் அரசு கண்காணித்து கொண்டேயுள்ளது. அச்சமே தேவையில்லை. காப்புறுதி என்பது என்றும் கனடாவில் பாதுகாப்பானதாகும்! சந்தேகமேயில்லை.

கம்பனிகள் சரியலாம். ஆனால் அதனை நம்பி பின்னால் தொடர்ந்து கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களை கனடிய மத்திய, மாகாண அரசுகள் என்றும் சரியவிடாது.

இதுவே ஆயுள் காப்புறுதியின் உண்மைத் தத்துவம் ஆகும்.




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# கல்லிலே கலை வண்ணம் - திருவரங்கம்

கர்நாடகாவில் உதயமாகி, தமிழகத்திற்குள் சீறிப்பாய்ந்து வரும் காவிரி, அகண்ட காவிரியாகத் தன் வேகத்தைக் குறைத்து, கொள்ளிடத்தில் இரண்டாகப் பிளந்து செல்லும் இடத்தில், நடுவே சிறிய தீவாக மலர்ந்திருக்கும் அற்புதமான ஒரு ஷேத்திரம் ஸ்ரீரங்கம். உற்சாகமூட்டும் ஒரு இடம், மட்டுமின்றி 'தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம்' என்று சிறப்பித்து போற்றும் புகழ்பெற்ற தலமாகும். நூற்றி எட்டு வைஷ்ணவ திவ்ய தேசங்களில் முதன்மையானதாகவும் மிகவும் புகழ்பெற்றதாகவும் விளங்குவது. இதற்குக் காரணம், இங்குள்ள ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில். திவ்விய தேசங்கள் அனைத்திலும் அன்று முதல் இன்றுவரை ஈடும் இணையும் இன்றி முதன்மைத் திருக்கோயிலாய்த் திகழ்வது இக்கோயிலாகும். ஸ்ரீரங்கத்தை வாழ்வில் ஒருமுறை சுற்றி வந்தால்போதும், இந்துவாகப் பிறந்தவர்கள் தங்கள் வாழ்க்கைக்கான அர்த்தத்தை அடைந்து விடுவார்கள் என்கிறார்கள். இப்போது நமது பயணம் இந்த ஸ்ரீரங்கத்துக்குத்தான்.

கங்கையின் தூயதாய காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் ஆற்றினால் சூழப்பட்டு ஓர் தீவு போல் அமைந்துள்ள ஸ்ரீரங்கம், மிகப் பெரிய ரங்கநாதசுவாமி கோயிலின் ஏழு சுற்று மதில்களாலும் சூழப்பட்டுள்ளது. ஆம், 600 ஏக்கர் பரப்பளவு மட்டுமே கொண்ட ஒரு சிறு தீவு நகரம்தான் ஸ்ரீரங்கம். ஆனால், ஸ்ரீரங்கம் கோவிலும் கோவில் சார்ந்த பகுதிகளும் கட்டுமஸ்தானமும் ஒரு மிகப்பெரிய ஒரு நகரத்துக்குரிய தோற்றத்தை இந்த ஊருக்குத் தருகின்றன. ரயிலும் சரி, பேருந்தும் சரி கொள்ளிடம் ஆற்று பாலத்தில் நுழைந்தவுடனே தெரிய ஆரம்பிக்கும் ஸ்ரீரங்கம் கோவில் ராஜகோபுரம், வண்டி ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்தை வந்து அடையும் போது அதன் பிரமாண்டத்தை நன்றாக உணர்த்தும். குறிப்பாக இரவு அல்லது அதிகாலை நேரத்தில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் பொழுது அதை பார்ப்பவர்கள் பிரமிக்காமல் இருப்பது வெகு அரிது.





**வழிப்போக்கன்**

ரங்கநாதர் கோயில்தான் ஸ்ரீரங்கத்தின் மையம். 156 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டிருக்கும் ரங்கநாதர் கோயில் ஏழு பெரிய சுவர்களால் சூழப்பட்டுள்ளது. ஒவ்வொரு சுவர்களும் ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்து அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஏழு சுவர்களும் ஏழு உலகமாக கருதப்படுகிறது. இதன் வெளிச்சுவரான ஏழாவது சுவரின் நீளம் 3072 அடியும் அகலம் 2521 அடியும் உள்ளது. இந்த ஏழு பிரகாரங்களுக்கு ஏழு திருவீதிகள் உள்ளன. ஏழு திருவீதிகளும் ஒரே

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 67

அமைப்பில் காட்சியளிக்கும். முதன் முறையாக செல்பவர்கள் மட்டுமல்ல, பலமுறை சென்றவர்கள் கூட இந்த ஏழு திருவீதிகளில் குழம்பித்தான் போவார்கள். ஏழாவது திருவீதி சித்திரை திருவீதி என்று அழைக்கப்படுகிறது. ஆறாவது திருவீதியில் உள்ள ஆறாவது பிரகாரம் திருவிக்கிரமன் திருவீதி என்றும், ஐந்தாவது பிரகாரம் அகலங்கன் திருவீதி என்றும், நான்காவது பிரகாரம் ஆலிநாதன் திருவீதி என்றும், மூன்றாவது திருவீதியில் உள்ள மூன்றாவது பிரகாரம் குலசேகரன் திருவீதி என்றும், இரண்டாவது திருவீதியில் உள்ள இரண்டாவது பிரகாரம் ராஜ மகேந்திரன் என்றும், முதலாவது திருவீதியில் உள்ள ஒன்றாவது பிரகாரம் எம்பெருமான் ஸ்ரீரங்கநாதன் கிடந்த கோலத்தில் சேவை செய்வதால் இது தர்ம வர்மன் திருச்சுற்று என்றும் அழைக்கப்படுகிறது.

சுற்று மதில்களில் வாயில்களாக 21 கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பெரியது இராஜகோபுரம். ஸ்ரீரங்கத்தின் சிறப்புக்கு காரணம் இதுதான். இக்கோபுரம் ஆசிய துணை கண்டத்திலேயே மிகப்பெரிய கோபுரம் எனச் சொல்லப்படுகிறது. இக்கோபுரத்தை கட்டி முடிப்பதற்கு கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் எடுத்துக்கொள்ளப்பட்டதாம். பதிமூன்று அடுக்குகளுடன் கூடிய இக்கோபுரம் 236 அடி உயரம் உள்ளது. இதன் வெளிப்புறச் சுற்று



மதிலின் அளவு 950 ஒ 816 மீட்டர் ஆகும். இதற்குள் ஒன்றுக்குள் ஒன்றாக ஏழு சுற்று மதில்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுற்று மதில்களின் மையப் பகுதியில் அரங்கநாதசுவாமி கோயில் உள்ளது. இது தெற்கு நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது. கோயிலிலிருந்து நான்கு திசைகளிலும் வெளிப்புறம் நோக்கிச் செல்லும் வகையில், சுற்று மதில்களில் ஒரே வரிசையில் கோபுர வாயில்கள் காணப்படுகின்றன. இராஜகோபுரத்தோடு கூடிய பிரதான வாயில் தெற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றி உட்புறமாக அமைந்துள்ள நான்கு சுற்றுக்களும் கோயில் சார்ந்த பயன்பாடுகளுக்கு உரியவை. வெளிப்புறமாக உள்ள மூன்று சுற்றுக்களுக்குள்ளும் வீடுகள், வணிக நிறுவனங்கள், தெருக்கள் என்பவை கொண்ட முழு நகரமும் அடங்கியுள்ளது.

ஸ்ரீரங்கநாதர் கோயிலின் மூலவர் ஸ்ரீரங்கநாதர், அவருக்குத் துணை ரங்கநாயகி. கோயிலின் கர்பக்கிரகத்தில் பாம்புகளின் படுக்கையில் படுத்தபடி பள்ளிக்கொண்டிருக்கும் ரங்கநாதர் சுயம்புவாகத் தோன்றியதாகக் கூறப்படுகிறது. சீதையை மீட்க உதவிய விபீஷணனுக்கு, தான் பூஜித்த ரங்கநாதரை தந்தான் ராமன். ரங்கநாதர் சிலையுடன் இலங்கை திரும்பிக் கொண்டிருந்த விபீஷணன், வழியில் காவிரியைக் கண்டான். அது சுழன்றோடிய அழகு கண்டு சுவாமியை கீழே வைத்துவிட்டு நீராடினான். பின்பு, திரும்பி வந்த விபீஷணன் சிலையை எடுக்க முயன்றபோது முடியவில்லை. பின்னர் தர்மவர்மா என்ற மன்னன், இங்கேயே தங்கிய ரங்கநாதருக்கு கோயில் எழுப்பினான் என்ற கதையும் உள்ளது. கர்ப்பகிரகத்தில் சுமார் எட்டு அடி உயரத்தில், ரங்கநாயகியை தன் இடது தொடையில் உட்கார வைத்து ஆலிங்கன நிலையில் இருக்கும் ரங்க நாதர், வலது கையில் அபயஹஸ்தம் காட்டுகிறார். "என்னை நம்பியவர்களை நான் கைவிட்டதில்லை" என்பது போல் இந்த அமைப்பு உள்ளது.

பொதுவாக கிழக்கு பார்த்திருக்கும் பெருமாள் இங்கு மேற்கு பார்த்த சன்னதியில் இருக்கிறார்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதரைக் காண கண்கோடி வேண்டும் என்று சொல்லுவார்கள். அதற்குக் காரணம் இக்கோயிலில் அமைந்திருக்கும் தூண்களும் அதிலுள்ள சிற்ப வேலைப்பாடுகளும் தான். ஒவ்வொரு தூணிலும் உன்னத சிற்ப வேலைப்பாடுகள் நம்மை பரவசத்தில் ஆழ்த்தும். அந்தளவுக்கு ஒவ்வொரு தூணும் ஒரு வினோதம். ஒவ்வொரு தூணையும் பற்றி, அதன் மகத்துவத்துடன் சொல்ல இங்கே இடம் போதாது என்பதால், இப்போதைக்கு சுருக்கமாகச் சொல்லிச் செல்கிறேன். ஆனால், நீங்கள் ஸ்ரீரங்கம் வரும் பொழுது சற்று அமைதியாக, அவசரமில்லாமல் தூண் தூணாக பார்த்துக்கொண்டே செல்லுங்கள்.

ராஜகோபுரத்தைக் கடந்து கோயிலுக்குள் நுழைந்ததும் மண்டபத்தின் இடப்பக்கம் அழகிய கிருஷ்ணர் கோயில் இருக்கிறது. இது சமீபத்தியது. ஆனால், அதிலுள்ள சிற்பங்கள் மிக மிக அற்புதமானவை. அந்த கிருஷ்ணர் கோயிலுக்கு அருகே ஒரு மாடிப்படி இருக்கிறது. அந்த மாடிப்படியில் ஏறிப் போனால் ஒரு சமதளம் வரும். அந்த சமதளத்திலிருந்து பார்த்தால், நாலுபக்க கோபுரங்களும் மிகப்பெரிய கோயிலின் மேற்பரப்பும், பொன்வேய்ந்த விமானமும் சூரியவெளிச்சத்தில் தகதகத்து தெரியும். மாடியிலிருந்து கீழே இறங்கினால் இடதுபக்கம் சக்கரத்தாழ்வார் சந்நிதி. வலது பக்கம் ராமானுஜருடைய சந்நிதி. சக்கரத்தாழ்வார் இறைவனின் ஆயுதம், சக்கரத்தாழ்வாரை வணங்கினால், நமக்கு தீவினை செய்தவர்கள் அழிந்து போவார்கள், ஏவல், பில்லி சூனியங்கள் விலகிப்போய்விடும் என்பது நம்பிக்கை. வலதுபக்க ராமானுஜர் சந்நிதியும் மிக அற்புதமானது. இங்கே ஒரு சுதை உருவம் நகங்களோடும் கண் புருவங்களோடும் இமைகளோடும் நாசித் துவாரங்களோடும் வடிந்த உதடுகளோடும் அமர்ந்திருக்கிறது. ராமானுஜர் உள்ளே உலோகச் சிலையாய் தன் உடம்பை மாற்றிக்கொண்டு அமர்ந்துவிட அதன் மீது குங்குமப்பூவால் சாந்து எழுப்பி அவரை பந்தனம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டாலும், அதை இல்லையென்று மறுக்கிறவர்களும் இருக்கிறார்கள்.

இந்த இரண்டு சந்நிதிகளையும் தரிசித்து உள்ளே போனால் அற்புதமான கருடமண்டபம் இருக்கிறது. இங்கு மிக உயரமான கருடர் சிலை இருக்கிறது. அந்த சிலை சுதையால் ஆனது. பெரிய விழிகளும் கூர்மையான மூக்கும் கூப்பிய கைகளும் படபடக்கும் இறக்கையும் கொண்டது. இந்தச் சிலையை உற்றுப் பார்க்க லேசாய் ஒரு பயம் வருவது இயல்பு. இந்த இடத்தில் தத்தை முனி என்பவர் சமாதி கொண்டிருக்கிறார் என்று சொல்லப்படுவதும் உண்டு. அந்த மண்டபம் முழுவதும் அரசர்களின் சிலைகளும் சேனாதிபதிகளின் சிலைகளும் நிறைந்திருககிறது. அங்கிருக்கும் அரசர்களுடைய உருவங்களையும் உடைகளையும் தொப்பிகளையும் வியப்போடு பார்த்தவண்ணம் நீங்கள் இன்னும் உள்ளே நுழையலாம். உள்ளே நுழைய வலது பக்கம் பத்து படிக்கட்டுகளுக்கு மேல் ஒரு சிறிய

தொடர்ச்சி 28ஆம் பக்கம்



**COTTAGE / CAMPGROUND FOR SALE**
**Property and Business**

*10 River front cottages with 1-2-3 bedrooms fully equipped comfortable house keeping. 20 trailer homes. One bungalow house with double car garage. Big party hall. The property has own access to the front river. Motor boating, fishing and swimming, 3 boats. 1 Johndeer, 2 golf carts.* *1½ hours from Toronto*



Sugu: 416.727.6525 www.hickorygrovecottages.com www.troutwatercamping.com

# வன்குரலுக்கு எதிரான கலகக் குரல்

## 1999

(Canada - 2009, 111 mins, HDCAM)
In Tamil with English subtitles
**Directed By**: Lenin M. Sivam
**EXEC PROD**: Sabesan Jeyarajasingam
**PROD**: K. K. Kaandee, Malini Ponnambalam
**SCR**: Lenin M. Sivam
**CAM**: Sabesan Jeyarajasingam
**ED**: Sinniah Arulshankar
**MUS**: Rajkumar Thillaiyampalam
**Cast**: Suthan Mahalingam, Thelepan Imman Somasegaram, Kaandee Kana, Ampalavanar Ketheeswaran

### Gangs in Downtown and Scarborough

**DOWNTOWN**

Regent Park Crew, Point Blank Souljahs,Bleeker Crew'Blake Street Massive,Project Originals (P.O Bloods/Boys), McCormick Boys, L.A. Boys (Latino Americano), Parkdale Crew. Pelham Park Bloods, Big Circle Boys, Asian Assassins, True Portuguese Bloods, MS-13 (El Savador gang), Esplanade Crew, Christie Boys, Silver Boys, Dovercourt Boys, Lakeshore Crips

**SCARBOROUGH**

Malvern Crew, Markham Boys, Juice Mob (Malvern sub-group), 400 Crew, Galloway Boys, Get Mad Crew, Gilder Boys,Versache Crew, MNL Souljahs (Markham & Lawrence), Glendower Crips, Bay Mills Crips, Chester Le crew,18 Buddahs, AK Kannan (sri lankan gang), Mornelle Court crew, Ortan Park Bloods, MNE Crew (Markham & Eglinton), Block 13 (Cataraqui), Dean Park Bloods,Tuxedo Boys, Apocalypse Crew

அமெரிக்காவில் பல்வேறு குழுக்கள் உள்ளன. 30,000 குழுக்கள் அமெரிக்காவில் மாத்திரம் உள்ளன. சுமார் 800,000 பேர் இவற்றில் உறுப்பினர்களாக உள்ளனர். லொஸ் ஏன்சல்ஸ், நியு யோர்க், சிக்காகோ போன்ற நகரங்கள் குழுச் சண்டைக்கு பிரசித்தி பெற்றவை. இக்குழுக்கள் பல்வேறு வகைப் பட்டவை. மோட்டார் சைக்கிள் குழு, சிறைக் குழு என பல. உலகின் பிரசித்தி பெற்ற வன்முறைக் குழுக்கள் இவை. The Order of Assassins, Adam the Leper's gang, Indian Thugs, Chinese Triads, Snakehead, Japanese Yakuza, Irish mafia, American Old West outlaw gangs, Russian mafia and Italian Mafia crime families இவை செய்து வருகின்ற வன்முறைகள் எண்ணிக்கையில் அடங்கா. லண்டனிலும், அமெரிக்காவிலும் வன்முறைக் குழுக்கள் இளைஞர்களை கவருவதற்கு காரணம் வறுமை என்பதை பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. 1920ல் சிக்காகோ நகரில் ஆயிரத்துக்கு மேற்பட்ட வன்முறைக் குழுக்கள் இருந்துள்ளன. இந்த வன்முறைக் குழுக்கள் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

ரொரன்ரோ வன்முறைக் குழுக்களில் நாங்கள் ஒரு சிறு துளிதான். நாங்கள் என நான் குறிப்பிடுவது இவர்கள் எங்களில் ஒருவர் என்பதை சுட்டிக் காட்டவே. தமிழ்க் குழுக்களின் பெயர் பிரசித்தம் பெற்றமைக்கு காரணம் பிரதான ஊடகங்கள் கொண்டுள்ள இனவாதக் கருத்துக்களே. 1987களில் தொடங்கிய இந்த தமிழ் குழுச்சண்டைகள் 2000களில் உச்சக்கட்டத்தையடைந்து, 9-11ன் பின்னர் ஓரளவிற்கு கட்டுக்குள் வந்து விட்டது.



- ரதன் -

தமிழ்க் குழுக்களின் பின்னணியில் ஆரம்பத்தில் விடுதலை இயக்கங்களும் பிரதான பங்கு வகித்தன. பின்னர் இது இவர்களது கட்டுப்பாட்டை மீறி வளர்ந்து விட்டது. ஊர்ச் சண்டைகள் ஓய, பின்னர் சுதந்திரமாக பல குழுக்கள் தோன்றின. இக்குழுக்கள் பிரதான-மாக பழிக்கு பழிவாங்கல் செயல்களிலேயே பங்கு வகித்தன. மற்றைய குழுக்கள் போல் போதை மருந்து கடத்தல் போன்ற வேலைகளில் ஈடுபடவில்லை. ஆங்காங்கே சில செயல்கள் இடம் பெற்றுள்ளன. இக்குழுக்கள் போதை மருந்து கடத்தல் போன்ற வேலைகளில் பங்கு பற்றியது பற்றிய எந்த தெளிவான ஆய்வும் இல்லை.

கனடிய தமிழர்கள் இக்குழுக்கள் பற்றி கண்டனம் தெரிவித்தாலும் இக்குழுக்களின் இந்த நடவடிக்கைகான காரணம் பற்றி ஆராயவில்லை. அவற்றில் அவர்களுக்கு அக்கறையும் இல்லை. ஊரில் சாதிக் கொலைகள், வல்லை வெளியில் வாகனத்தை மறித்து வெட்டிக் கொலை போன்றவை சர்வ சாதாரணமாக இடம் பெற்றவை. அதன் தொடர்ச்சியே இங்கும். லண்டனில் ஈஸ்ட் காம் குழு போன்றவையும் இப்பின்னணியிலேயே வந்தவை

இக்குழுக்கள் பற்றி பல குறும்படங்கள் வெளிவந்துள்ளன. இப்படங்கள் அனைத்தும் வன்முறைகளுக்கு எதிராகவே குரல் கொடுத்துள்ளன. இதன் தொடர்ச்சியாக லெனினால் உருவாக்கப்பட்டு வன்கூவர் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட படம் 1999. லெனினின் முந்தைய படங்கள் அனைத்தையும் பார்த்துள்ளேன். இவைபற்றிய எனது விமர்சனங்களையும் முன்னர் பதிவு செய்துள்ளேன். அப்படியிருந்தும் லெனின் 1999 ஐ பார்க்குமாறு பல தடவை அழைப்பு விடுத்திருந்தார். இறுதியாக நவம்பர் 05இ 2009 மாலை கடந்த கிழமை ஸ்காபரோ நகர கொலுசிய அரங்கில் (Scarborouh Town centre) இப்படத்தை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு குழுத் தலைவனின் தம்பியை மற்றக் குழுத்தலைவனின் தம்பி சுட்டுக் கொன்று விடுகின்றான். கொலை செய்த தம்பியை எப்படிக் காப்பாற்றுவது? திணறும் குழுத்தலைவனுக்கு மந்திரியின் ஆலோசனை குழுவில் உள்ள மற்ற உறுப்பினன் மேல் கொலைப் பழியை தள்ளி விடுவது. மற்ற உறுப்பினன் உசாரக மாற, உண்மைக் கொலைகாரனுக்கு பதிலாக அப்பாவியை சுட்டுக் கொன்று விடுகின்றான் எதிரணி தலைவன். உண்மையான கொலைகாரனை பொலிஸ் தேடத் தொடங்க கொலைகாரன் தன்னைத்தானே சுட்டுக் கொன்று விடுகின்றான்.

குழுச் சண்டைகளினால் அப்பாவிகள் சுட்டுக் கொன்றதாக பல சம்பவங்கள் இங்கும் கூறப்படுவதுண்டு. அப்படி ஒரு பல்கலைக்கழக மாணவன், பெற்றோரை போரில் இழந்து தாத்தாவுடன் பல கனவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அவன் காதலிக்கும் பெண் மீது, குழு உறுப்பினன் ஒருவனுக்கும் காதல். தனது காதலிக்கு தனது காதலை பிறந்த நாள் வாழ்த்து அட்டை மூலம் தெரியப் படுத்திய மறுநாள் இந்த அப்பாவி சுட்டுக் கொல்லப்படுகின்றான்.

குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நிதான-மாக அறிமுகப்படுத்தப்படுகின்றனர். எப்பொழுதும் காரின் முன் பகுதியில் அமரும் முரட்டுத் தனமான மடோனா. இவர் யார் இவருக்கு எத்தனை வயது? யாருக்கும் தெரியாது. இறுதி வரை நண்பர்களுக்காக உயிரைக் கூட கொடுக்கும் மடோனா. பிரச்சினை என்றவுடன் கழன்று கொள்ளும் நண்பர்கள். எதுவும் பேசாமல் தலைவர் சொல்வதைக் கேட்கும் சுதா சண். ஒவ்வொரு பாத்திரமும் எம்முடன் நடமாடும் இயல்பான பாத்திரங்கள்.

படத்தின் முக்கிய பாத்திரம் 'கதை சொல்லும் உத்தி'. இந்த உத்தியை கையாளும் போது எடிட்டிங்கில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இந்த உத்தி பாத்திரங்களுக்கும் பார்வையாளர்களுக்குமான நெருக்கத்தை அதி-கரித்துள்ளது. தமிழ் திரையுலகைப் பொறுத்தவரை இந்த உத்தி புதியது. முன்னர் சில படங்களில் இவ்வாறான உத்திகள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் இவ்வளவு சிறப்பாக 1999ல் தான் பயன்படுத்தப் பட்டுள்ளது. மூவரின் பார்வையில் படம் நகருகின்றது. குழுத் தலைவன், சுதன், நல்லவன் காண்டி.

தனிநபர் ஒழுக்கத்தின் பின் புலம், அதன் கலாச்சாரம், பாரம்பரியம், அரசியல் அமைப்பு போன்ற புறம் சார்ந்தவற்றில் இருந்துதான் தீர்மானிக்கப்படுகின்றன. படத்தின் ஆரம்பத்தில் இருந்து தமிழ் தேசியப் பிரச்சினை பின் புலத்தில் சொல்லப்படுகின்றது. எமது இரத்தத்தில் இவை ஊறிவிட்டதை அது வெளிப்படுத்துகின்றது. பாத்திரங்கள் அதாவது குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தேசிய பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள். இப்பிரச்சனைக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்குமான தொடர்பு இங்கு தெளிவாகின்றது. (ஆனால் இது மட்டும் காரணமாக முடியாது). நிச்சயமற்ற, ஏதோ வாழ வேண்டும் என்பதற்காக பல இளைஞர்கள் இங்கு வாழ்கின்றனர். இதற்கு பெற்றோரும் எமது சமூகமுமே நேரடிக் காரணம். இவர்களது விரக்தி, நிச்சயமற்ற மன ஊசலாட்ட நிலை போன்றனவற்றிற்கு சமூக மாற்றங்களும், அந்நியமாதல் போன்றவையும் காரணங்கள். இவற்றிற்கு தாய் சமூகத்திலிருந்து வெளியேற்றப்பட்டமையும், புதிய நாட்டில் சொந்த சமூகத்தால் ஒதுக்கப்பட்டு அந்நியமாக்கப்பட்டமையும் காரணிகளாக அமைகின்றன. படத்தின் பாத்திரங்கள் இவற்றை துல்லியமாகக் கூறுகின்றன. ஏனோ தானோ என பாத்திரங்களை படைக்காமல் பாத்திரங்களின் உளவியல் தேக்க நிலையையும் திரையில் பிரதிபலிக்க விட்டமை முக்கியமான விடயம். இவை இப்படத்தின் திரைக்கதையின் கூர்மையை வெளிப்படுத்து கின்றன. தாய் சமூகத்தின் கருதுகோள்களும், படிப்பினையும் இறுதியில் ஏற்பட்ட தற்கொலைக்கு காரணங்கள் எனக் கூறினால், மற்றொரு காரணம் சமூக சக்திகளை எதிர்கொள்ள முடியாமை. உண்மையான கொலையாளியின் நீண்ட மௌனங்கள் அவனது குற்ற உணர்வின் வெளிப்பாடு. மற்றொரு புறம் இவர்களது பிரச்சினைகளை சமூகம் கேட்பதில்லை என்ற கோபம். இவர்களை எமது சமூகம் அந்நியப்படுத்தியே உள்ளது. படத்தில் முக்கிய பாத்திரங்கள் தங்களை சுய விசாரணைக்குட்படுத்தியுள்ளன. குழுத் தலைவன், தான் உருவாக்கப்பட்ட வரலாறை மீள நினைத்தல், அதில் இருந்து ஒதுங்க விரும்புதல், சுதன் இறுதியில் ரொரன்ரோவை விட்டு வெளியேறுதல், உண்மையான கொலையாளி தன்னைத் தானே சுட்டுக் கொள்ளுதல் போன்ற சம்பவங்கள் இதனை உறுதி செய்கின்றன. இது வரவேற்கத்தக்க முடிவு. இன்றைய இளைஞர் சமூகத்திற்கு உதவி புரியும் செயல்.

படத்தில் பாடல் காட்சிகளை தவிர்த்தால் ஒரு பாத்திரமே பெண். இயக்குனர் பட முடிவில் 'ஒன்று இல்லாமல் உள்ளது. ஏதோ ஒன்று இல்லாமையால் முழுமையடையவில்லை' என்பதை காட்டவே பெண்களை தவிர்த்தாக கூறினார். பெண்கள் எமது சமூகத்தில் ஒதுக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. உண்மையில் வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் பெண்களின் பங்களிப்பு என்பது மிக, மிகக் குறைவே. தமிழ் தேசிய பிரச்சினையில் பெண்கள் பங்களித்திருந்தாலும் அவர்கள் இயங்கிகளாகத் தான் இருந்தார்கள்.

தொடர்ச்சி 23ஆம் பக்கம்

Award Winning Communities. | It's where you belong.

TRIDEL®
BUILT FOR LIFE







# OPEN HOUSE:

**Saturday Nov. 14th**
**From 11am – 5pm**

HOMELIFE
Higher Standards

For early booking or information, please call
HomeLife GTA Realty Inc., Brokerage**
1711 McCowan Road
Unit 206, Toronto, ON
M1S 2Y3
416.321.6969

** Independently owned and operated.

**Tridel Presentation Centre:**
On Village Green Square, across from the Delta Hotel at Kennedy Rd. & Hwy. 401
416.293.5535




METROGATE
the birth of a green neighbourhood

## High-Rise Condos from $199,900*, & Townhomes from $379,900*.

Hwy. 401/Kennedy – Toronto, Canada.
To be completed Spring 2012.




Relax, it's a Tridel.

"Highest in Customer Satisfaction" for a Fourth Consecutive Year by J.D. Power and Associates.

Ontario Home Builder of the Year 2009

TRIDEL BUILT GREEN

Tridel ranked "Highest in Customer Satisfaction With New Condominium Builders in the Greater Toronto Area (GTA) Four Consecutive Years" by J.D. Power and Associates 2009 Canadian New-Condominium Builder Customer Satisfaction Study℠. Tridel received the highest numerical score in the Greater Toronto Area (GTA) in the proprietary J.D. Power and Associates 2006-2009 Canadian New Condominium Builder Customer Satisfaction Studies℠. 2009 study based on 745 responses from new condominium owners in the GTA, measuring 8 builders and measures opinions of owners who registered their new condominium in January-December 2008. Proprietary study results are based on experiences and perceptions of consumers surveyed in March-May 2009. Your experiences may vary. Visit jdpower.com. *Prices and specifications are subject to change without notice. Tridel®, Tridel Built for Life® and Tridel Built Green. Built for Life.® are registered trademarks of Tridel Corporation. All rights reserved. E.&O.E. November 5, 2009.

tridel.com

# திரை விமர்சனம் - பேராண்மை

தமிழ் திரைப்படத் தயாரிப்பில் இறங்கிய கார்ப்பரேட் நிறுவனங்கள் பலவும், முதலுக்கே மோசமாகி கூடாரத்தைக் காலி செய்து வரும் வேளையில், ஐங்கரன் இன்டர்நேஷனல் தயாரித்த 'வில்லு' (விஜய்), 'ஏகன்' (அஜித்) உள்ளிட்ட ஒரு டஜனுக்கும் மேற்பட்ட படங்களில் முதல் வெற்றிப்படம் எனும் பெருமையை பெற்றிருக்கிறது 'பேராண்மை'. அதற்கு முழுமுதல் காரணம் இயக்குனர் ஜனநாதன் தான்! 'இயற்கை'-யில் கடலையும், 'ஈ'-யில் நகரம் சார்ந்த விளிம்பு நிலை மனிதர்களின் வசிப்பிடங்களையும் காட்சிப்படுத்திய எஸ்.பி. ஜனநாதன், 'பேராண்மை'-யில் காடும் காடு சார்ந்த பகுதிகளையும் கதைக்களமாக்கி இருக்கிறார். தமிழில் வெளிவந்திருக்கும் குறிப்பிடத்தகுந்த முதல் சாகசப் படம் என்றும் 'பேராண்மை'-யைச் சொல்லலாம்.




இடஒதுக்கீட்டில் படித்து வன இலாகா அதிகாரி யாக உயர்ந்து நிற்கும் துருவனும் ஐந்து தேசிய மாணவர் படை பெண்களும் சேர்ந்து, பசுமை புரட்சிக்காக இந்திய அரசு ஏவ இருக்கும் ராக்கெட்டை அழிக்க வரும் வெளிநாட்டு கூலிப்படையினர் முயற்சியை தடுப்பதே கதை.

அடர்ந்த காட்டுப்பகுதியில் ஒரு கிராமமாக வசிக்கும் பழங்குடியின வகுப்பில் பிறந்து வளரும் துருவன், பல்கலைக்கழகப் பட்டம் பெற்று அதே பகுதியில் காட்டு இலாகா அதிகாரியாக பணிபுரிகிறார். அவரது ஊருக்கு ஒரு கல்லூரியைச் சேர்ந்த தேசிய மாணவர் படை மாணவிகள் பயிற்சிக்காக வருகிறார்கள். அவர்களில் ஐந்து கல்லூரி மாணவிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அந்த காட்டில் வசிப்பது, விலங்குகளை எதிர்த்து போரிடுவது உள்ளிட்ட பல பயிற்சிகளை அளிக்கும் பணி துருவனுக்கு வழங்கப்படுகிறது. ஊருக்குள் வரும் முன்னரே பழங்குடியினராக பார்த்த ஒருவனை தங்களது பயிற்சியாளராய் ஏற்க மறுக்கும் அந்த ஐந்து பெண்களும், அவரை துரத்த நினைக்கிறார்கள். 'ஆதிவாசி, காட்டுப்பய' என கிண்டல் செய்கிறார்கள். ஆனால், அந்த மாணவிகள் செய்யும் முயற்சிகள் எல்லாம் பாதி வெற்றியும் தோல்வியுமாய் முடிகிறது. இந்நிலையில், அதில் ஒரு பெண் ஒரு தலையாய் துருவனைக் காதலிக்கவே ஆரம்பிக்கிறார். அவர்களுக்கான பயிற்சியை மிகவும் கண்டிப்பும் கட்டுப்பாடுமாக செய்யும் துருவன், அந்த இளமைப் பட்டாளத்தின் கொட்டத்தை அடக்கி, அந்த ஐந்து பேரையும் காட்டுக்கு அழைத்துப் போகிறார். இதுவரை மக்கள் நடமாட்டமே இல்லாத காட்டு பகுதிக்குள் இவர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும்போது, காட்டுக்குள் அந்நியர்களின் நடமாட்டம் இருப்பதை உணர்கிறார்கள். அவர்கள் யார், எதற்காக இந்த அடர்ந்த வனப்பகுதியில் உலவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து அதிர்ச்சியடைகிறார்கள். இந்தியா விண்ணுக்கு அனுப்ப இருக்கும் ராக்கெட்டை தகர்க்கும் திட்டத்துடன் ஊடுருவியிருக்கும் 16 பேர் கொண்ட அயல்நாட்டினரின் சதியை, ஐந்து மாணவிகள் உதவியுடன் முறியடிக்கிறார் துருவன்.

வித்தியாசமான கதைக்களம், காடு பற்றிய ஆச்சரியமான விளக்கங்கள், நவீன ஆயுதங்கள் பற்றிய தகவல்கள் என படத்தில் ஆச்சரியத்துக்குரிய அம்சங்கள் நிறைய இருக்கின்றன. காட்டின் மைந்தர்களான பழங்குடியினரின் மீது கட்டவிழ்த்து விடப்படும் அரசின் அதிகார வன்முறை, உலக அரசியலை படியுங்கள் என்ற அறிவுரை எனப்பல விஷயங்களை தொட்டுச் செல்கிறது படம்.

பங்குடி இனத்தைச் சேர்ந்த வனக்காவலராக 'ஜெயம' ரவி நடித்திருக்கிறார். தெலுங்கில்

- பிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

வெற்றிப்பெற்ற படங்களை தமிழ்ப்படுத்தி, மெனக்கெடாமல் வெற்றி நாயகனாக வலம் வந்த 'ஜெயம்' ரவியின் உழைப்பும் முயற்சியும் இதில் குறிப்பிடத்தக்கது. 'பேராண்மை' நிச்சயம் அவரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும். தனது கதாபாத்திரத்துக்கு ஏற்றபடி உடம்பை இரும்பாக்கியிருக்கிறார். தமிழ் சிக்ஸ்பேக் ஹீரோக்கள் டூயட் பாடலுக்காக மட்டும் சட்டை கழற்றும்போது, எருதுக்கு பிரசவம் பார்க்கும் காட்சிக்காக கோவணம் கட்டியிருக்கிறார். தமிழ் சினிமாவில் கமலஹாசனுக்கு பிறகு கோவணத்துடன் ஒரு நீள காட்சியில் வலம் வருவது இவர்தான்.

துருவனின் உயரதிகாரியாக வரும் பொன்வண்ணனும், தேசிய மாணவர் படை ஆசிரியையாக வரும் ஊர்வசியும் பாத்திரத்திற் கேற்ற பலமான தேர்வு. படம் முழுக்க, இயக்குனர் தான் சொல்ல நினைக்கும் கருத்துகளை எல்லாம் பொன்வண்ணன் பாத்திரம் மூலமே சொல்லியிருக்கிறார். எனவே, இவரது பாத்திரம் மிக முக்கியமானதாகிறது. மலைஜாதியிலிருந்து ஒருவர் வன இலாக அதிகாரி நிலைக்கு வந்ததை ஒவ்வொரு முறை பேசும் போதும் மட்டம் தட்டியே பேசுவதும், அவனின் வளர்ச்சி பொறுக்காமல் அவனை ஒரு காம கொடூரனாக சித்தரித்து, அவனை கொல்ல ஆணை வாங்குவதும், கடைசி யில் துருவனால் கிடைக்கும் வீர பராக்கிரம விருதை அவரே வாங்கிக்கொள்வதும்... என இந்திய உயர் அதிகாரிகளை மிகச் சரியாக படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

ஐந்து மாணவிகளும் முகம் சுழிக்கும் அளவுக்கு அதிகமாகவே லூட்டி அடிக்கிறார்கள். ஒருதலையாய் துருவனின் மீது காதல் வயப்படும் சரண்யாவை தவிர, ஏதோ வந்தோம், ஆடினோம், பாடினோம் என்றில்லாத பெண் பாத்திரங்கள். வடிவேலும் இருக்கிறார். சில காட்சிகளில் சிரிக்க வைக்கிறார். ஆனால், இவரது இரட்டை அர்த்த வசனங்களை தவிர்த்திருந்தால், இன்னும் மெருகூட்டப்பட்டிருக்கும்.

ஒளிப்பதிவு தனியே பேசப்பட வேண்டிய ஒன்று. காடு எனும் இயற்கையின் வனப்பை கண்ணுக்கு விருந்தாக்கியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் எஸ்.ஆர்.சதீஷ்குமார். நம் கண் முன்னே காட்சிபடுத்தியிருக்கிற உணர்வே இல்லாத வகையில் காட்டையும் அருவியையும் ஏரியையும் விரித்திருக்கிறார். இடைவேளையின் போது ஒரு காட்சியில், ஒரே ஷாட்டில் ஒரு மலையில் இருக்கும் கதாநாயக, மாணவிகளிடம் இருந்து புறப்படும் கேமரா, அப்படியே பயணித்து கீழே இருக்கும் வில்லன் இடத்தையும், அங்கேயிருந்து அவர்கள் போக இருக்கும் இடத்தையும், ராக்கெட் தளத்தையும் காட்டி இடைவேளை போடும் போது எழுந்து நின்று கைதட்ட வேண்டும் போலிருக்கிறது. படம் முழுக்க இவரின் ஆளுமை அதிகம் என்றால் அது மிகையில்லை. மலைப்பகுதியில் ஒரு சுற்றுலா போன உணர்வையும் தருகிறது ஒளிப்பதிவு. கொல்லிமலை, களக்காடு என காட்டுப்பகுதிகள் ஆஹா அற்புதம் என்று புருவம் உயர்த்த வைப்பதோடு மட்டுமில்லாமல், இதெல்லாம் நம்மூரா என்று ஆச்சரியப்பட வைக்கிறது. பாராட்டப்பட வேண்டிய இன்னொருவர் கலை இயக்குநர். படத்தில் உபயோகப்படுத்தபட்டிருக் கும் அனைத்து தளவாடங்களும் இவர் அமைத்ததுதான். தத்ரூபம்.

வித்யாசாகரின் இசையும் பாடல்களும் படத்தின் மிகப் பெரிய ஏமாற்றம்.

மேம்போக்காக பார்த்தால் ஏதோ 'பாண்டஸி' வகையை போல தெரிந்தாலும் படம் முழுக்க இயக்குனரின் உழைப்பு ஒவ்வொரு காட்சியிலும் தெரிகிறது. சினிமா என்பதும் ஒரு முக்கிய ஊடகம். இதன் மூலம் தகவல்களையும் சிந்தனையைத் தூண்டும் வகையிலான விவாதப் பொருட்களையும் விரவச் செய்ய வேண்டும் என்னும் நோக்கமுடையவர் ஜனநாதன். தனது முதல் இரண்டு படங்களையும் போல் இதிலும் அதை சிறப்பாக செய்திருக்கிறார், ஜனநாதன். தனது பொதுவுடைமை பார்வையை உரிய இடங்களில் வசனங்கள் மூலமாக முன்வைக்கிறார். இயற்கை படத்தில் கப்பல் போக்குவரத்து சார்ந்த பல தகவல்களை அறிந்துகொள்ள முடிந்தது. பேராண்மையில் போர் ஆயுதங்கள் பற்றிய தகவல்களை நேரடியாகவும், போர்த் தந்திரங்களை மறைமுகமாகவும் அறிந்துகொள்ள முடிகிறது.

குறைகள் இல்லாமல் இல்லை, பயிற்சிக்கு வரும் கல்லூரி மாணவிகளில் ஒரு குழு மட்டும் அடாவடியாக இருப்பதும், இந்தியாவுக்கு ஆபத்து என்றதும் அதே குழு ஜே போட்டு அதரடிக்கு வருவதும் வழக்கமான வியாபார கந்தல். நவீன ஆயுதங்களுக்கு நடுவில் 'ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் போதும், வாத்தியார் மாதிரி ஜெயம் ரவி ஒவ்வொரு விஷயத்தையும் விளக்கிக் கொண்டிருப்பது தமிழ் சினிமாக்களுக்கு மட்டுமே உரிய 'விஜயகாந்த' தனம்.

ரஷ்ய எழுத்தாளர் போரிஸ் வஸிலேய்வ் எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்டு, இயக்குநர் ஸ்டனிஸ்வ் ரோஸ்டோட்ஸ்கி எடுத்திருந்த 'தி டான்ஸ் ஹியர் ஆர் குவொயிட்' (The Dawns Here Are Quiet) படத்தை அடிப்படியாகக் கொண்டு இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறார் ஜனநாதன். ஹாலிவுட் வெற்றிப்படங்களில் வியாபாரத் தன்மை முழுக்க முழுக்க கொண்ட படங்களை அப்படியே சுட்டு தமிழ் சினிமாவாக்குபவர்கள் மத்தியில், 1972-ல் வெளியான அற்புதமான ஒரு ரஷ்ய படைப்பை, பேராண்மைக்காக எடுத்தாண்டிருப்பது

தொடர்ச்சி 30ஆம் பக்கம்



# எம்மை நாம்.....

சித்தவைத்தியர்களைக் கூறலாம்.

ஆனால் இங்கு தற்பாதுகாப்பாக அறுகம்புல் மூலம் (புல்லில் இருந்து வேர் வரை) எடுத்து நன்கு துப்பரவு செய்து மஞ்சள் தூள் சேர்த்து இடித்து பசையாக்கப் பூசி நீராடி வரலாம். அல்லது செவ்வரத்தம் பூ, இலை போன்றவற்றை அரைத்து சருமத்தில் பூசி நீராடி வர குணம் கிடைக்கும். வைத்தியர்களிடம் சென்றால் உரிய முறைகளை அறிந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். உள் மருந்தும் முக்கியம். சிலருக்கு தைரொயிட் சுரப்பிநீர் அதிகமானாலும், குறைந்தாலும் உடம்பின் தோல்பகுதியில் தடிப்பு ஏற்படும். கால், கைகளில் வீக்கமும் ஏற்படலாம். கண் இனம், விரல் தோல் பகுதி தடிப்பாக இருக்கும். தோல் உதிர்ந்து காணப்படும். இந்நிலை காணும் இடத்து தங்கள் வைத்தியர்களிடம் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.

மார்புப் பகுதியில் சில ஆண் பெண்கள் இருபாலருக்கும் கட்டிகள் வருவதுண்டு. இக்கட்டிகளை Keloid என அழைக்கப்படும். இது ஒரு நோய் அல்ல. குழந்தைப்பருவத்தில் புஜத்தில் அம்மைக்குரிய தடுப்பூசி போடும் போது சிலருக்கு தடிப்பாக வருவதை அவதானிக்கலாம். அறுவகைச் சிகிச்சை செய்தாலும் மீண்டும் இந்நிலை ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது. எதற்கும் வைத்தியர்களின் ஆலோசனை முக்கியமாகும்.

வயது வந்த சிலருக்கு முகத்தில் பருக்கள் வருவதுண்டு. இதனை முகப்பரு என்றுதான் அழைப்பார். இப்பருக்கள் கோமோன்ஸ் (Hormones) காரணமாக வருவதாகும். பெரும்பாலும் 20, 25 வயதுக்குள் மாற்றம் அடைந்து அற்றுப்போகும். தினமும் வெந்நிர் (இளம்சூடு) கொண்டு முகம் சுத்தம் செய்ய வேண்டும். பருக்களை நசித்து கிள்ளிவிடக்கூடாது. முகத் தோலில் மெல்லிய அடையாளங்கள் ஏற்பட்டு முகத்தில் மாற்றம் ஏற்பட்டு விடும். எனவே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.




# யோகா பயிற்சி வகுப்புக்கள்



அனுபவமிக்க யோகா சிகிச்சை நிபுணரும் (Yoga Therapy Consultant) யோகா ஆசிரியையினால் (Yoga Teacher) நோய்களுக்கான யோகா சிகிச்சையும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. அத்துடன் தனிப்பட்ட யோகா வகுப்புக்களும் உண்டு. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 647.348.3423


சிலருக்கு கை நகங்களைச் சுற்றி தோல் பகுதியில் காயம் ஏற்படுவதுண்டு. இது பெரும்பாலும் தண்ணீரில் வேலை செய்யும் ஆண், பெண் இருபாலாருக்கும் வருவதுண்டு. அதாவது உணவு விடுதிகளிலோ அன்றி வீடுகளிலோ பாத்திரங்கள் சுத்தம் செய்யும் போது நிகழ்வதாகும். இதனால் விரல் பாதிப்படைவதுண்டு. இதனை பார்க்கும் போது சிலருக்கு வெறுப்பு. இதனை மறைக்கச் சிலர் சாயம் பூசுவதுண்டு. ஆனால் சாயங்களினால் பங்கஸ் என்கின்ற காளான் நோயும் ஏற்படலாம். இது விரல் இடைத்தோலில் பெரும்பாலும் ஏற்படஇடமுண்டு. இந்நிலையில் புளித்தன்மை, சாறு பட்டால் எரிவு கூடிக்காணப்படும். எனவே இப்படி வேலை செய்வோர் தங்களை பாதுகாத்துக் கொள்ள கையுறை (கவசம்) நித்தம் பாவித்தல் மிக நன்மை பயக்கும்.

மேலும் இங்கு பெரும்பாலானோர் தலைப் பகுதியில் உள்ள மயிருக்கு சாயம் (Hair Colour) பூசவருவதை நாம் நன்கு காணக்கூடயதாக இருக்கின்றது. இது எமக்கு கவர்ச்சியான அழகைக் கொடுத்தாலும் சிலரின் தலைப் பகுதி தோல் ஒவ்வாமையால் (Allergic) தாக்கப்பட்டு சொறியுடன் ஆரம்பித்து அப்பகுதி புண்ணாகி திரவமும், வடியத்தொடங்கும். இது கெடுதலையே உண்டாக்கும். எனவே இது எமக்கு ஒத்துவராவிட்டால் உடன் நிறுத்துவது மிக நன்று. தவறின் கிருமிகள் குடிகொண்டு தீங்கை விளைவிக்கும். இப்படிப் பல மாற்றங்கள் எமது சருமத்தில் ஏற்பட்டு வருகின்றது. எதற்கும் நாம் கண்ணும் கருத்துமாக இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

"சுத்தம் சுகம் தரும்"

பாதுகாப்பு பயனளிக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.


## FOR ALL YOUR REAL ESTATE NEEDS...



Call me for a tour of METROGATE, "THE GREEN COMMUNITY" located on a 17-acre site. Comprised of 46 stacked townhouses, two 35-storey residential towers, a 23-storey office tower, two 30-storey residential towers, and two 40-storey residential towers, as well as a 1.65 acre city park and two day care facilities. Steps from planned GO, TTC subway and bus stations.

**Call Now For Best Prices & Best Suites!**

*IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME, here is your chance to win!*

**VENTUS CONDOMINIUMS & TOWNHOMES @ METROGATE COMMUNITY**

BMW



**Jayanthi Sritharan**
Real Estate Broker
416.918.5872
sritharanj@rogers.com
www.jrealhomes.com







CUBA





LCD TV



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc., Brokerage***

Tel: 416.321.6969 Fax: 416.321.6963 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3 *Each office independently owned and operated

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply

# BASEMENT RENT

### NEILSON & McLEVIN
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking cable & laundry. Close to Malvern Mall, school, doctors & bus. Available immediately.
தொடர்புகளுக்கு: 416.358.4220

### MCCOWAN & STEELES
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, school, library. Bachelor only. No smoking & No pets.
Avail. January 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.836.6423

### MARKHAM & DENISON
1Bedroom bsmt for rent. Sep.entrance. Parking, laundry, cable. Close to canadian tire, TTC, etc. Avail.immediately
தொடர்புகளுக்கு: 905.471.0693 / 416.562.4238 aftre 6:00pm

### WARDEN & FINCH
1 Bedroom bsmt apt. for rent. Parking, laundry. Close to mall, TTC... Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.997.1289

### BRIMLEY & ST.CLAIR
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to mall, TTC.
Avail.immediately.
தொடர்புகளுக்கு: 647.287.9949

### MCCOWAN & ELLESMERE
1Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, kitchen, cable. Close to RT, Scarborough town center, 24hr. bus service.
Avail.immediately.
தொடர்புகளுக்கு: 416.431.5172 (After12pm)

### MARKHAM & BRIMORTON
Spacious 2 Bedroom bsmt. apt. for rent. Sep entrance. அமைதியான, வசதியான இருப்பிடம். எல்லா வசதிகளும் உண்டு. Cable, laundry. Close to bus, school, Community Center.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.438.1249

### McLEVIN & NEILSON
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, cable & laundry. Very nice & clean. Close to doctors, Malvern mall, school & library.
For immediate occupation.
Contact: 416.281.2105
Call after 6:00 pm & weekends anytime

### MARKHAM & ELSON
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, full washroom, kitchen, stove, fridge included. Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 905.201.4786

### EGLINTON & DANFORTH
1Bedroom bsmt for rent. Sep.entrance. Close to TTC, shops. சகல தளபாட வசதிகள் உட்பட cable, T.V யுடன் வாடகைக்கு உண்டு. Working Males preferred. வாடகை. $350 மட்டுமே.
Avail. December 01, 09.
416.431.5156 / 416.735.5372

### MARKHAM & ELSON
2 Bedroom + den newly finished walkout bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, stores, schools (High & Elementry), YRT. All facilities. Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 416.887.6149

### BIRCHMOUNT & EGLINTON
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Close to bus, school, many stores & subway. Convenient location. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.8086

### BELLAMY & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to mall, TTC, school. Avail. Anytime.
416.431.6349 / 416.464.4207

### MCCOWAN & HIGHGLEN
2 Bedroom bsmt for rent. Parking, laundry, complete washroom & kitchen, big livingroom. Close to TTC, 5 min. walk to elementary & high school, community center.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: Jolie - 647.668.4715

### MORNINGSIDE & MORNINGVIEW TRAIL
2 Bedroom walkout bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable, internet. Close to TTC, school, shopping, tamil stores. Working ladies, students, small families preferred. No smoking & No pets. Avail. December 01, 09.
416.830.0643 / 416.533.0768

### BELLAMY & LAWRENCE
2 Bedroom newly renovated bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, school, hwy 401, mall. Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 416.438.6460

### WARDEN & LAWRENCE
2 Bedroom bsmt apt. for rent. Sep.entrance, parking. Close to TTC, school, all amenities. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.757.5179 ( after 6:30pm)

### OLDFINCH & MORNINGSIDE
3 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to mall, TTC, school. Avail. January 01, 2010.
647.388.5295/416.724.7653

### NEILSON & MCLEVIN
1 Bedroom walkout bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, school, mall, library. Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 416.831.8549

### MCCOWAN & EGLINTON
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, go train, shopping. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.224.4064

### BELLAMY & LAWRENCE
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.258.2074

### BRIMLEY & STEELES
Brand new spacious 2 bedroom bsmt apt for rent. Sep. entrance, parking, laundry, hardwood floor, upgrade kitchen. Close to TTC, YRT, school backyard. Avail. immediately.
905.475.1036/647.886.3920

### MORNINGSIDE & SHEPPARD
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, hwy 401, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.287.0876

### MIDLAND & STEELES
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, bank.
Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 905.947.8698

### NEILSON & FINCH
2 Bedrooms bsmt for rent. Sep entrance. Parking, laundry. Bills Including. Close to 24 hours bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.456.1031

### MCLEVIN & TAPSCOTT
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall.
Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 416.332.1254

### KENNEDY& EGLINTON
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.953.5916

### ORTON PARK & LAWRENCE
ஒரு படுக்கை அறை கொண்ட Bsmt Apt. வாடகைக்கு உண்டு. Kitchen, washroom, sep. entrance. Close to ttc, shopping, etc.
தொடர்புகளுக்கு: 416.320.6156

### ON McNICOLL BETWEEN McCOWAN & MIDDLEFIELD
1 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Full washroom, large kitchen, TV cable, walking distance to 3 bus roots. Tamil single non smokers welcome. Avail. immediately.
416.291.7499 / 647.881.4206

### MIDDLEFIELD & ELSON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to park, school, TTC.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.294.0656

### BRIMLEY & DENISON
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, full bath, kitchen. Close to temple. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.795.7249

### KENNEDY & EGLINTON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, school. Avail. Anytime. Ladies or Family preferred.
***416.473.7482/416.265.3099***

### VICTORIA PARK & ELLESMERE
1or 2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall, shopping. Avail. Anytime. தொடர்புகளுக்கு: 416.754.0823 ( Please leave the message)

### MARKHAM & STEELES
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall.
Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 905.201.9014

### McCOWAN & STEELES
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.268.1739

### MCCOWAN & ELLESMERE
1 Bedroom with living room & kitchen bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to Scarborough center, TTC. Avail. immediately. Couple preferred. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: 647.206.8145

### MORNINGSIDE & SHEPPARD
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Students, small family, working ladies preferred. No smoking & No pets.
Avail. immediately.
416.724.9493 / 647.290.9635

### KENNEDY & ELLESMERE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, school, shopping, temple, bank & restaurant. No smoking & No pets. Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 647.668.4055

### MARKHAM & HIGHGLEN
2 Bedroom bsmt apt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall. Avail. immediately. அமைதியான வசதியான இருப்பிடம்.
தொடர்புகளுக்கு: 905.599.0211

### MIDLAND & EGLINTON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, plaza.
Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 416.500.5130

### MARKHAM & SHEPPARD
1 bedroom bsmt for rent. Parking, kitchen, washroom. 1 Room also Available. Close to TTC, shopping. Ladies only. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.899.6300

### MARKHAM & ELSON
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to school, TTC.
Avail. immediately.
905.201.6043 / 416.725.3665

### MEADOWALE & SHEPPARD
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, tamil store. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.282.6282

### BRICHMOUNT & FINCH
3 Bedroom walkout-out bsmt. apt. for rent. Sep. entrance, laundry facilities. Close to TTC, tamil stores, school, etc. No smoking.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.568.0686

### NEILSON & FINCH
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, washer & dryer. Close to school, TTC, mall. Avail. immediately.
***Also 1 room available in main floor.***
647.833.7492 / 416.298.7492

### ELSON & MARKHAM
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.917.0557

### MORNINGSIDE & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, shopping mall & other all facilities. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

### WESTNEY & ROSELAND
1 Bed room basement apartment (Partially furnished) available in Ajax any time. Sep. Entrance. For detail call (647) 333 0029

### MARKHAM & LAWRENCE
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, tamil stores, malls, doctors & more. Avail. immediately. **1995 Honda Civic, 1991 Toyota Corolla, 1998 Toyota Corolla** விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 647.219.4558

### MARKHAM & STEELES
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Wal-Mart in front. Close to doctors, plaza, school & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.427.2521

### MCCOWAN & ELSON
2 Bedroom bsmt or rooms for rent. Sep. entrance. Car parking, cable, washer & dryer. Close to stores, school, TTC, 24 hrs. bus service & bus routes (129,130, 53).
தொடர்புகளுக்கு: 905.294.9967

மேலும் பக்கங்கம் 21, 23

# BSMT FOR RENT

**LAWRENCE & PHARMACY**
Newly renovated 2 bedrooms raised bsmt for rent. Ample sunlight & ventilation throw large windows. Sep. entrance. Big living room, full kitchen & wash room. Close to TTC, school, malls, temples, etc. Affordable rent. Cable with TVI, Tamil one free.
தொடர்புகளுக்கு: 416.285.0428

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school.
Avail. anytime.
தொடர்புகளுக்கு: 416.272.4921

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
416.286.3534 / 416.893.2377

**BRIMLEY & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, 1 full bath, kitchen, high speed internet, cable. Close to TTC.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0690

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. Only for elderly woman. Avail. immediately. 416.297.4100/647.239.4100

# CONDO. FOR RENT

**SCARBOROUGH TOWN CENTER COURT**
2 Bedroom + den condo. for rent. Parking, laundry, 2 washrooms. Close to scarborough town, RT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.885.3995

# CONDO. FOR SALE

**KENNEDY & EGLINTON**
Two Bedroom Condo. for Sale, schools,TTC, shops and all facilities close to the building. Convenient location. Available immediately.
contact. Arul: (647) 801-9720

# WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. AC, Airbag.
Raj - 647.269.6552

# JOB JOB JOB

வாகனங்கள் திருத்துவதற்கு அனுபவமுள்ள மெக்கானிக் (Mechanic) தேவை.
416.285.8700 / 647.402.1980

**NEILSON & MCLEVIN** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள பேக்கரி ஒன்றிற்கு நல்ல அனுபவம் உள்ள பேக்கரி வேலைக்கும், சமையல் பகுதிக்கும் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு:
416.299.5083 / 416.788.5265

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
*www.vlambaram.com*

மேலும் பக்கங்கம் 20, 23

# ROOM RENT

**NEILSON & FINCH**
அறை உடன் வாடகைக்கு உண்டு. தனி குளியலறை. சமைக்கும் வசதி அல்லது உணவு தரலாம். வயதான பெண்கள் விரும்பத்தக்கது. குறைந்த வாடகை.
தொடர்புகளுக்கு: 416.554.4416

**KENNEDY & ELLESMERE**
தனி அறை ஒன்று வாடகைக்கு உண்டு. First floor. Sep. kitchen, washroom. Close to Kennedy road. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MARKHAM & SHEPPARD**
1 Room for rent. Parking available. Close to 3 schools, TTC, many malls. Ladies only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.7172

**MORNINGSIDE & McLEVIN**
2 அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. இணைந்த தனி குளியலறை. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள், வயதானவர்கள், சிறு குடும்பம் விரும்பத்தக்கது. விபரங்கட்கு:
416.732.6931/416.281.9888

**2** நேரச் சாப்பாட்டுடன் (**2 meals)** நாலு அறைகள் கொண்ட **BSMT** இல் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. **Free internet.** தொலைபேசி குறைந்த கட்டணத்துடன் செய்துதரப்படும். ***Close to all*** facilities.
**PHARMACY & LAWRENCE**
தொடர்புகட்கு: 416.288.0303

**FINCH & WARDEN**
2 Separate room for rent. Laundry, internet. Rent $400, $350 including utilities. Close to TTC, shopping mall. Avai l. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**BRIMLEY & LAWRENCE**
1 Room in basement for rent. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.264.8177

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance.Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately.
416.454.0949 / 647.827.5529

**BRIMLEY & STEELES**
தனி வீடு ஒன்றின் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. Parking, Laundry, cooking facilities. Close to bus, school, தமிழ் கடைகள். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.7550

**FINCH & MIDDLEFIELD**
Bsmt இல் 2 அறைகள் தனித்தனியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to mall, ஐயப்பன் கோவில். No smoking. Ladies preffered. Avail. immediately.
416.493.0590/647.286.0590

**MARKHAM & STEELES**
Room for rent. 1 meal optional. ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. விரும்பினால் ஒருநேர சாப்பாடு தரப்படும். Close to nofrills and many malls, TTC & YRT.
416.951.0034 / 905.294.7026

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**KENNEDY & LAWRENCE**
1 Separate room. Laundry, cable. Close to TTC, RT. Avail. January 01, 2010.
வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.752.0863

**WESTON & RUTHERFORD**
Master bedroom வாடகைக்கு உண்டு. Full furnished room. Sep. washroom, parking, laundry. Avail. immediately. Close to bus, school, shopping. Couple or Single preferred.
416.266.4789 / leave message/
416.980.5697 8:00am - 4:00pm

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

# TUTION

**MCLEVIN & TAPSCOTT**
**Behind malvern mall**
Maths & English (JK - Grade. 3). Homework help. Preparing kids for (JKG).
தொடர்புகளுக்கு: 416.332.1254

# TUITION

Qualified Elementary Teacher. 10 years experience. Presently teaching for Toronto school board. is Avail. for private for TUITION. Could visit homes. All subjects Grade 1 - 8.
***Also high school English.***
Contact - Revathy - 416.439.2972.

# TUTION CLASSES

***McCOWN & FINCH***
Math & Tamil Language ( Jk - Gr.9). Individual or group classes available. By Qualified, Trained & Experienced teachers
Call: 416.519.4336

# TUITION

**MORNINGSIDE & NIGHTSTAR**
Need a private tutor? Call today!!!! Maths, English & Science. Fluent in both English & Tamil. Affordable rates. Grade JK - 8. Home work help provided. Guaranteed to improve academic performances in less time & at lower cost. Flexible scheduling
Contact: 416. 835.6628

# VAN விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள VAN ஒன்று விற்பனைக்கு உண்டு. 1992 Dough Caravan.
தொடர்புகளுக்கு: 647.989.3242

# HOUSE FOR RENT

**NEILSON & SHEPPARD**
3 +1 Bedroom house for rent. 2 Parking, laundry, 2 washrooms. Close to TTC, school, shopping. Avail. December 01, 09.
தொடர்புகளுக்கு: 647.830.4644

**NEILSON & SHEPPARD**
3 +1 Bedroom bsmt apt house for rent. Sep.entrance, parking. 1200 + utilities. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.866.9464

**MARKHAM & SHEPPARD**
3 Bedroom upper level house for rent. Parking, laundry. Close to TTC, mall. 999 + 60% utilities. Avail. December 01, 09.
416.567.7675 / 416.875.6699

**NEILSON & MCLEVIN**
4 Bedroom house for rent. Main floor 2½ washrooms, 4 parking. Close to TTC, school, mall etc. Avail. January 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.724.7603

**MIDDLEFIELD & DENISON**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to mall, shopping, high school, Dr. Office. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.616.1980

**AIRPORT RD & BOVIARD**
Bright and spacious new whole 3 bedroom semi house for rent. 5 Appliance included. Close to Transit, hospital, hwy 410 & 427. No smoking & No pets. Rent $1250 + Utilities.
289.298.5408 / 647.300.0402

**LESLIE & FINCH**
3 Bedroom Town house for rent. எல்லா வசதிகளுடனும் வாடகைக்கு உடனடியாகக் கிடைக்கும். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.497.5523

# Commercial Basement for Rent

***MARKHAM & ELLESMERE***
Smart Baby's Diaper Factory Outlet இன் நில அறை வாடகைக்கு உண்டு. Very busy area. தொடர்புகளுக்கு:
416.499.8517 / 647.321.7575

# திருமண சேவை

மணமகள், மணமகன் தேவையானவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் : 416.754.8947

# மணமகன் தேவை


யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட யாழ். பல்கலைகழகத்தில் Physical Science 4th year இல் படித்துக் கொண்டிருக்கும் 21.08.1984 ஆம் ஆண்டில் பிறந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகின்றோம். Sponsor செய்யக் கூடிய வரனாக இருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.284.8757


# JOB AVAILABLE

Travel Agency நிறுவனத்தில் தொழில் புரிவதற்கு ஆள் தேவை. முன் அனுபவம் தேவையில்லை. பயிற்சி வழங்கப்படும். ஆங்கிலம், தமிழ் சரளமாக பேசக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.
Fax - 416.323.1316
E - mail - Mansukhvilla@hotmail.com.

சென்ற இதழ் தொடர்ச்சி

# கமலஹாசன் 50




## மீசை காதல்

முத்தம் போல் கமலஹாசனுக்கு பிடித்த இன்னொரு விசயம், மீசை. “விதம் விதமான மீசைகள் எனக்குப் பிடிக்கும். அதனால்தான் படத்துக்குப் படம் மீசையை மாற்றுகிறேன்” என்று சொல்கிறார் கமலஹாசன். பொதுவாக ஆலிவுட் நடிகர்கள் மீசை வைத்துக் கொள்வதில்லை. தேவைப்பட்டால் சரித்திர கால படங்களுக்கு தாடி, மீசை வைத்துக் கொள்வார்கள். இந்தியாவில் ஹிந்தியில் திலீப்குமார், தேவ்ஆனந்த், அசோக்குமார் ஆகிய நடிகர்களுக்கு மீசை கிடையாது. படங்களில் கூட பெரும்பாலும் மீசை இல்லாமல் நடிப்பார்கள். ராஜ்கபூருக்கு மட்டும் அரும்பு மீசை உண்டு! தமிழ்நாட்டின் முதல் சூப்பர் ஸ்டாரான எம்.கே.தியாகராஜ பாகவதர் மீசை வைத்துக்கொள்ளவில்லை. ‘சியாமளா’ என்ற ஒரு படம் தவிர மற்ற படங்களில் மீசை இல்லாமல்தான் நடித்தார். பி.யு.சின்னப்பா பெரும்பாலான படங்களில் மீசையுடன் நடித்தார். ஆனால், சொந்த வாழ்க்கையில் மீசை கிடையாது! டி.ஆர்.மகாலிங்கமும் இதே போல் படங்களில் மட்டும் அரும்பு மீசையுடன் நடித்தார். வாழ்க்கையில் மீசை கிடையாது. தியாகராஜ பாகவதவர் காலம் தொடங்கி தமிழ் திரைப்படத் துறையில் விதவிதமாக தன் மீசைகளை மாற்றிக்கொண்டே இருந்தவர் கமலஹாசன் தான். வாலிப பருவம் அடைந்தது முதல், பெரும்பாலான படங்களில் கமலஹாசன் மீசையுடன்தான் நடித்துள்ளார். அதுவும், படத்துக்குப்படம் மீசை மாறுபடும். அரும்பு மீசை முதல் அய்யனார் மீசை வரை பலவித மீசைகள் அவர் முகத்தை அலங்கரித்து இருக்கின்றன!

**- பிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

மீசை மீது தனக்குள்ள காதல் பற்றி கமல் ஒரு கட்டுரையே எழுதியிருக்கிறார். அதில் அவர் சொல்கிறார்: ‘ராபர்ட் ரெட்போர்ட் என்ற நடிகரின் மீசை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவர் நடித்த ஒரு படத்தில் மேல் உதடு முழுவதும் கவராகியிருக்கும். கீழ் உதடு மாத்திரம்தான் தெரிந்தது! அந்த மாதிரி மீசை வைக்கணும் என்று முயற்சி பண்ணினேன். ஆனால், என் உதடு ரொம்பப் பெரிசு! இந்த உதட்டை மறைக்கணும் என்றால் சவுரிதான் கட்டணும்!

முதன் முதலில் தொங்கு மீசை பேஷன் வந்தபோது, தமிழ் சினிமாவில் அந்த மீசையுடன் கதாநாயகனாக வந்தவன் நான்தான். ‘சொல்லத்தான் நினைக்கிறேன்’ படத்தில் எனக்கு மீசையை ஷேவ் பண்ணிவிட்டுச் சின்னதாக வைத்து விட்டார்கள். அதனால் எனக்கு ரொம்ப வருத்தம். அதற்குப் பிறகு ‘அபூர்வ ராகங்கள்’ படத்தின் போது டைரக்டர் பாலசந்தர் சாரிடம், ‘ஒரிஜினல் மீசையே வைத்துக் கொள்கிறேன். ஒட்டு மீசை என்றால் சிரிக்க முடியவில்லை’ என்று சொன்னேன். ‘மன்மதலீலை’ படத்தையும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் பண்ணினேன். ‘மன்மதலீலை’யில்தான் முழுமையாக மீசையைக் கீழே இறக்கிவிட்டேன். பலபேருக்குக் கோபம். அக்காலங்களில், “ஏன் இந்த மாதிரி மீசை வைக்கிறே? கதாநாயகனாக நடிக்கணும் என்று ஆசைப்படுறே. ஏன் இப்படியெல்லாம் மீசை வைச்சுக்கிறே? சிவாஜி சாரைப் பாரு, எம்.ஜி.ஆரைப் பாரு” என்று சொல்வார்கள். அதற்குப் பிறகு வந்தவர்கள் நிறையபேர் என்னைப் போல மீசை வைத்துக் கொண்டார்கள். அப்படி மீசை வைத்துக்கொண்டு புருவத்தைத் தூக்கினால் அவர்களே என்னை மாதிரி இருப்பதாக எனக்குத் தோன்றும். எல்லோரும் இப்படி வைக்கிறார்களே என்று ஒரு கட்டத்தில் மீசையையே எடுத்துவிட்டேன்!

நம்ம ஊரில் எடுத்தால் என் மனசை மாற்றி விடுவார்கள் என்று வெளிநாடு போய்விட்டேன். ஆம்ஸ்டர்டாம் நகருக்கு நானும் என் மனைவி சரிகாவும் போயிருந்தோம். அங்கே திடீரென்று ஒருநாள் மீசையை எடுத்துவிட்டேன். சரிகாவுக்கு ஒரே சந்தோஷம். “ரொம்ப நல்லா இருக்கு. இந்த முகத்தை நான் பார்த்ததே இல்லையே” என்று சொன்னாள். நாலு, ஐந்து புகைப்படங்கள் எடுத்தாள். எனக்கு மீசை இல்லாமல் பர்ஸ்ட் பிலிம் டெஸ்ட் எடுத்தது சரிகாதான். அதை எடுத்து வந்து முதன் முதலாக டைரக்டர் சிங்கிதம் சீனிவாசராவ் சாரிடம்தான் காட்டினேன். “என்னுடைய புஷ்பக்கிற்கு இதுதான் எதிர்பார்த்த முகம்” என்று சொல்லிவிட்டார். அதுமாதிரியே மணிரத்னமும், “நாயகனில் முதல் பாதிக்கு இந்த முகத்தை வைச்சுக்கலாம்” என்று சொன்னார்.

ஒல்லியாக இருக்கும் போது - ரொம்ப சின்னப்பையனாக இருக்கும்போது நம்முடைய ஸ்டேட்டசை நிலை நிறுத்திக் கொள்வதற்கோ, பாடி பில்டிங்கிற்காகவோ முதல் ஸ்டேஜிலேயே பெரிதாக பளிச்சென்று காட்டிக்கொள்ள உதவுவது மீசைதான். ஆரம்பகாலங்களில், நான் டான்ஸ் ஆடிக்கொண்டிருந்த போது, மிகவும் ஒல்லியாக இருப்பேன். இந்த காம்ப்ளெக்சைப் போக்குவதற்கு மீசை பெரிதாக வைத்துக்கொண்டால் என்ன என்று தோன்றியது. அதற்குப் பிறகு நெஞ்சில் முடி வளரவில்லையே என்று குனிந்து குனிந்து பார்த்துக் கொண்டிருப்போம். நெஞ்சில் முடி வளர்ந்தால்கூட நல்ல உடல் கட்டு இருந்தால் பெட்டராக இருக்கும் என்று உடற்பயிற்சி பண்ணுவதில்லையா? அந்த மாதிரி வரிசையில் இந்த மீசையும் ஒன்றுதான்.

மீசை என்று சொன்னால் ம.பொ.சி.யை மறக்க முடியாது. ம.பொ.சி. மீசை பற்றி ராஜாஜி சொன்னதாக, சிவாஜி ஒருமுறை சொன்னார். மீசையோடு ம.பொ.சி. வர்றார்னு சொல்லாமல் “மீசைக்குள்ளே ம.பொ.சி. வருகிறார்”னு சொன்னாராம் ராஜாஜி. பாரதியார் மீசை எனக்குப் பிடிக்கும். பாரதியார் மீசை மாதிரியேதான் எங்க மாமாவோட மீசையும். பெரியாருடைய பஞ்சு மாதிரி தாடியும் மீசையும் எனக்குப் பிடிக்கும். எனக்கு என்னமோ ரொம்ப மெல்லிசான மீசை மேல் அவ்வளவு விருப்பம் கிடையாது. ஹிட்லர் மீசை எனக்குப் பிடிக்கும். ஆனால், காமெடியன்கள் நிறைய பேர் அதை வைத்து விட்டதால், அதை மதிப்பாக நினைக்க முடியவில்லை.”

## முதல் தேசிய கௌரவமும் ஆஸ்கர் கனவும்:

சமகால தமிழ் நடிகர்களில் அதிகம் விருதுகள் பெற்றவர் கமலஹாசன் தான். இந்திய அரசின் உயர்ந்த விருதுகளில் ஒன்றான பத்மஸ்ரீ விருது 1990ஆம் வருடம் கமலுக்கு வழங்கப்பட்டது. மூன்றாம் பிறை (1982), நாயகன் (1988) இந்தியன் (1996) என மூன்று முறை சிறந்த நடிகருக்கான இந்திய அரசின் தேசிய விருதைப் பெற்றுள்ளார். தமிழக அரசின் கலைமாமணி விருதை 1989 வருடம் பெற்றார். கன்னியாகுமரி (மலையாளம்), ராஜ பார்வை (தமிழ்), அபூர்வ ராகங்கள் (தமிழ்), பதினாறு வயதினிலே (தமிழ்), சிவப்பு ரோஜாக்கள் (தமிழ்), யேதா(மலையாளம்), சகார சங்கமம் (தெலுங்கு), சாகர் (இந்தி), புஸ்பக் (இந்தி) இவைகள் அனைத்தும் தமிழக அரசு, ஆந்திர அரசு மற்றும் சினிமா ரசிகர்கள் விருது பெற்றவை. இவை தவிர பிலிம்ஃபேர் விருது போன்ற குட்டிக்குட்டி அமைப்புகளின் அங்கீகாரம் ஏராளம்.

இவ்வளவு விருதுகள் வாங்கியிருந்தாலும் கமலின் காதல் எப்போதும் ஆஸ்கார் மீதுதான். தமிழகத்தில் ஆஸ்கார் திரைப்பட விருதுகள் பற்றி ரசிகர்களிடையே முதலில் தெரிய வந்ததே கமலஹாசன் மூலம்தான். ‘திரைப்படங்களுக்கு ஆஸ்கார் என ஒரு விருது கொடுக்கிறார்கள். உலகளவில் திரைக்கலைஞர்களுக்கு கொடுக்கப்படும் மிகப்பெரிய விருது அதுதான். அதைப் பெற தகுதியுடைய ஒரே தமிழன் கமலஹாசன் தான்’ என்று நம்பிய அவரது ரசிகர்கள், கமலை ‘ஆஸ்கார் நாயகன்’ என்ற அடைமொழியோடுதான் அழைத்தார்கள். ரஜினிகாந்த் திரைப்படங்களின் வெற்றியைக் கொண்டாடிய ரஜினி ரசிகர்களை இந்த ஆயுதத்தைக் கொண்டுதான் அவர்கள் எதிர்கொண்டார்கள். சமீபத்தில் ‘ஆஸ்கர் நாயகன்’ பட்டத்தை ஏ.ஆர்.ரஹ்மான் தட்டிச்சென்றுவிட, அந்த அறிவிப்பு வந்தவுடனே தமிழகம் முழுக்க இதுபற்றி கமல் என்ன நினைக்கிறார் என்பதுதான் ஒரு கேள்வியாக இருந்தது. இதை உணர்ந்து பத்திரிகையாளர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்த கமல், “ஆஸ்கர் எனக்கு கிடைக்காததிலும் ரஹ்மானுக்குக் கிடைத்ததிலும் எனக்கு எந்தவிதமான வருத்தமும் இல்லை. என்ஜினியரிங் பட்டம் எனக்குக் கிடைக்கலேயே என்று கோபித்துக் கொண்டது மாதிரி. நான் அதற்கு படித்திருந்தால்தானே எனக்கு அப்பட்டம் கிடைக்கும்?” என்றார், பெருந்தன்மையுடன்.

இப்போது, கமல் ரசிகர்கள் அவரை ‘உலக நாயகன்’ என்கிறார்கள்.

## மணிரத்னம் நட்பு:

தனது ஆஸ்கர் கனவை நிறைவேற்றித் தரக்கூடியவர் என கமலஹாசனும் அவரது ரசிகர்களும் நம்பிக்கை வைத்திருந்த ஒரே தமிழ் இயக்குநர் மணிரத்னம்தான். இவர்கள் இருவரும் இணைந்த முதல்படமான ‘நாயகன்’ கமலுக்கு ஆஸ்கர் விருதைப் பெற்றுத்தராவிட்டாலும் நல்லதொரு பெயரை சம்பாதித்துக் கொடுத்தது. மணிரத்னம், திரைத்துறைக்கு வருவதற்கு முன்னாலேயே கமலுக்கு நண்பராக இருந்தவர். ‘நாயகன்’ உருவான கதை பற்றி கமல் ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார்: அது, “அக்காலங்களில் எங்கள் வீடு ஓப்பன்ஹவுஸ் மாதிரி இருக்கும். சாம்கோ ஹோட்டலுக்குப் பிறகு கிட்டத்தட்ட யார் வேண்டுமானாலும் இங்கே வரலாம். இயக்குநர்கள் ஜெயபாரதி, ருத்ரய்யா, எழுத்தாளர்கள் சுப்ரமணியராஜு, வண்ணநிலவன் ஆகியோர் எப்போதும் இருப்பார்கள். திடீரென்று சுஜாதா வந்துபோவார். அதுபோல் நிறையப் பேர்... இப்படி நண்பர்கள் கூடும் போது கிட்டி, சுப்பு என்று இருவர் வருவார்கள். கெட்டிக்காரத்தனமாகப் பேசுவார்கள். எதை எதையோ பேசிக் கொண்டிருப்பார்கள். இதில் சுப்புதான் பின்னாட்களில் மணிரத்னமாக மலர்ந்தவர். அப்படித்தான் அவரைத் தெரியும். அவர் பெயர் சுப்ரமணி. நாங்க சுப்புன்னு கூப்பிடுவோம். ‘ராஜபார்வை’ ஸ்கிரிப்ட் எழுதும்போது வந்து, நீங்கள் ஏன் இப்படி எழுதுகிறீர்கள் என்று கேட்பார்கள். எங்கேயிருந்து இதை பிடித்தீர்கள் என்று கேட்பார்கள். யார் இவர்கள் என்று நினைத்தேன். கிட்டி, சுப்புன்னு இருவர் நல்லா கதை சொல்கிறார்கள் என்று பாரதி ராஜாவிடம் கதையெல்லாம் சொல்ல வைத்திருக்கிறேன். இருவரில் அதிக வசதியானவர் கிட்டிதான் என்றும் சுப்பு ரொம்ப ஏழ்மையான குடும்பமாக இருக்கக்கூடும் என்று நினைத்தேன். ஆனால், அவர் வீனஸ் பிக்சர்ஸ் ரத்னம் அய்யர் பையன் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அதற்குப் பிறகுதான் தெரிந்து கொண்டேன். அதற்குள் அவர் ஒரு படம் இயக்கத் தொடங்கிவிட்டார். மணிரத்னம் ஆகிவிட்டார். பிறகு முக்தா சீனிவாசன் படம் எடுக்கவேண்டும் என்று சொன்னபோது, ‘நீங்கள் டைரக்ட் செய்யாமல் வேறு யாரையாவது வைத்து செய்யலாம்’ என்றேன், ‘பண்ணலாம்’ என்றார். மணியின் பெயரைச் சொன்னதும், உன் பொறுப்பு என்று சொல்லிவிட்டார் முக்தா. எனக்கு இரண்டு கதைகள் சொன்னார்கள். எனக்குப் பிடித்தது நாயகன் கதை. அதையே செய்து கொள்ளலாம் என்று முடிவெடுத்தோம்.”

## அடுத்தப் படம்:

கமலஹாசன், தமிழ் மொழி தவிர தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளிலும் நடித்திருக்கிறார். அனைத்து மொழிகளையும் சேர்த்து இதுவரைக்கும் மொத்தம் 200க்கு மேற்பட்ட படங்கள் செய்திருக்கிறார். அவற்றில் குறிப்பிடத்தக்க சில திரைப்படங்கள்: மைக்கேல் மதன காமராஜன், மூன்றாம் பிறை, நாயகன், ஒரு கைதியின் டைரி, பார்த்தால் பசி தீரும், பசி, பேசும் படம், சலங்கை ஒலி, சகல-கலா வல்லவன், சதிலீலாவதி, ஹேராம், குருதிப்புனல், மூன்று முடிச்சு, அவர்கள், அவள் அப்படித்தான், சத்யா, 16 வயதினிலே, அவள் ஒரு தொடர் கதை, அழியாத கோலங்கள், தேவர் மகன், குணா, களத்தூர் கண்ணம்மா, கோகிலா, மகளிர் மட்டும், மகாநதி, மீண்டும் கோகிலா, வாழ்வே மாயம், அன்பே சிவம், அபூர்வ சகோதரர்கள், விருமாண்டி, தசாவதாரம்,

தொடர்ச்சி 23 ஆம் பக்கம்

# BASEMENT FOR RENT

**KENNEDY & LAWRENCE**

2 Bedroom Bsmt apt. for rent. Separate entrance, stove, fridge, washer, dryer, kitchen dinning etc. Very convenient location. Good for single or couple. Available immediately.

தொடர்புகளுக்கு: ***416.264.3899 / 647.808.1186***

# STORE FOR RENT

**SHEPPARD & MARKHAM**

5800 Sheppard Ave, Unit 10

600 Square Feet கடை ஒன்று வாடகைக்கு உள்ளது. குமார் வீடியோ, சிநேகா நகைக்கடைக்கு அருகாமையில் உள்ளது.

மேலதிக விவரங்களுக்கு: 416.291.8050 / 647.830.2773

# CARS FOR SALE



- 2003 Toyota Corolla Sports S, fully loaded, 4 door, 5 speed, 112,000 km, Certified E test, Price $8,495.
- 2004 Toyota Matrix, fully loaded, 5 speed, 121,000 km Certified E test, Price $6,995.
- 2006 Toyota Sienna Van,fully loaded, 8 Seats, 103,000 m, Certified E test, Price $14,995.
- 2003 Subaru Outback, 4 WD, fully loaded, One owner, Certified E test, Price $7,500.
- 2006 Honda Odyssey, fully loaded, 8 Seats, Certified E test, 92,000m, Price $15,995.
- ***Free Oil Change for Life Time*** * - If Anybody buy cars from ***MS7***

Pl.Call: ***905.770.2575*** 9:00am - 6:00pm / ***416.399.6640*** After 6:00 pm

## காணி விற்பனைக்கு

வவுனியா கூமாங்குளத்தில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 647.289.6906

## *FOR SALE*

**WARDEN & EGLINTON**

Zoning place for business garage for sale.

தொடர்புகளுக்கு: 416.882.5759

**THARANEE ELECTRICAL SERVICES**

அனைத்து மின் இணைப்பு தருத்த வேலைகளுக்கும், கனடிய அரசு அங்கீகாரம் பெற்றவர் மூலமி பாதுகாப்பான முறையில் உங்கள் அனைத்து மின்சார வேலைகளையும் செய்து கொள்ள அழையுங்கள்.

Big or Small Job

Licensed Electrician Bala : 647.284.6141

## ஆடைகள் விற்பனைக்கு தீபாவளி வரவுகள்

இந்தியாவில் இருந்து புதிய டிசைன் ஆடைகள் (தீபாவளி வரவுகள்) வந்து குவிந்துள்ளன. உயர்தரம் நியாய விலை. ஒரு முறை வந்து பார்த்தால் உண்மை புரியும்.

மொத்த வியாபாரமும் உண்டு.

416.400.7398/905.201.6791


மேலும் பக்கங்கம் 20, 21


## SCHOOL TRANSPORTATION

***BRIMLEY & HUNTINGWOOD***

பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு உங்கள் பிள்ளைகளைக் கூட்டிவர வேண்டுமா?

தொடர்புகளுக்கு: 416.274.9726

## SPACE FOR RENT

**KENNEDY & FINCH**

Commercial Place for rent. Out of 6 rooms 4 rooms avail. for rent. Close to TTC, all facilities. Close by immediately.

contact: 416.288.8701

**A1 கொழும்பு**

**போட்டோ ஸ்டுடியோ & வீடியோ**

**From: அல்பத்துடன் போட்டோ**

| | | |
|---|---|---|
| 25 - 5X7 | பிறந்த நாள் | $125.00 |
| 75 - 5x7 | திருமணவிழா | $375.00 |
| 50 - 5x7 | பூப்புனித நீராட்டு | $250.00 |

L. L. 3- 2296 EGLINTON AVE. E.

**Mobile: 416-752-4444**

**Tel: 416-755-2333**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.


# வன்குரலுக்கு...

**16ஆம் பக்கத்தொடர்ச்சி**

தலைமையை அலங்கரித்தவர்கள் அல்ல. பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்பட்டால் தமிழ்ச் சமூகத்திற்கு நல்லது. பிரச்சாரமாக பயன்படலாம் என நினைத்த தமிழ் தலைமைகளும் உண்டு.

சுதா சண், கே.எஸ். சிறப்பாக நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். சுதன் மகாலிங்கம் மிகவும் குறிப்பிடத்தக்கவர். மடோனாவைப் பார்த்தால் இனி பயம் கலந்த மரியாதை வெளிப்படுவது தவிர்க்க முடியாது. பட பாத்திரத்திற்கு எதிர்மறையான குணம் கொண்டவர் மடோனா.

குழுக்களிடையே எந்தவித சித்தாந்த



வேற்றின மக்கள் எவரையும் படத்தில் காட்டவில்லை. எமது மக்கள் எமது சமூகத்துடன் வாழ்வதை இது காட்டுகிறது.

படத்தின் இரு முக்கிய பாத்திரங்கள் படத்தில் காட்டப்படவில்லை. ஒன்று எதிர்க் குழு அணித் தலைவன். மற்றையது பொலிஸ். பொலிசுக்கும் இக்குழுச் சண்டைகளுக்குமான விடயங்கள் தனிக் கட்டுரையில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

திரைப்பட மொழி இப்படத்தில் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது. பின்னணி இசை, ஒளிப்பதிவு, இயக்கம் சிறப்பாக உள்ளது. சுதன் மகாலிங்கம், கேதீஸ்வரன், மடோனா,

கோட்பாடுகளும் இல்லை என்பது இளைஞர் களுக்கான ஒரு படிப்பினையே. இப்படத்தினை பார்ப்பதன் மூலம் குழுக்களுக்கும் சமூகத்துக்குமான இடைவெளியை குறைத்தல் வேண்டும். பெற்றோர் தங்களது பிள்ளைகளை புரிந்து கொள்ள வேண்டும். அவர்களது விருப்பங்களை செவி மடுக்க வேண்டும். படத்தில் இருந்து பாடல் வரை பெற்றோரே தீர்மானிக்கும் நிலை மாறவேண்டும்.

"She discovered with great delight that one does not love one's children just because they are one's children but because of the friendship formed while raising them."

- Gabriel Garcia Marquez, Love in the Time of Cholera

காசியா குறிப்பிடுவது போல் நாங்கள் பிள்ளைகளுடன் நட்பாக இருப்பது இல்லை. அம்மா, அப்பா எனத் தொடங்கி வீட்டிற்குள் நுழையும் மூன்றாம் படை அண்ணி, அத்தான், மைத்துனன் என அனைவரும் பிள்ளைகள் மேல் ஆக்கிரமிப்பு கலாச்சாரத்தையே கடைப்பிடிக்கின்றார்கள். பிள்ளைகளை புரிந்து கொள்வதில்லை. அதற்காக முயற்சிப்பதுமில்லை.

இது எமது சமூகப் பிரச்சினை. இது எமது தமிழில் உள்ளது. பழைய மாணவர் சங்கங்கள் இந்திய மசாலா படங்களை நிதி உதவி என்ற பெயரில் காட்டுவதை தவிர்த்து இது போன்ற எமது சமூகப் பிரச்சினை படங்களை திரையிட்டு விவாதிக்க வேண்டும். இப்படம் கனடிய தமிழ்ப்பட வரலாற்றில் ஒரு மைல் கல். ஒரு நம்பிக்கை ஒளியையே இது வெளிப்படுத்துகின்றது.

பிற் குறிப்பு

கனடிய தமிழ்ப்பட உலகின் பெரும் குறைபாடு 'திரைக் கதையின்றி படமெடுப்பது'. நல்ல திரைக்கதையிருப்பின் பல விடயங்களை கூறலாம். பல திரைப்பட விழாக்கள் எமது படங்களை திரையிடும். இதன் மூலம் எமது சமூகத்தை உலகறியச் செய்யலாம். கடந்த காலங்களில் பிரான்ஸ், இங்கிலாந்தை ச் சேர்ந்த இரு தமிழ்க் குறும் படங்கள் பேர்லின் சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டுள்ளன. '1999' வன்கூவர் விழாவில் திரையிடப்பட்டுள்ளது. இது முதலாவது முழு நீளத் திரைப்படம். ரொறொன்ரோவில் பல அமைப்புக்கள் நவீன சினிமாவை அறிமுகப்படுத்தி விவாதிக்கின்றன. பல இணையத்தளங்களும், ஊடகங்களும் நல்ல சினிமாவை அறிமுகப்படுத்துகின்றன. படமெடுக்கின்றோம் என்ற பெயரில் இந்திய மசாலா படங்களை போல் எடுத்து இதுதான் சினிமா என்று சொல்வதை நிறுத்தி 'எமக்கான திரைப்பட மொழி'யை அமைக்க முயற்சிப்போம். அதன் முதல் படியை உறுதியாக எடுத்து வைத்துள்ள லெனினுக்கும் அவரது குழுவினருக்கும் எமது பாராட்டுக்கள்.

# கமல் 50

உன்னைப் போல் ஒருவன்.

அடுத்து, இயக்குநர் மிஷ்கின் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளார். "படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. மிஸ்கின் எழுதிக்கொண்டிருக்கிறார். அவர் எழுதி முடித்து முழுமையாக ஸ்கிரிப்ட் தயாரானால்தான் அதைச் செய்யமுடியும். அவருக்கான அட்வான்ஸ், இதுதான் கதை என எல்லாம் முடிவு செய்துவிட்டோம். அதில் கொஞ்சம் இடைவெளி விழுந்தால் வேறு படம் பண்ணலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்" என்கிறார் கமல்.

ஒருவர், ஒரே விஷயத்தை, அது எதுவாக இருந்தாலும் ஐம்பது வருடங்களாக தொடர்ந்து செய்துகொண்டே இருக்கும் போது, அதில் அவருக்கு அலுப்பும் சலிப்பும் வரும், அதுவும் கலைத்துறையில் இன்னும் கஷ்டம். ரசிகர்கள் அலுப்படைந்து விடுவார்கள், புதிய தலைமுறையினர் வந்துவிடுவார்கள், அவர்களது ரசனையும் விருப்பங்களும் மாறும். இவை எல்லாவற்றையும் சமாளித்து, ரசிகர்களையும் சுவாரஸ்யபடுத்திக்கொண்டு தானும் சலிப்படையாமல் ஐம்பது வருடங்களை கடந்திருக்கிறார் கமல், இப்போது அவரிடம் இருக்கும் உற்சாகத்தைப் பார்க்கும் போது, 75 வருடங்களையும் இப்படியே கடப்பார் போல்தான் தெரிகிறது. அதற்காக, இப்போதே அவருக்கு ஒரு 'அட்வான்ஸ்' வாழ்த்தை சொல்லிவைப்போம்.

"வாழ்த்துகள் கமலஹாசன்!"



# தூறல்

## வானரன்

## *Don't Fool with Love*

காதலுடன் முட்டாள்தனம் செய்யாதே

காதல் பற்றிய ஆய்வின் 48 வது வாசகம்

பிறிதொரு உடலை எதிர் கொள்வதை நாங்கள் தவிர்த்து வந்தோம்- பொருண்மையின் முழு பரிமாணங்களோடு ஒன்றின் வெளிப்பாடு நிகழுமெனில் - அது சூழலின் மற்ற இருப்பு நிலைகளுக்கு அச்சுறுத்தலாய் ஆனது. இரண்டு உடல்களின் ஒன்றிணைத்த இயக்கம் என்றோ தடைப்பட்டுப் போனது – எனினும் சுமத்தப்பட்ட கட்டளைகளை மீற இணைவுறுதல் அடிக்கடி நிகழ்ந்தன. இரண்டு உடலுறுப்புக்களின் ஒன்றின் மரணம் தவிர்க்க முடியாததாய் இருந்தது- எனவே மண்டலத்தில் ஆங்காங்கே அநாமதேய பிணங்கள் கிடந்தன. சுக உடல்களை தவிர்ப்பதை விட பிணங்களை தவிர்த்து உலவுவது கடினமானதாய் இருந்தது.

"முன்பு ஒரு காலத்தில் நூற்றியெட்டு கிளிகள் இருந்தன" – ரமேஷ்-பிரேம் - என்ற நூலில் இருந்து. ஆண் மொழியின் ஒவ்வொரு அசைவும் அதிகாரத்தையும் கைப்பற்றுதலையுமே இயக்கமாகக் கொண்டு இயங்குகின்றன. இது காதலுக்கும் வேறுபட்டதல்ல. காதல் என்பதும் பற்றுதல், ஆக்கிரமிப்புச் செய்தல் என்றே கருதலாம். காதலினுள் சுய நலம் உள்ளது.

Women and Men in My Life (1995) என்ற குஷ்வந் சிங்கன் நூலில் காதல் வெறும் மாயை என்பதை தான் சந்தித்த பெண்களூடாக வெளிக்கொணர்கின்றார் நூலாசிரியர்.

நோபல் பரிசு வென்ற Gabriel Garcia Marquez சிறு கதைகள் மூன்றை Don't fool with love என்ற பெயரில் படமாக்கியுள்ளனர். கொலம்பியாவில் பிறந்து வளர்ந்து பின்னர் மெக்சிக்கோ நகரில் வாழ்ந்தர் காசியா. இவரது பிரபல நாவலான Love in the Time of Cholera என்ற நாவலில் குறிப்பிட்ட சில விடயங்கள் "ஒரு திருமணத்தில் எழும் பிரச்சினைகள் உடலுறவின் பின் தீர்ந்து, காலையில் மீண்டும் ஆரம்பமாகிவிடும்" "ஒரு மனிதனுக்கு இரண்டு மனைவிகள் தேவை, ஒன்று காதலிப்பதற்கு, மற்றையது சட்டை பொத்தான் தைப்பதற்கு" இப்பொழுது காசியாவிற்கும் காதலுக்குமான உறவு புரிந்திருக்கும். இப்படத்தின் முதலாவது கதை 27 நிமிடங்கள் கொண்ட "இரு பக்க கண்ணாடி" (The Two Way Mirror).

சுசனா இளம் பெண். இன்னும் மூன்று கிழமைக்குள் திருமணம் நடைபெறவுள்ளது. பழைய பொருட்கள் விற்கும் கடை ஒன்றில் இருந்து 1800 களில் செய்யப்பட்ட கண்ணாடியிலான அலுமாரியை வாங்கி வந்து தனது அறையில் வைத்திருக்கின்றாள். திருமணத்திற்கு 21 நாட்கள் உள்ளன. அன்றிரவு அவளது கண்ணாடிக்குள் இருந்து 1863ல் வாழ்ந்த போர்வீரன் நிக்கலஸ் வருகின்றான். முதலில் அவனை வெறுத்தாலும் பின்னர் இரவில் அவனுக்காக விசேடமாக சமைத்து கண்ணாடி முன் மேசையிட்டு இருவரும் சாப்பிடுகின்றனர். இதன் பின்னர் இவர்களது சந்திப்பு ஒவ்வொரு நாளும் தொடர்கின்றது. காதலை நவீன காலத்து மணமகன் தெரிந்ததை விட, அந்தக் காலத்து போர்வீரன் புரிந்தது அதிகம். காதலின் ஒரு குறுக்கு வெட்டை இப் படம் பிரிதி பலிக்கின்றது. ஒரு சுய விசாரணை எனக் கூறலாம். இங்கு கண்ணாடி ஒரு முக்கிய பாத்திரம். பிரிதிபலிப்பை மாத்திரம் இக்கண்ணாடி வெளிப்படுத்தவில்லை. மனித உணர்வுகளின் உருமாற்றங்களையும், அகத்தின் சுயத்தையும் வெளிப்படுத்துகின்றது. சில வருடங்களின் முன்னர் மலையாள எழுத்தாளர் முகுந்தனின் ஒரு சிறுகதை காதலைப்பற்றிய ஒரு சுய விசாரணையை வெளிப்படுத்தியது. அது போன்று இப்படமும் காதலை கேள்விக் குறியாக்கியுள்ளது. இப்படத்தை பார்த்து முடித்த பொழுது மறைந்த ஆத்மநாமின் கவிதை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

"வேறு யாருமில்லை<br>
நான் தான்<br>
எனக்கும் உங்களுக்கும் இடையில்<br>
பல்லாயிரம் வருடம் வேறுபாடு…"

இப்படத்தில் இரண்டாவது கதை

## 'SATURDAY NIGHT THIEF'

சனியிரவு திருடன் என்பது.

சனியிரவு மனைவி வீட்டில் தனிமையில் உள்ளாள். கணவன் வியாபார விடயமாக வெளியூர் சென்று விடுகின்றான். கொள்ளையடிக்க வீட்டினுள் வரும் கள்ளன், படிப்படியாக மனைவியின் மனத்தில் இடம் பிடித்து விடுகின்றான். திருடன் அவளின் மனதினுள் பூட்டி வைத்திருந்த திறமைகளை வெளிக் கொணர்கின்றான். அவளது இசையை இரசித்து கேட்கின்றான். அவளது உள் மன உணர்வுகளை பாராட்டுகின்றான். ஏற்கனவே கணவன் மனைவிக்குள் இருந்த உறவு பற்றி ரமேஷ்-பிரேமின் "காதல் பற்றிய ஆய்வின் 48 வது வாசகம்" தெளிவு படுத்துகின்றது ஆணாதிக்க சமூகத்தில் திருமணங்கள் ஆண்களின் உடல் மொழியின் ஆதிக்கத்திலேயே உள்ளன. அதன் வெளிப்பாட்டை இப்படம் சிறப்பாக பதிவு செய்துள்ளது. கெய்ரோ ரைம் போன்ற பல படங்கள் இக்கருவின் அடிப்படையை கொண்டிருந்தாலும் இப்படம் வெளிப்படுத்திய விமர்சனம் அப்படங்களில் வெளிப்படவில்லை.

இப்படத்தை வோன் பொது நூலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் இலவசம்.

## *Fire Works Wednesday*

_ Iran – Dir Asghar Farhadi

ஈரானில் புது வருடம் பங்குனி 21ல் கொண்டாடப்படுகின்றது. அதன் பொழுது தீபாவளியைப் போல் வெடி கொழுத்தி கொண்டாடுவார்கள். அத்துடன் பங்குனி 21 இளவேனில் காலத்து தொடக்க நாள். வழமைபோல் இளவேனில் காலத்து வீட்டு துப்பரவுகள் இக்காலத்தில் மேற்கொள்வது வழமை. இன்னமும் சில காலத்தில் திருமணம் செய்யவுள்ள பெண் ஒரு வீட்டில் ஒரு நாள் துப்பரவு வேலை செய்வதற்கு செல்கின்றாள். அங்கு சென்ற பின்தான் அவளுக்குத் தெரிந்தது கணவன், மனைவிக்கிடையில் ஒற்றுமையின்மை என்பது. மனைவி, கணவன் ஏற்கனவே திருமணமான பெண்ணுடன் தொடர்புள்ளதாக குற்றஞ்சாட்டுகின்றாள். கணவன் மறுக்கின்றான். இவர்களது சண்டையில் மிகவும் அதிகமாக பாதிக்கப்படுவது அவர்களது மகன். மகனுடன் வீட்டை விட்டு வெளியேற முயற்சிக்கும் மனைவி இறுதியில் கணவனுக்கு கடைசி சந்தர்ப்பத்தை வழங்குகின்றாள். கணவன் இப்பொழுது அறையில் தனித்துள்ளான்.



மனைவி மகனுடன் மற்றொரு அறையில் தங்குகின்றாள். இதனை கவனித்த வேலைக்கு வந்த பெண் தனது திருமணத்தையிட்டு கவலை கொள்கின்றாள். உறுதியான கலாச்சார பாரம்பரியத்தில் பெண்களின் பாதிப்பை இப்படம் வெளிப்படுத்துகின்றது. பெண்கள் பிரச்சினை என்பது முழு உலகத்திற்கும் பொதுவானது. நாட்டிற்கு நாடு அதன் வடிவங்கள் வேறுபடுகின்றன. இதன் இயக்குனர் Asghar Farhadi. கணவன், மனைவி வேலைக்கு வரும் பெண் என மூவரின் பார்வையிலும் வெளிப்படுகின்றது இப்படம். மனைவியிடம் மறுத்தாலும், காதலியுடன் நேரத்தை செலவிடும் கணவன் இன்றைய மூன்றாம் உலக நாடுகளின் நாயகன். பெண்கள் பொதுவாக இது போன்ற காரணங்களை கேட்டால் பதிலேதும் கிடையாது. நடைமுறையில் உள்ள குடும்பப் பிரச்சினையை நேரில் பார்க்கும் ஒருவர் தனது வாழ்வை இவற்றினூடு தேடுகின்றார்.

இந்த மூன்று படங்களும் பெண்கள் மீது ஆண்கள் திணிக்கும் வடிவங்களை வெளிப்படுத்துகின்றது. ஆண்கள் உலகில் பெண்கள் படும் அவலங்களை பதிவு செய்கின்றன. இந்த மூன்று படங்களிலும் திரைக்கதை மிகவும் சிறப்பாக உள்ளது. பெண்களின் மன வலியையும் வெற்றிடத்தையும் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

TORONTO BUSINESS COLLEGE



Computerized Accounting Diploma

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✔
- 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✔
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள் ✔

அரசாங்க நிதி உதவியில் இலவசமாக கற்கலாம்

*Co-op Available*

CERTIFICATE COURSES

Take One Get One Free

Windows,Word,Excel,Power Point,Access,Outlook

Photo Shop,Quick Books,Simply,Accpac,Computer Basics

Day,Evening,Week Ends

அழையுங்கள்

416-291-5155

4465 SHEPPARD AVE. EAST #208

( SHEPPARD & BRIMLEY )

SCARBOROUGH

t.businesscollege@gmail.com

(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)




# கிரிவலம்



கிரி, குன்று, அசலம், மலை, நகம் எல்லாம் பூமியின் உயர்ந்த இடத்தை குறிப்பனவாகும். மைவரை உலகு என்பதும் இதுவேயாம். மலையின் உச்சி சிகரம் எனப்படும். எட்டாத மலை என்பதால் அண்ணாமலை எனவும் அருள் மலை என்பதால் திருவண்ணாமலை எனவும் அழைக்கப்படுகின்றது. சூரிய உதயத்தின் போது இம்மலைமீது சூரியனின் கதிர்கள் விழும் அப்போது அண்ணாமலை நெருப்புமலை போல் காட்சியளிக்கும். தமிழகத்தில் உள்ள மிகப்பெரிய கோயில்களில் ஒன்றாக, ஒப்பற்றதாக விளங்குகின்றது அண்ணாமலை. இது ஒரு புண்ணிய பூமி, புனிதபூமி, ஞானபூமி. தேவாம்சம் கொண்ட ஞானிகள், சித்தர்கள், யோகிகள், வாழ்ந்த, வாழ்கின்ற பூமி. அண்ணாமலை என்றதும் ரமணமகரிஷி, அருணகிரிநாதர் நம்நினைவிற்கு வருவார்கள்.



அடிமுடி காணாவண்ணம் அக்கினி வடிவாய் சிவன் வியாபித்து நின்ற தலம் அண்ணாமலை. அண்ணாமலை தலத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் கிரிவலமாகும். எட்டு மைல் நீளமுள்ள கிரி வலப்பாதையில், இந்திரலிங்கம், அக்கனிலிங்கம், எமலிங்கம், நிருதிலிங்கம், வருணலிங்கம், வாயுலிங்கம், குபேரலிங்கம், ஈசான்யலிங்கம் என்ற எட்டு லிங்கங்கள் அமைந்துள்ளன. கிரிவலத்தின் போது காவி உடை தரிப்பது விசேஷம். நடந்து செல்லுவதே நல்லது. எலுமிச்சம் பழத்தை கையில் வைத்துக் கொண்டு வலம் வர வேண்டும். பின்னர் அப்பழத்தை வீட்டில் பூசை அறையில் வைக்கவேண்டும். இவ்வாறு செய்வது குடும்பத்திற்கு சேமத்தைக் கொடுக்கும். கிரிவலத்தின் போது சித்தர்கள் பிரத்தியட்சமாக எழுந்தருளி கிரிவலம் வரும் பக்தர்களும் அருள் புரிவர் எனக் கூறப்படுகின்றது.

கிரிவலப்பாதையில் கிழக்கு திசையில் முதலில் தரிசனம் தருவது இந்திரலிங்கம். இதனை வழிபாடு செய்வதால் செல்வம் செழிக்கும், பதவி கிடைக்கும். தென்கிழக்குத் திசையில் வலது பக்கம் உள்ள லிங்கம் அக்கினிலிங்கம். இந்த லிங்கத்தை வழிபாடு செய்வதால் நோய், பயம், தோசம் நீங்கும், தெற்குத் திசையில் உள்ள லிங்கம் எமலிங்கம். இந்த லிங்கத்தை வழிபாடு செய்வதால் அனைத்து துன்பங்களும் நீங்கும். இயம பயம் நீங்கும். தென்மேற்கு திசையிலுள்ள லிங்கம் நிருதிலிங்கம். இந்த லிங்கத்தை வழிபாடு செய்வதால் புத்திரபாக்கியம் ஏற்படும்.

மேற்குத் திசையிலுள்ள லிங்கம் வருண லிங்கம். இந்த லிங்கத்தை வழிபாடு செய்வதால் கொடிய நோய் சக்கரை வியாதி நீங்கும். வடமேற்கு திசையில் அமைந்துள்ள லிங்கம் வாயுலிங்கம். இதனை வழிபாடு செய் வதால் கண்திருஷ்டி சுவாச நோய் நீங்கும்.

வடதிசையில் அமைந்துள்ள லிங்கம் குபேரலிங்கம். இதனை வழிபாடு செய்வதால் செல்வம் பெருகும். இதனை அடுத்துள்ள பிள்ளையார் சந்நிதியையும் தரிசிக்கலாம். வடகிழக்குத் திசையிலுள்ளது ஈசான்ய லிங்கம். இதனை வழிபாடு செய்வதால் இறை உணர்வு ஏற்படும் ஏழரை சனி நீங்கும்.

அட்ட லிங்கங்களை தரிசித்து தீர்த்தத்தை சிரசில் தெளித்துக் கொண்டால் நலமெல்லாம் பெருகும். அருணகிரி, அருணமலை, அருணாசலம், சோணாசலம், செம்மலை என்று பல பெயர்களை உடைய திருவண்ணாமலை அக்கினி தலமாக விளங்குகின்றது. திருவண்ணாமலை ஜோதி தரிசனத்திற்கு உரிய இடமாக சிறப்பு பெற்றுள்ளது. அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும் விண்ணோர் முடியின் மனித் தொகை வீறு அற்று விடும் என்பதால் அந்த சோதியின் ஒளிப்பிரவாகம் ஈடு இணையற்றது என்பதை உணரலாம். கிரி பிரதஷிணத்தில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலனை தருகின்றது.

நா. க. சிவராமலிங்கம்



# எந்தக்கணத்திலும் மனம் நாடுவது!
# எந்தப்பொழுதிலும் மனங்கள் விரும்புவது!






Niru Niru
நிரு பிராண்ட்

தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

# கருந்துளைகள் தோன்றுதல்

சென்ற இதழ் தொடர்ச்சி

பொதுவாகவே விண்மீன்கள் இறப்பது என்பது இரகசியமான ஒரு விடயமல்ல. அவற்றின் திணிவுகளைப் பொறுத்தே அவற்றின் முடிவுகளும் அமைகின்றன. கதிரவனின் திணிவினை நியமமாகக் கொண்டு விண்மீன்கள் வகையிடப்படுகின்றன. கதிரவனின் திணிவின் 0.8 மடங்கிலும் குறைந்த திணிவுடைய விண்மீன்கள் சிறிய விண்மீன்கள் எனப்படும். இவை இறந்து போகையில் சுருங்கிக் கொண்டு போகின்றன. நமது கதிரவனின் திணிவின் 0.8 மடங்கிற்கும் 3 மடங்கிற்கும் இடைப்பட்ட அளவில் திணிவுடைய விண்மீன்களை நடுத்தரத் திணிவுடைய விண்மீன்கள் என்கின்றார்கள். இவ்வகை விண்மீன்கள் இறக்கும்போது உருப்பெருத்துப் பின்னர் 90 வீதமான திணிவைத் தூசுக்களாகவும் வாயுக்களாகவும் அண்டவெளிக்குள் தள்ளிவிடுகின்றன. கதிரவனின் திணிவினைப் போல் மூன்று மடங்கிற்கும் அதிகமான திணிவினையுடைய விண்மீன்கள் திணிவு கூடிய விண்மீன்கள் எனப்படுகின்றன. இவ்வகை விண்மீன்கள் இறந்து போகையில் முதலில் மிகவும் பெரியனவாக உருப்பெருக்கின்றன. பின்னர் அவை பெருத்த சத்தத்துடனும் வெளிச்சத்துடனும் வெடித்துச் சிதறுகின்றன. இவ்விதம் வெடித்துச் சிதறுகையில் 90 வீதமான திணிவுகளை அண்டவெளிக்குள் தள்ளிவிடுகின்றன. இந்த வெடிப்பினைச் 'சுப்பநோவா' என்பார்கள். சுப்பநோவாவின் பின்னர் எஞ்சியிருக்கும் விண்மீனின் 10 வீதமான பகுதியே கருந்துளையாகின்றது.

அதிலும் கூட எல்லாச் சுப்பநோவாக்களினதும் மீதிகளும் கருந்துளையாவதில்லை.

சுப்பநோவாவின் பின்னர் எஞ்சிய 10 வீதமான விண்மீனின் திணிவானது நமது கதிரவனின் திணிவின் 1.4 மடங்கிலும் சிறியதாக இருப்பின், அதாவது சந்திரசேகரின் எல்லைப் பெறுமானத்தையும் விடச் சிறியதாக இருப்பின் ஈர்ப்பின் காரணமாகச் சுருங்கிக் கொண்டு போன விண்மீனின் எஞ்சிய பகுதியானது வெண்குள்ளர் விண்மீனாக மாறி விண்பரப்பில் தங்கிவிடும். பொதுவாகவே சுப்பநோவாவின் பின்னரா எஞ்சிய பகுதியின் திணிவானது கதிரவத்திணிவின் 1.4 மடங்கிலும் குறைவாக இருப்பது குறைவு என்கின்றார்கள். அடுத்து, விண்மீனின் எஞ்சிய மையப் பகுதியின் திணிவானது கதிரவத் திணிவின் 1.4 மடங்கிலும் அதிகமாக இருப்பின் அது வெண்குள்ளர் நிலையில் தரிக்காது, தொடர்ந்து சுருங்கிக் கொண்டே போகும். எஞ்சிய பகுதியின் திணிவானது கதிரவனின் திணிவின் நான்கு மடங்கிலும் குறைவானது எனின் அம்மையப் பகுதியானது விண்மீன்களின் இன்னொரு நிலையான நியூத்திரன் விண்மீனாக மாறித் தங்கிவிடும். இனி, சுப்பநோவாவின் பின் எஞ்சிய பகுதியின் திணிவானது கதிரவனின் திணிவின் நாலு மடங்கிலும் அதிகமெனில் விண்மீன் சுருங்குவதை எந்த ஒன்றினாலும் தடுக்கமுடியாது போய்விடும். அதனால் அது தொடர்ந்து சுருங்கிக் கொண்டு போய் ஈற்றில் ஒரு புள்ளியில் வந்து ஒடுங்கிவிடும் இந்த நிகழ்வின் விளைவே அல்லது வெளிப்பாடே கருந்துளையைப் பிறப்பிக்கின்றது.

கருந்துளை ஒன்றின் அமைப்பினைப் பார்த்தோம். கருந்துளை ஒன்று எவ்விதம் தோன்றுகின்றது என்பதனையும் பார்த்தோம். மிகவும் பிரகாசமான விண்மீன் ஒன்று தன்னிலை கெடுவதினால் இருண்ட கருந்துளையாவதாக விளக்கம் அமைகிறது. ஆனால் கருந்துளை பற்றிய தெளிவான விளக்கம் இன்னமும் இல்லையே என்கின்றீர்கள்? அப்படித்தானே! சரி, அது பற்றிய விளக்கத்தினை இனிப் பார்ப்போம்.

## கருந்துளையிற்கான விளக்கம்

சுப்பநோவாவின் பின்னரான விண்மீனின் மிச்சம், சுருங்கிக் கொண்டு போவதற்கு ஈர்ப்பு பெரும் பங்களிக்கின்றது என்பதனைத் தெரிந்து கொண்டோம். கருந்துளை ஒன்றின் தோற்றத்திற்கும் இந்த ஈர்ப்பே பிரதான காரண-ியாக இருக்கின்றது. விண்மீன் ஒன்றின் மேற்பரப்பிலும் ஈர்ப்பின் விளைவு காணப்படும். அதனால் அந்த விண்மீனின் மேற்பரப்பானது தன்னைச் சூழவுள்ள பொருட்களை இழுக்கின்றது. அத்துடன் அதன் மேற்பரப்பில் நின்றும் வெளியே வரும் வாயுத் துணிக்கைகளையும் தன்னுள் மீண்டும் இழுத்துக் கொள்ளும். இது, பூமியில் இருந்து மேல் மேல் நோக்கி எறியப்படும் கல் மேலே சென்று பின்னர் மீண்டும் பூமியில் வந்து வீழ்வது போன்றது. இந்த ஈர்ப்பின் காரணமாகவே கோள்கள் விண்மீன்களை வலம் வருகின்றன. இங்கு ஈர்ப்பானது எவ்விதம் செயற்படுகின்றதெனின் விண்மீனகளின் முழுத் திணிவும் அதன் மையத்தில் இருப்பது போன்ற விளைவையே விண்மீன்கள் எல்லாம் காட்டுகின்றன.

விண்மீன் சுருங்கிக் கொண்டு போகையில் விண்மீனின் மேற்பரப்பானது விண்மீனின் மையத்திற்கு மேலும் கிட்டவாக வருகின்றது. இதனால் விண்மீனின் மேற்பரப்பின் வலிமை அதிகரிக்கும். இவ்வதிகரிப்பின் விளைவால் விண்மீனின் மேற்பரப்பானது தன்னை விட்டு வெளியேறும் துணிக்கைகளில் அதிகமானவற்றை மீண்டும் தன்னுள் இழுத்து வைத்துக் கொள்ளும். இதனால் விண்மீனை விட்டு வெளிச்செல்லும் பொருட்களின் அளவு குறைந்துவிடும். இந்தநேரத்தில் ஒருவிடயத்தினைச் சொல்லவேண்டும். நான் முன்னர் குறிப்பிட்ட கல்லினை எடுத்துக் கொள்வோம். உங்களுக்குத் தெரியும், கல்லானது வேகமாக எறியப்பட்டால் அதிக தூரத்திற்கு மேலே சென்று பின்னர் கீழே வந்து விழும். கீழே வந்து விழுவது பூமியின் ஈர்ப்பினால் என்பது எங்களுக்குத் தெரியும். ஒருவேளை பூமியின் ஈர்ப்பு வலிமையானது இல்லாமற் போகும் அளவு தூரத்திற்கு அல்லது உயரத்திற்கு எம்மால் கல்லை எறியமுடியுமானல் கல் மீண்டும் திரும்பி வந்து பூமியில் விழாது. அப்படியாக எறியக் கூடிய வேகத்தினைத் தப்புவேகம் என்பார்கள். அதாவது, பொருள் ஒன்று புவியின் ஈர்ப்பில் இருந்தும் தப்பிப் போகக் கூடியதாக, புவியின் மேற்பரப்பில் நின்றும் செலுத்தக் கூடிய மிகக் குறைந்த வேகத்தினை தப்புவேகம் என்பார்கள்.

இதன்படியே, விண்மீன் ஒன்றின் மேற்பரப்பில் நின்றும் வெளியேறக் கூடிய துணிக்கைகள் அம்மேற்பரப்பில் நின்றும் தப்புவதற்கான தப்புவேகத்தினைக் கொண்டிருக்க வேண்டும். ஈர்ப்பின் வலிமையானது அதிகரிக்கும்போது தப்புவேகத்தினதும் பருமன் அதிகரிக்கும். எனவே விண்மீன் சுருங்கிக் கொண்டு போகையில், அதன் மேற்பரப்பானது விண்மீனின் மையத்திற்குக் கிட்டவாக வருவதால், மேற்பரப்பின் ஈர்ப்பு வலிமையும் அதிகரிக்கும். அதனால் விண்மீனில் இருந்தும் வெளியேறித் தப்புவதற்கான தப்புவேகமும் அதிகரிக்கும். அதனால் விண்மீன் சுருங்கச் சுருங்க, அதனில் நின்றும் வெளியேறும் துணிக்கைகளின் அளவும் குறைந்து கொண்டு போகும். ஒருநிலையில் விண்மீனின் மேற்பரப்பின் ஈர்ப்பு வலிமையானது விண்மீனில் நின்றும் ஒளியைக் கூடச் செல்ல விடாத அளவிற்குப் பெரியதாகிவிடும். அப்போது விண்மீனில் நின்றும் ஒளிகூட வெளியே செல்லாது. ஒளியை விட வேகமாகச் செல்லக் கூடியது ஒன்றுமில்லை. எனவே அவ்விண்மீனில் நின்றும் ஒன்றுமே வெளிவராது.
விண்மீனில் இருந்து ஒளியானது வெளிவராது



## பேரண்டம் - 52

எனில் அவ்விண்மீன் அவ்விடத்தில் இருப்பது தெரியாது. அதுமாத்திரமல்ல, அவ்விண்மீனின் மேற்பரப்பின் ஈர்ப்பின் வலிமை மிகமிகப் பெர-ியதாக இருப்பதால், அதற்கு அண்மையில் இருக்கும் பொருட்கள் எல்லாவற்றையும் தன்னுள் இழுத்துக் கொள்ளும். அது எப்படியிருக்குமெனில் கருப்பான ஒரு துவாரத்துள் எல்லாம் வந்து விழுவது போல் தோற்றும். ஆக, விண்வெளியில் அவ்விடத்தில் ஒரு கருந்துளை இருந்து தனக்குக் கிட்டவாக உள்ளவற்றை எல்லாம். தன்னுள் இழுப்பது போல் இருப்பதால் அவ்விடத்தினைக் கருந்துளை என்கிறார்கள். பொதுவாகக் கருந்துளை ஒன்று எவ்விதம் தோன்றுகின்றது என்பதற்கான எளிய விளக்கமாக இது உள்ளது.

அடுத்த தடவையில் கருந்துளையின் வடிவம் பற்றி, அது தோன்றுவதில் இருந்து விளக்கமாகப் பார்ப்போம்.



**- கனி -**

---

## அன்பின் சின்னம் அப்பம்மா

பல்லவி

அன்பின் சின்னம் அப்பம்மா
அறிவின் சிகரமு மவரம்மா

அனுபல்லவி

துன்பங்க ளேதும் வாராமல்
தூக்கி வளர்ப்பவர் அப்பம்மா

சரணம்

எட்டி யெம்மை அணைத்திடுவார்
கட்டித் தங்கம் என்றழைப்பார்
முத்தங்க ளாயிரம் எமக்களித்து
பத்திரமா யெமைக் காத்திடுவார்

அப்பா அடித்தாலும் அம்மா முறைத்தாலும்
அன்புடன் அணைப்பவர் அப்பம்மா
தப்பாய் நடக்காது தம்பால் எமையணைத்த
தமிழுடன் மதுரமும் புகட்டிடுவார்

குட்டிக் கதைகள் சொல்லிக்
கெட்டித் தனமாய் வாழத்
தட்டிக் கொடுப்பவரும் அப்பம்மா

இன்பம் அன்பிலென்று
இடித்து எமக்குரைத்து
இறுகிநாம் வாழ்ந்திட வழிவகுப்பார்

நல்லோர் நாவார
நாளும் உமை வாழ்த்த
நலமுடன் வாழுங்க பல்லாண்டு!

ஆக்கம் அருட்கவி

---


## ஆடைகள் விற்பனைக்கு

**NEILSON & WICKSON TRAIL**

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள், சுடிதார்கள் விற்பனைக்கு உண்டு. மிகமிக மலிவான விலையில் பெண்களுக்கும், சிறுவர்களுக்குமான உடைகள்.

தொடர்புகளுக்கு : **647.407.1109**



CANADIAN TAMIL CENIMA ENHANCEMENT ORGANIZATION
CTCEO
கனடிய தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு மையம்

# ஒரு நிகழ்வின் நினைவுகள்

## - சௌமி -

கனடியத் தமிழ்த் திரைப்பட மையம் (CTCEO) மாதாந்தம் நடத்திவரும் படக்காட்சி நிகழ்வின் ஒக்ரோபர் மாத நிகழ்வு ஒக்ரோபர் பத்தாந் திகதி நடைபெற்றது. இதில் கிற்லரின் யூத அழிப்பில் இருந்து ஒரு சிறுவன் தப்ப வைக்கப்பட்ட நிகழ்வை மையப்படுத்தி எடுக்கப்பட்டிருந்த ரொய்லான்ட் (Spielzeugland -Toyland) என்ற யேர்மன் படம் சிறந்த திரைக்கதை யுத்தியுடன் தயாரிக்கப்பட்டதென பார்வையாளர்களால் சிலாகிக்கப்பட்டது. இதையொத்த ஈழத்தவரின் நிகழ்வுகளை இத்தகைய உலக அங்கீகரிப்புக்குத் தகுந்த படங்களாக நாமும் எடுக்கவேண்டும் என ஒளிப்பதிவாளர் சபேசன் ஜெயராஜசிங்கம் கருத்துக்கூறினார்.

அற்ப சுயநலமே மரணத்தின் சாவியாக அமைந்துவிடும் விதி பற்றிய Black Button படம் வெறும் இரண்டே கதாபாத்திரங்களைக் கொண்டே வெகு கனமானதும் காத்திரமானதுமான படத்தையும் உருவாக்க முடியும் என சொல்லித்தந்தது. இங்கு, தான் எடுக்கும் படங்களுக்கு நடிகர்களின் ஒத்துழைப்புக்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக அங்கு குறைபட்டுக் கொண்ட இயக்குனர் ரஜீவிற்கு நல்ல பதிலை இப்படம் சொல்லிக் கொண்டதையும் நினைவுகொள்ளலாம்.

இந்நிகழ்வில், உதிரியாக காண்பிக்கப்பட்ட Black Hole எனும் ஒரு நிமிடப்படம் கலந்துகொண்ட சகலரையும் உலுக்கிவிட்டது. குறிப்பாக கலந்துகொண்ட பாரதி கலைக்கூட மாணவர்களை ஆச்சரியப்படுத்திவிட்டது. ஒரு நிமிடத்தில் மனதைத் தொடும்படி ஒரு படத்தை எடுக்க முடியும் என்பது அவர்களுக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்ததை அவர்களின் கருத்துகளிலிருந்து தெரிந்தது. அவர்களுடன் கூடவே நிகழ்வில் கலந்துகொண்ட அவர்களது பெற்றோருக்கும் ஏன் எம் போன்ற திரைப்பட அபிமானிகளுக்கும் இந்நிகழ்வு நிறைவாக அமைந்திருந்தது.

## படக்காட்சியும் கருத்துக்களமும்




கனடியத் தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு மையத்தின் செயற்பாடுகளில் ஒன்றான மாதாந்த திரைப்படக் கருத்துக் களத்தின் இம்மாத நிகழ்வாக, எதிர்வரும் November 22 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2:00 மணி முதல் பிற்பகல் 4:30 மணி வரை திரைப்படக் காட்சியும் அதற்கான கருத்துக் களமும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் Signs, Angels die in the soil , Reflections, 10 Minutes ஆகிய நான்கு குறும்படங்கள் காண்பிக்கப்பட்டு அவை தொடர்பான விமர்சன நிகழ்வும் இடம்பெறவுள்ளது. திரைப்பட ஆர்வலர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களின் விபரங்கள் இருப்பின், அவற்றை பரிமாறிக்கொள்ள சிறந்த வாயப்பாகவும் நீண்டதொரு இடைவேளைக்குப்பின் கலைஞர்கள் பலரையும் சந்திக்கும் வாய்ப்பாகவும் இந்நாள் அமையுமென நம்புகிறோம்.

இடம்: 5310 FINCH AVENUE EAST, UNIT – 37, SCARBOROUGH

மேலதிக விபரங்களுக்கு – 416- 457- 8424 / 416- 731- 4953 / 905-201-2631

# விளையாட்டுத்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

அபுதாபியில் நடைபெற்ற பாகிஸ்தான், நியூஸிலாந்து அணிகளுக்கு இடையேயான 3-வது இறுதி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்தின் 212 ரன்கள் வெற்றி இலக்கை எதிர்த்து பாகிஸ்தான் அணி கடைசி விக்கெட்டுக்கு 103 ரன்களைச் சேகரித்தும், வெற்றி பெற முடியாமல் நெருக்கமாக வந்து 204 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதனால் தொடரை நியூஸிலாந்து 2 - 1 என்று கைப்பற்றியது. பாகிஸ்தானின் 10ஆம் நிலை வீரர் மொகமட் ஆமீர் களமிறங்கும்போது அந்த அணி 26.5 ஓவர்களில் 126 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற ஏறத்தாழ சாத்தியமாகாத நிலையே இருந்தது. பார்வையாளர்கள் மைதானத்தை விட்டு வெளியே சென்று கொண்டிருந்தபோது, அந்த இயலாத நிலையிலிருந்து ஆமீரும், சயீத் அஜ்மலும் இலக்கை துரத்தத் துவங்கினர்.

இருவரும் மட்டையை சுழற்றினாலும் சில நல்ல ஷாட்களையும், சில அதிரடி ஷாட்களையும் விளையாடினர். 103 ரன்களைச் சேர்த்தனர். கடைசி விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்து சேகரித்த ரன்கள் என்ற அளவில் இது இரண்டாவது பெரிய ஜோடிச் சேர்க்கை ரன்களாகும். கடைசி ஓவரில் 8 ரன்கள் தேவை என்ற நிலை வரை வந்தது. ஆனால் 33 ரன்கள் எடுத்த சயீத் அஜ்மல், ஜேகப் ஓரம் வீசிய பந்தை கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். மொகமட் ஆமீர் 73 ரன்களில் எதிர்முனையில் நாட் அவுட்டாக பெவிலியன் திரும்ப நேர்ந்தது.

### உயரிய விருதுக்கான பட்டியலில் உசைன் போல்ட்

ஆண்டின் சிறந்த ஆடவர் தடகள வீரர் விருதுக்கு உலகின் அதிவேக மனிதன் என்ற பட்டத்துக்குரிய ஜமைக்கா தடகள வீரர் உசைன் போல்ட் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதேபோல் எத்தியோப்பியாவின் 5000மீ, 10,000 மீ தடகள சாம்பியனான கெனெனிசா பெகெலே பெயரும் சிறந்த ஆடவர் தடகள வீரர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் சிறந்த வீரராக உசைன் போல்ட்டை சர்வதேச தடகள கூட்டமைப்பான ஐ.ஏ.ஏ.எ.ஃப். தேர்வு செய்தது. தற்போது போல்ட், பெகெலே தவிர அமெரிக்க வீரர் டைசன் கே, ஆஸி. போல் வால்ட் வீரர் ஸ்டீவ் ஹூக்கர், நார்வேயின் ஈட்டி எறிதல் வீரர் ஆண்ட்ரியாஸ் தோர்கில்ட்சென் ஆகியோர் பெயரும் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### ஃபெடரர் அதிர்ச்சித் தோல்வி நடால் வெற்றி

பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் ஆடவர் ஒற்றையர் இரண்டாவது சுற்றில் பிரான்ஸ் வீரர் பென்னெட்டூவிடம் உலகின் நம்பர் ஒன் வீரர் ரோஜர் ஃபெடரர் அதிர்ச்சித் தோல்வி தழுவி வெளியேறினார். மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் நடால், அல்மார்கோவை சற்றே போராடி வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். ஜூலியன் பென்னெட்டூ, 3- 6, 7- 6, 6- 4 என்ற செட் கணக்கில் ஃபெடரரை வீழ்த்தினார். இது அவரது கனவு வெற்றியாகும். இறுதிக் கட்டத்தில் ஜூலியன் அபாரமாக விளையாடினார் என்று ஃபெடரரே அவரை புகழ்ந்து விட்டார்.

பென்னெட்டூவின் பேக் ஹேண்ட் ஷாட் நெட்டில் பட்டு நின்ற போது ஃபெடரர் முதல் செட்டைக் கைப்பற்றினார். ஆனால் இரண்டாவது செட் டை பிரேக்கரில் ஜூலியன் ஆதிக்கம் செலுத்தி 4 புள்ளிகளுடன் அந்த செட்டை கைப்பற்றினார். பிறகு 3-வது செட்டில் ஃபெடரை பேக் ஹேண்ட் ஷாட்டை விரைவாக ஆட வைத்து தவறு செய்ய தூண்டினார் ஜூலியன் ஃபெடரரும் தவறு செய்தார். இதனால் அதிர்ச்சித் தோல்வி ஏற்பட்டது. மற்றொரு ஆட்டத்தில் சக வீரர் நிகோலஸ் அல்மார்கோவை, ஸ்பெயின் வீரர் நடால் 1- 6, 7- 6, 7- 5 என்ற செட் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

# கல்லிலே...

ஆஞ்சநேயர் சிலை அமர்ந்து கைகூப்பிய நிலையில் இருக்கிறது. அந்த ஆஞ்சநேயர் மிகப்பெரிய வரம். எது கேட்டாலும் தருகின்ற சக்தி உடையவர் என்கிறார்கள். படிகள் ஏறி அந்த ஆஞ்சநேயரை வலம் வந்து, நமஸ்கரித்து, உங்களுடைய வேண்டுதல்களை அவரிடம் நீங்கள் தெரிவித்துவிட்டு வரலாம்.

கொடிமரம் தாண்டி இடது பக்கம் திரும்பினால் அங்கே கருப்புசாமி சிலை இருக்கும். கருப்புசாமி சிலை மரத்தாலானது. நான்கு மனைவியரோடு பீச்சாங்குழல் கையில் தாங்கி, அவர்களோடு நீர் அடித்து விளையாடுகின்ற இந்தச் சிலை சற்று பின்னப்பட்டிருந்தாலும் அந்த இடத்தின் அதிர்வுகள் மிக அற்புதமானது. அங்கே ஒரு கணம் நின்று கருப்புசாமியை தரிசித்துவிட்டு திரும்ப கோவிலுக்குள் புகுந்து, மண்டபத்தைச் சுற்றிக்கொண்டு வரிசைவழியே நகர்ந்து ரங்கநாதரை தரிசிக்க உள்ளே போனால் காயத்ரி மண்டபம் வரும்.

காயத்ரி மண்டபம் தாண்டியதும்தான் ரங்கநாதர் இருக்கின்ற அழகிய கருவறை. ரங்கநாதர் பாதம் முதல் உச்சந்தலை வரை அமைதியாய் தரிசித்துவிட்டு "ரங்கா, ரங்கா, ரங்கா" என்று இடையறாது சொல்லிவிட்டு பிரகாரத்தை வலம் வந்து கிளி மண்டபத்தில் சற்று நேரம் உட்கார்ந்துவிட்டு, அந்த கிளிமண்டபத்திலிருந்து





தெரிகின்ற விமான ரங்கநாதரையும் பார்த்துவிட்டு வெளியே வந்து வெளிச்சுற்று பிரகாரம் வழியாக தாயார் சந்நிதிக்கு நடந்துபோக வேண்டும்.

தாயார் சந்நிதிக்கு நடந்து போகிற வழியில்தான் முற்காலங்களில் மிகப்பெரிய யுத்தங்கள் நடந்திருக்கின்றன. அந்நியர்கள் உள்ளே புகுந்து, எவர் எதிர்பட்டாலும் வெட்டிக் கொன்று ரத்தக்களரியான இடம் அது.

ஆம், ஸ்ரீரங்கத்துக்குப் பின்னால் மிகப்பெரிய வரலாறு இருக்கிறது. அந்த வரலாற்றையும் கோயிலின் மிச்ச பகுதிகளின் அற்புத அழகையும் அடுத்த இதழில் பார்ப்போம்.

(அடுத்த இதழில் முடியும்)

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

தமிழகத்தின் இரண்டாவது மிகப்பெரிய நகரம் திருச்சி. இதனால், தமிழகத்தின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் திருச்சிக்கு செல்வதுக்கு வசதிகள் உள்ளன. திருச்சியில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது ஸ்ரீரங்கம். திருச்சி விமான நிலையம், பேருந்து நிலையம், ரயில் சந்திப்பு என எங்கிருந்து வேண்டுமானாலும் ஸ்ரீரங்கத்துக்கு எளிதாகச் செல்லலாம். போக்குவரத்து வசதிகள் மிகச் சிறப்பாக உள்ளன. திருச்சியில் எல்லாத் தரத்திலும் மிகச் சிறந்த தங்கும் விடுதிகளும் உணவகங்களும் உள்ளன.

ஸ்ரீரங்கநாதர் கோயில் நடை திறந்திருக்கும் நேரம்: காலை 6.15 முதல் பகல் 1 மணி, பகல் 2 - இரவு 9 மணி. தொலைப்பேசி எண்: 0431 - 2432246



SMILE....
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days

# எழுத்தும் பேச்சும்!

என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள்.

நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.

எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான். பாடியவன் பாட்டைக் கெடுத்தான் என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பல பெரியவர்கள் சொல்ல கேட்டிருப்பீர்கள். இன்று எழுதியவன் குடும்பத்தைக் குழப்பினான். பேசியவன் கூட்டத்தைக் குழப்பினான் என்று சொல்ல வேண்டிய நிலை வந்திருப்பது வருத்தத்துக்குரியதே. "எழுதுகோல் தெய்வம். இந்த எழுத்தும் தெய்வம்" என்றான் பாரதி. 'நயனில் சொல்லினும் சொல்லுக, சான்றோர் பயன் இல சொல்லாமை நன்று' என்றார் வள்ளுவர். அதாவது கவர்ச்சியாகப் பேசாவிட்டாலும் பயன்தராத சொற்களைப் பேசுவதைச் சான்றோர் தவிர்க்க வேண்டும் என்கிறார்.

வீட்டிலும் நாட்டிலும் குழப்பத்திற்கும் சண்டைகளுக்கும் காரணமாகச் சிலருடைய எழுத்தும் பேச்சும் அமைந்து விடுகிறது. இது மக்களின் விதி வசமா அல்லது புத்தி ஜீவிகளின் பொறுப்பற்றதன் தன்மையா? சிலர் தடுமாறி எழுதி விடுகிறார்கள். சிலர் தடுமாறிப் பேசிவிடுகிறார்கள். இதற்குப் பின்பு இவர்கள் மனம் வருந்தியுமிருக்கிறார்கள். தெரியாமல் எழுதிவிட்டேன். உணர்ச்சிவசத்தில் நாகாக்க முடியாமல் சொல் இழுக்குப்பட பேசிவிட்டேன் என்று தங்களைக் குற்றவாளிகளாகக் கருதி குமைகிறவர்களும் உண்டு. இவை குறித்துப் பகிரங்க மன்னிப்புக் கேட்கிறவர்களும் உண்டு.

தமது எழுத்து வழுக்களையும் நாக்கின் சறுக்கல்களையும் சரி செய்ய வாதாடிக் களைத்தவர்களும் இருந்திருக்கிறார்கள். இருக்கிறார்கள். இவர்களின் அகங்காரம் EGO இவர்களுக்கும் கூடாது. சமுதாயத்துக்கும் தீமையே. குடும்ப வாழ்விலும் சமுதாய வாழ்விலும் நிதானமற்ற பொறுப்பற்ற பின் விளைவைப் பற்றி எண்ணாத எழுத்துக்களாலும், பேச்சுக்களாலும் மனிதர்கள் உறவுக்குள் ஊருக்குள் பகை வளர்க்கிறார்கள்.

தெளிந்த சிந்தனையோடு எழுதுகிறவர்களும், பேசுகிறவர்களும் மனித குலத்துக்கு நன்மையே செய்கிறார்கள். பெரிய சாதனை என்று இல்லாது போனாலும், சோதனை மிக்க வாழ்க்கையில் சாந்தி - சமாதானம் - நட்பு - அன்பு - உறவு முதலியன பேணப்படுவதற்கு ஆலோசனைகளாய் ஆதரவாய் எழுதுகிறவர்களும் பேசுகிறவர்களும் சான்றோர்கள் என்று மதிக்கப்பட வேண்டியவர்கள்.

சான்றாண்மை என்பது மிகப்பெரிய பண்பு. அன்பும், பழிக்குப் பயப்படும் குணமும் சமுதாயத்துக்கு தொண்டு செய்யும் பண்பும், இரக்கமும், சொல்லில் உண்மை என்னும் ஐந்தும் சான்றாண்மைப் பண்பை தாங்கும் தூண்கள் என்றார் திருவள்ளுவர். இந்தச் சான்றாண்மைக்கு பல்கலைகழகப் பட்டம் தேவையில்லை. பாராட்டுப் பத்திரங்கள் தேவையில்லை. மனதால் வாழுகின்ற வாழ்வும், மனிதர்களை மதிக்கின்ற குணமும் இருந்தால் போதும். இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களா? என்று கேட்கிறீர்களா? இருக்கிறார்கள். நமது கண்ணுக்குத் தெரிந்தும் இருக்கிறார்கள். கண்ணுக்குத் தெரியாமலும் இருக்கிறார்கள். இவர்களால்தான் மழை பெய்கிறது. காற்று வீசுகிறது. 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை' என்பது ஔவையார் பாட்டு. இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

இந்த நல்லவர்களை மதிப்பதும், பேணுவதும் நமது நல்வாழ்வுக்கு நாம் இட்டுக் கொண்டிருக்கும் அத்திபாரமாகும். நல்லதை நினைக்க நல்லதைச் சொல்ல முடியாதவர்கள் மத்தியில் நல்லனவே நினைப்பவர்களை நாம் மதிக்க வேண்டும். யார் குழம்பினால் எனக்கென்ன? யார் கெட்டுக் குட்டிச்சுவரானால் என்ன? நான் நினைப்பதை எழுதுவேன். நினைத்ததைப் பேசுவேன் என்பவர்களை என்ன செய்வது என்றா யோசிக்கிறீர்கள்? ஒன்றும் செய்ய வேண்டாம். அவர்களை நீதிதேவன் கவனித்துக் கொள்வான். அவனுக்குப் பயப்படாதவர்களும் இருக்கிறார்களே என்று நினைக்கிறீர்களா? உண்மை அவர்களை மக்கள் என்ற குலத்துகுள் சேர்க்காமல் பதடி என்ற வர்க்கத்துக்குள் சேர்த்து விடுங்கள் என்கிறார் வள்ளுவர். பதடி என்றால் சப்பட்டை. ஏன் சிரிக்கிறீர்? இது சீனச்சப்பட்டை அல்ல. நிலத்தில் விளையாத சப்பட்டை நெல்லு.

நிற்க, கமலதாஸ் என்று ஒரு பெண் எழுத்தாளர். காதல், நேசம், அன்பு, கிளர்ச்சி, மானிட உறவுகளின் உணர்ச்சிச் சிதைவுகள் என்று பல கோணங்களில் எழுதிச் சர்வ தேசப்புகழ் பெற்றவர். இவர் கடுமையாக நோய் வாய்ப்பட்ட காலத்தில் ஒரு நாவல் எழுதினார். அது மனித மனங்களைக் குழப்புகின்ற வாழ்க்கையை வெறுக்க வைக்கின்ற விடயங்களை அதிகமாகப் புகுத்தி எழுதியது. அந்த நாவல் வெளியான பின்பு சில பத்திரிகை நிருபர்கள் கமலாதாசைப் பேட்டி கண்டார்கள். இப்படி மனிதர்களை, குடும்ப வாழ்வை குழப்பும் வகையான நாவலை ஏன் எழுதினீர்கள்? என்று கேட்டனர்.

நான் சாகப் போகிறேன். மற்றவர்கள் என்ன வாழ்வு வாழ்ந்தால் என்ன? கெட்டால் என்ன? நான் இல்லாத உலகம் எக்கேடுபட்டால் என்ன? என்ற ஒருவகை எரிச்சலில் அப்படி எழுதினேன் என்றாராம். எழுதும் நெஞ்சுக்குரிய மனிதநேயமோ, சமுதாய அக்கறையோ இல்லாத ஒருத்தியின் பதிலாய் அது அமைந்தது. சொற்ப நாட்களால் தெய்வாதீனமாக கமலாதாஸ் சுகப்பட்டு மருத்துவ மனையால் வெளியே வந்தார். திரும்பவும் பத்திரிகையாளர்கள் அவரைப் பேட்டி கண்டனர். 'மனித வாழ்க்கையை குழப்பும் விதமாக எழுதியிருக்கக்கூடாது தான்' என்றாராம். நண்பரே! இதிலிருந்து என்ன புரிகிறது. உமக்கு?

அந்தக் கமலாதாஸ் அதிரடி அறிவுப் புக்களையும் இடையிடையே விடுபவர். திடீர் என மதம் மாறினார். இப்படியான மனநோய் புத்திஜீவிகளின் எழுத்திலும் பேச்சிலும் மக்கள் நிதானம் இழக்கக்கூடாது. சரியானதை தேவையானதை எழுதுவது போன்றும் பேசுவது போன்றும் தமது வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்டிய சான்றோர்கள் வணக்கத்துக்குரியவர்கள் என்றும் நினைந்து போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களுடைய நினைவு தினங்கள் புனிதமானவை.

அவர்களைப் போன்று எழுதுபவர்களை, பேசுபவர்களை பாராட்டுவோம், மதிப்போம், பேணிவளர்ப்போம். வளரும் உலகுக்கு இது வாழும் வழி. வேறு என்ன?


பிறபின்பு

அன்பு
ஈழத்துச் சிவானந்தன்.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)


APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

*Best Building in Scarborough!*
*Clean, family building, FREE parking.*
*Close to schools, bus stop, Tamil store in building.*

Pl. Call: 416.264.2818

திவ்ய ஆட்டுக்கால் தேவி ஜோதிடம்

ஜாதகம் கணித்தல், திருமணப்பொருத்தம், கல்வி,
குழந்தைப்பேறு, திருமணத் தடை நிவர்த்தி.
அழையுங்கள்: மீனாட்சி சுந்தரம் R.
Phone - 416.439.2002



*67 Milford Haven Drive,*
*Scarborough, ON. M1G 3C9 Canada.*
*Attukaljothidam@gmail.com*

# சேதி தெரியுமா?

US$11,000 - $15,000 budget இல் எடுத்த திரைப்படம்.
இதுவரை $91,680,000 வசூல் மழை!

Paranormal Activity திரைப்படத்தை பின்வரும் 3 காரணங்களுக்காக நீங்கள் பார்க்கலாம் அல்லது தவிர்க்கலாம்.



## - கிறிஸ்ரி-

1) 5-10% தலைவலி வரக்கூடும் (Actual தலைவலி!).

2) அட இப்படிக்கூட திரைப்படம் எடுக்கலாமா என்ற ஆச்சரியத்தையோ அல்லது வெறுப்பையோ அள்ளித் தரக்கூடும்.

3) ``படு பயங்கரமான`` படுக்கையறைக் காட்சிகள்!!

3 காரணங்களும் (reasons) கீழே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.
(மூன்றாவது காரணத்துக்காக அடித்துப்புடித்து படம் பார்க்க நீங்கள் கிளம்பினால் நாங்கள் பொறுப்பல்ல என்பதனைத் தெளிவாக தெரிவ-ித்துக் கொள்ள விரும்புகிறேன்!!)

1) படத்தை 'handicam' முறையில் எடுத்திருகிறார்கள். நம்ம வீட்டு சுட்டிகள் Birthday party என்றவுடன் "நான் எடுக்கிறன்" என்று Videocam இல் "வித்தை" காட்டுவது போல, ஏறக்குறைய Full Movieஉம் எடுக்கப்பட்டு இருக்கிறது. நிறையப் பேருக்கு Blair Witch Project நினைவில் இருக்கும். இதே typeஇல் எடுக்கப்பட்டு "தலைவலி" தந்தது! (collectionஉம் கொட்டிக் குவிந்தது!) ஆனால் ஒன்று, நமது சுட்டிகளும், நாளைய இயக்குனர்கள் ஆகலாம்!

2) படத்தில் மொத்தம் 4 characters தான். அதிலும் 95% வருவது கதையின் முக்கிய girl friend, boy friend ஜோடி மட்டுமே. மேலே குறிப்பிட்டது போல low budget படம். பாதிக்கு மேல் videocam இல் record பண்ணிய காட்சிகள் என்று சொல்லிக்கொண்டு black and white காட்சிகள்.

சரி கதையின் one liner என்ன?
living together ஜோடி, smooth ஆன வாழ்க்கை, திடீர் என்று பெண் (இளம்) நடு இரவில் வினோதமான சத்தங்களைக் கேட்கிறாள்! இந்த one linerஐ வைத்துக் கொண்டு 99minutesஇக்கு கொஞ்சம் பயமுறுத்தி இருக்கிறார்கள்.

3) நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 3rd point!!
வினோதமான சத்தங்களின் "மூலம்" கண்டுபிடிக்க நாயகன் ஒரு video camera வை bedroom இல் setup பண்ணி வைக்கிறான். அதைத் தொடர்வது, இடைஇடையே திடுக்கிட வைக்கத்தான் செய்கிறது!!
(அடச் சீ! இவ்வளவுதானா மேட்டர் என்று நீங்கள் அலுத்துக் கொள்வது கேட்கிறது!)
சும்மா சொல்லக் கூடாது climax இன் கடைசி சில seconds, ரத்தம் உறையத்தான் செய்கிறது!

So மீண்டும் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் 1,2,3 points படித்து விட்டு படம் பார்ப்பதா இல்லையா என்று நீங்கள் தான் தீர்மானிக்க (decide) வேண்டும்.

# திரைவிமர்சனம்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

பாராட்டுக்குரியது. இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்த 1941-ல் மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தும் சதி திட்டத்துடன் கரேலியாவுக்கு ஜெர்மெனி படையைச் சேர்ந்த 16 பேர் வருகின்றனர். அவர்கள் வரும் வனப்பகுதியில் இருந்து தடுத்து நிறுத்த ஒரு குழு மேற்கொள்ளும் முயற்சியே அப்படம். வான்வழி ஏவுகணை தாக்குதல் தடுப்பில் பயிற்சி பெறும் 5 பெண்களுடன், அவர்களுக்குப் பயிற்சி யளிக்கும் வாஸ்டோவ் என்ற பயிற்சியாளர் ஆகிய ஆறு பேர் கொண்டதே அச்சிறு குழு. புத்திசாலித்தனமான உத்திகள் தான் அந்தச் சிறு குழுவின் ஒரே ஆயுதம். இப்படம், 1972-ம் ஆண்டின் சிறந்த வெளிநாட்டு திரைப்படத்துக்கான ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது.



காப்பி அடிப்பது என்பது வேறு. ரீமேக் என்பது வேறு. எடுத்தாள்வது என்பது வேறு. இதில், எடுத்தாளும் முறையைத் தான் மிகுதியாகக் கையாண்டிருக்கிறார், ஜனநாதன். மூலப் படத்தின் திரைக்கதையில் இருந்த உத்திகள் பயன்படுத்தப்பட்டாலும், பல விஷயங்களில் புதிய அம்சங்கள் காணப்படுகிறது. காதலுக்கு பின்னால் அலையும் தமிழ் திரைப்பட இயக்குனர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் இந்தப் படத்தின் வெற்றி.

# ஈழம்:

இடத்தில் நிற்கணும். ஆனால் ஒரு இனம் அழிவது உங்க அறிவுக்கே வராதா? உங்களுக்கு அப்படி ஒன்று நடப்பதே தெரியாதா? யார் தப்பு இது. அரசியல் ஈகோவா? மதமா? இல்ல பழிவாங்கலா? எனக்கு தெரியல.

குழந்தைகளை கொலை செய்திருக்கிறார்கள்.

பணத்துக்காக கொலை செய்யும் கூலிப்படைக் கூட ஒரு கொள்கை வைத்திருக்கிறார்கள். அதாவது குழந்தைகள், பெண்களை கொலை செய்யமாட்டோம் என்று. கூலிப்படைக்கு இருக்கிற ஒரு கட்டுப்பாடுகூட ஒரு ராணுவத்துக்கு கிடையாது.



செயற்கைக்கோளில் இருந்து பார்க்கும்போது மரத்தில் உட்காந்திருப்பது குருவியா, காக்காவா என பார்க்கக்கூடிய அறிவியல், முகாம்களில் எத்தனை பேர் செத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பதியவே இல்லையா? தமிழனை பார்த்தவுடனேயே அந்த கேமரா திரும்பிடுச்சா? போர் குற்றம் நடக்கிறது என்று ஐ.நா. சோதனை செய்ய வரும்போது, ஒரே நாளில் கிட்டதட்ட 50 ஆயிரம் தமிழர்கள் புல்டவுசரால் நசுக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லாமே ஊனமுற்றவர்கள், வயதான-வர்கள், பெண்கள், குழந்தைகள். ஏன் என்றால் அவர்கள் அடையாளத்தை மறைக்கிறார்கள்.

பேசினால்தான் தமிழன். தமிழ் பேசும்போது தமிழனாகிறான். தமிழ் பேசும்போது கொலை செய்கிறார்கள். ஆனால் பேசாத குழந்தை. குழந்தைக்கு இன்னும் மொழியே தெரியாது. அந்த குழந்தை என்ன பாவம் செய்தது. அப்பாவி அணுகுண்டுக்கும், புத்தகத்துக்கும் ஒரே வித்தியாசம்தான். அணுகுண்டு வீசும்போதெல்லாம் வெடிக்கும், புத்தகம் படிக்கும்போதெல்லாம் வெடிக்கும். இந்தப் புத்தகம் அந்த மாதிரியா புத்தகமாக இருக்க வேண்டும்.

அமெரிக்காவுக்கும் வியட்நாமுக்கும் நடந்த போரை தடுத்து நிறுத்தியது ஒரே ஒரு புகைப்படம் தான். ஒரு சிறுமியின் நிர்வாணமாக நடந்து வருவதுபோல் உள்ள புகைப்படம்தான். இங்கு அதைவிட கொடூரமான புகைப்படங்கள் இருக்கின்றன. இந்தப் புகைப்படத்திற்கு இந்த உலகம் என்ன பதில் சொல்லப்போகிறது.

அப்பாவித் தமிழர்கள் எல்லாம் சாகும்போது, போர்க்குற்றம் என்றால், அதைப் பார்த்து வாய் மூடி, கண் மூடி இருப்பது வரலாற்றுக் குற்றம். - நன்றி: நக்கீரன்

"ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"
எனும் அரிய நூல்
மனதை கட்டுப்படுத்தி நல்வழியில்
செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில்
நின்மதியை பெற வாசிக்க வேண்டிய
அருமையான நூல்




கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்
தொலைபேசி இலக்கம்: 416.282.8059
GTA Square - 5215 Finch Ave. E., #201
Middlefield & Finch

# "ஈழம்: மௌனத்தின் வலி" புத்தக வெளியீட்டு விழா!

பேரழிவும் அவநம்பிக்கைகளுமாய் சிதைந்து கிடக்கும் ஈழத்தமிழ் மக்களின் இன்றைய துயர்களை பரந்துபட்ட பொதுமக்கள் வெளிக்கு அன்பு நேயத்தோடு எடுத்துச் சொல்லும் மிக முக்கியமான, தனித்துவமான முயற்சியாய் "ஈழம்: மௌனத்தின் வலி" என்ற புத்தகம், சென்னையில் வெளியிடப்பட்டது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் மே 16, 17, 18 நாட்களில் நடந்த தமிழர் இன அழித்தல் கொடுமைகளின் நெஞ்சடைக் கும் காட்சிகளை புகைப்படமாய் கண்டு நூறு புகழ்பெற்ற மனிதர்கள் இப்புத்தகத் தொகுப்பில் பதிவு செய்துள்ளார்கள். மனிதம் பட்டுப்போகவில்லையென்ற அறிவித்த லாகவும், மானுடம் வெல்லும் என்ற நம்பிக்கையாகவும் இப்பதிவுகள் அமைந்துள்ளன.

பத்திரிகையாளர்கள் அருந்ததி ராய், அனிதா பிர-தாப், நக்கீரன் கோபால், ஆன்மீகப் பெரியோர்களான சத்குரு ஜக்கி வாசுதேவ், பேராயர் சின்னப்பா, திரையுலகின் கமல்ஹாசன், சூர்யா, பிரகாஷ்ராஜ், நந்திதா தாஸ், சத்யராஜ், சீமான், சேரன், அமீர், பாலாஜி சக்தவேல், பாலா, ஏ.ஆர்.முருகதாஸ், மிஸ்கின், கே.வி.ஆனந்த், லிங்குசாமி, ராதா மோகன், கவிஞர்கள் வைரமுத்து, இன்குலாப், அப்துல் ரஹ்மான், மு.மேத்தா, அறிவுமதி, கனிமொழி, தாமரை, தமிழச்சி, கபிலன், நா.முத்துக்குமார், பா.விஜய், தபு சங்கர், யுகபாரதி, கலாப்ரியா, கல்யாண்ஜி, ஈரோடு தமிழன்பன், கல்வியாளர்கள் அனந்த கிருஷ்ணன், வசந்தி தேவி என சமூகத்தில் பெயரும் புகழும் பெற்று விளங்கும் நூறுபேர் ஆசிரியர்களாக இருந்து ஆக்கியுள்ள புத்தகம் இது.




"போருக்கு எதிரான பத்திரிகையாளர்" என்ற அமைப்பின் இருபது பத்திரிகையாளர்கள், நூறு பேரையும் தொடர்புகொண்டது முதல் புத்தகத்திற்கு இறுதி வடிவம் கொடுத்ததுவரை முழுப்பணியினையும் உள்ளார்ந்த மனிதநேயப் பிடிப்பிலும் ஆழ்ந்த தமிழுணர்விலும் நின்று செய்துள்ளார்கள். இந்த புத்தக வெளியீட்டு விழ-ாவில் புத்தகம் ஆக்கிய நூறு பேரில் பலர் பங்கேற்றனர்.

## 'குற்றமற்றவர்களின் ரத்தம் பழிவாங்காமல் விடாது': பேராயர் சின்னப்பா

இன்று ராஜபக்சே சிரிக்கலாம். ஆனால் நான் செய்தது தவறு என்று மார்பிலே அறைந்துகொண்டு அழுது புலம்பும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. காரணம் யேசு கிறிஸ்துவை சிலுவையிலே கொன்றார்கள். அப்போது அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். இவனை கொன்றுவிட்டோம். இன்றோடு இவன் கதை முடிந்துவிட்டது. நம்முடைய வெறியை தணித்துக்கொண்டோம்.

ஆனால் வரலாற்று ஆசிரியர்கள் சொன்னார்கள். அங்குதான் யேசுவின் கதையே ஆரம்பித்தது. யேசு உயிர் துறந்த பிறகு, எந்த காரணத்திற்காக உயிர் துறந்தாரோ, ரத்தம் சிந்தினாரோ அதன் விளைவு ஆரம்பித்தது. மக்களுக்கு நன்மை கிடைத்தது.

குற்றமற்றவர்களின் ரத்தம் பழிவாங்காமல் விடாது. சாதாரண மனிதனின் ரத்தம் இலங்கை மண்ணில் ஊறிக்கொண்டிருக்கிறது. இன்னம் காயவில்லை. ரத்தத்தை உறுஞ்சிய ஈழ மண்ணில் என்ன விளைய போகிறது என்று பார்ப்பீர்கள். என்னை பொறுத்தவரையில் ஈழம் விளையும் என்றார்.

## ஈழம் மௌனத்தின் வலி புகைப்படத்திற்கு இந்த உலகம் என்ன பதில் சொல்லப் போகிறது: முருகதாஸ்

கற்பனைக்கும் எட்டாத சிந்திக்க முடியாத ஒரு கொடூரம் என்பதை கேள்விபட்டிருந்தாலும் கூட, இந்த புத்தகதில் உள்ள புகைப்படங்களைப் பார்க்கும்போது, ஒரு காட்டுமிராண்டி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ என்ற சந்தேகம் எழுகிறது. ஏன் என்றால் இதில் நிறைய விடயங்கள் நமக்கு தெரியவே இல்லை. நம்ம அறிவுக்கு இதுவெல்லாம் வரவே இல்லை என்று நினைக்கும்போது யாரோட தப்பு. ஏன் இவ்வளவு தகவல் தொழில் நுட்பத்தில் பயங்கரமாக இருக்கிறோம். வானத்தை எட்டி விட்டோம் என்று சொல்கிறோம். அனால் இதுவெல்லாம் நமக்கு தெரியவே இல்லை என்று சொல்லும் போது வெட்கமாக இருக்கிறது.

ஒரு நார்த் இண்டியாவில் போய் இதையெல்லாம் சொன்னால் "ய தி ஸ்ரீலங்கா பிராபலம்" என சாதாரணமாக கேட்பார்கள். குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்டால், நிதி திரட்டுவதில் தமிழன் தான் முதல் இடத்தில் இருக்கணும். கார்கில் வார் நடந்தது என்றால் நிதி திரட்ட தமிழன்தான் முதல்

தொடர்ச்சி 31ஆம் பக்கம்



# வாழ்வெனும் எனது ஆன்மீக யாத்திரை

எனது ஆன்மீக யாத்திரைக்கு வழிகாட்டிட இங்கு இப்போ நீ வாசித்துக் கொண்டிருப்பதைப் போன்ற புத்தகப் போதனைகளாலோ வேறு எவராலுமோ முடியவே முடியாது. எனது இதயத்து உள்ளுணர்வு தான் என்னை வழிநடத்தி செயற்பட வைக்கவேண்டும் என்பதை இன்று நான் நன்கு புரிந்து கொண்டேன்.

ஆமாம்! உனது மனது சேகரிக்கும் ஆன்மீகம் நிச்சயம் உன்னை ஒருபோதும் காப்பாற்றாது. வழக்கமாக பல மக்கள் வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்காக ஆன்மீகத்தை நாடுவதுண்டு. வெளிப்புற லௌகீகத்தைப் புரிந்து கொள்ளவும் ஆன்மீகத்தை அண்மிப்பதுண்டு. ஒரு கட்டுரை, ஒரு புத்தகம், ஒரு சொற்பொழிவு, ஓர் ஆராதனை, பூஜை போன்ற ஏதாவது ஒன்று உனது ஆன்மீகத் தேடலின் உந்துசக்தியாக இருக்கலாம். இதில் ஏதாவது ஒன்று உனது இதயத்தைத் தொட்டு 'ஆமாம்' இதுதான் எனது ஆன்மீகப் பாதை என ஊக்குவித்திட நீ மென்மேலும் ஆழமாக அதற்குள் அமிழ்ந்து ஊறி முன்னேறலாம். ஆனால் அரிவரி படிக்கும் பிள்ளைகள் வீடு கட்டி விளையாடும் மரத்துண்டுகள் போல இப்பஜனை, பூஜைகள் கொஞ்ச நாளைக்கு மட்டுமே மனநிறைவைத்தரும். பின் ஆன்மீக முன்னேற்றமில்லாத வெறும் அறிவுபூர்வமான அனுபவமாகி விடும் என்பது உண்மை.

அன்பானவர்களே! இதோ எனது சில அனுபவங்கள். நான் 1971 - 1979 வரை இலங்கையின் மாத்தளையில் ஹு'னுகல (*Hunugalla*) தேயிலைத் தோட்டத்தில் வாழ்ந்தபோது கண்டி வங்கி முகாமையாளர் திரு. சங்கரகுமாரன் தந்துதவிய ஏராளமான அற்புத ஆன்மீக புத்தகங்களுடன் ஆரம்பித்த என் ஆன்மீகத்தேடல் ரவி ஸ்வாமியின் சத்யசாயி பஜனையில் வளர்ந்தது. (www.sathyasaibaba) ஆனால் தியானம் பயில எவ்வளவோ முயற்சித்தும் அது கைகூடவில்லை. 1983 இல் யாழ். நகரில் மகேஷ் யோகியின் அமெரிக்க சிஷ்யர் கற்பித்த ஆழ்நிலை தியான மந்திரத்துடன் மகிழ்வுடன் தினசரி உடல் ஸ்மரணையற்ற தியானத்தில் திளைத்தேன். தியானம் எனது பக்தியைப் பெருக்கி, எனது புத்தியைக் கூர்மைப்படுத்தியது. தூய சைவமாக மாறி உளவளத்துணை பயின்று தொண்டு செய்ய ஆரம்பித்தேன். 1992 இல் கனடா வந்ததும் குருஜி ஸ்ரீ வாசுதேவா (www.blue_star.org), கிரியாயோகி சத்யம் **(www.kiriya-yoga.yogisatyam.org)**, குருமகராஜி **(www.maharaji.net)** தியான வழிமுறைகளையும் தெரிந்து, இப்போது எனக்கென்று தியானவழிமுறை ஒன்றை வகுத்துப் பின்பற்றி நற்பயனடை கிறேன். 2009 இன் ஆரம்பத்தில் கொழும்பு, 20 Moor Road, Wellawatte இல் நடைபெற்ற Pranic Healing பட்டறையில் எதிர்பாராத அற்புதமான முறையில் இணைந்து பயிற்சி பெற்றது மறக்கமுடியாத அனுபவம். **(www. pranichealinglanka@gmail.com)** - தேவா சோமசுந்தரம் - கொழும்பு தொலைபேசி: 2580048.

ஆகவே நாம் ஒவ்வொருவரும் சுயமாக எமது தனிமனித ஆளுமை வளர்ச்சியைப் போஷித்து எமது ஆன்மீகப் பாதையை எமக்குகந்த மாதிரி புதிதாக வெட்டி அமைத்துத்தான் முன்னேற வேண்டும். நிச்சயம் இறைவன் எமக்கு வழிகாட்டுவார். மற்றவரைப் பின்பற்றினால் தேக்கம் ஏற்படலாம். இடைவிடாத சுய முயற்சிதான் முன்னேற்றம் தரும் என்பதற்கு எனது அனுபவமே சான்று.


உங்கள் விருப்பப்படி கோவிலுக்கோ, பஜனைக்கோ, தேவாலயத்திற்கோ நீங்கள் போக வேண்டாமென்று நான் இங்கு சொல்ல வரவில்லை. உங்கள் ஆன்மீகத்தைப் போஷித்திடும் நிகழ்வுகளுக்குப் போக வேண்டாம் என்றும் சொல்லவில்லை. ஆனால் இத்தகைய நிகழ்வுகளால் நீங்கள் சேகரிக்கும் அனுபவம் நிச்சயம் உங்களைக் காப்பாற்றி முன்னேற்றப் போவதில்லை. ஆன்மீக வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் என்ற அறிவு வேறு, அதைச் செயற்படுத்துவது வேறு, இரண்டும் ஒன்றல்ல. வாசிப்பது அறிவைத் தருகின்றது. செயற்படுவது அனுபவத்தைத் தருகின்றது. ஆனால் உனது செயற்பாட்டு ஆன்மீக அனுபவம் தான் இறுதியில் உன்னைக் காப்பாற்றக் கைகொடுக்கும் என்பதைத் தெரிந்து கொள். உனக்கு ஆன்மீக நியமங்கள், கோட்பாடுகள் நன்கு தெரிந்திருந்தால் மட்டும் போதும் என நீ இன்றுவரை நம்பி இருந்திருக்கலாம். இன்று உனது ஆன்மீக அறிவை உனது இதயத்துள் புகுத்தி அதன் சொற்படி செயற்பட ஆரம்பி. மறந்து விடாதே! உனக்குக் கஷ்டமா யிருந்தால் இறைவனின் உதவி கேட்டு பிரார்த்தித்துக் கொள். நிச்சயம் உதவி வரும்.

**வாழ்வில் உனது ஆன்மீக யாத்திரையின் பாதையை உனக்கு விருப்பமான மாதிரி நீயே புதிதாக வெட்டி அமைத்துக் கொள். பிறரைப் பின்பற்றி நீ செயற்பட வேண்டிய தில்லை. எனது முயற்சியினால் மட்டுமே நான் முன்னேறலாம். என்னை முன்னேற்றக்கூடிய ஆன்மீகப் பாதையை தகுந்த ஆசானின் உதவியுடன் நானே புதிதாக கஷ்டப்பட்டு வெட்டி அமைத்திடுவேன் என இன்று கங்கணம் கட்டிக்கொள்கிறேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

158

*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



லலிதா புரூடி

NuTeK COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க

எந்தவித அடமானக் கடன்களும் பெற

Direct - 416.575.5055

Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker

RE/MAX

FOR SALE $358,000



- 27 Brimstone Cres
- Middlefiels & Finch
- 3+1 bedroom
- 3 washrooms
- 1 kitchen
- Detached house 2-Storey

For Sale $419,000



- 42 Cragg Cres.
- Detached, 2-Storey
- 4 bedrooms
- 4 washrooms
- Central Air Condition
- Well Maintained

FOR SALE $569,900



- 2411 Canal Rd E
- Simcoe Rd To Canal E
- 2 + 2 Bedrooms
- 2 Washrooms
- 2 Fridges, 2 Stoves, Washer, Dryer, All Elf, All Window Coverings. Farm Equipments Are Available At Reduced Cost.

Condo. for Sale $189,000



- Mccowan / Hwy 401
- Bedroom : 2
- Washroom : 2
- One Parking & One Locker Included.
- Ttc At Door Step. Close To All Amenities. Scarboro. Town Centre Next Door.

FOR SALE $6,500,000




- HWY 401& Markham
- Height #189-16' To Joists , #195-14' To Joists
- , Truck Loading Docks And Grade Level Docks Available. Tons Of Parkings Available.

For Sale $369,000



- Markham/Steeles
- Detached, 2-Storey
- Bedroom : 4
- Washroom : 3
- Approx.2000 Sq.Ft.
- All Appliances Incl.

NEW TORONTO ICE CONDO. PHASE II




For Sale $299,900



- 35,000 sq.ft
- Hwy 7 & Marmora
- Very Large Frontage On Hwy 7 , Price Includes All Fixtures & Furnishings. Rooms Are Rented On Weekly / Biweekly Basis.

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.

Speciallized in Power of Sale Homes

MAX 2000

குளிர் கால சுற்றுலா Disny World வரை

மார்கழி 27இல் இருந்து 2010 தை 3 வரை 8 நாட்கள் 7 இரவுகள்

பசுமையான பழைய நினைவுகளை நினைவூட்டும் பழைய புதிய Karaoke பாடல்களுடன் சுவாரசியமான சொகுசு பயணம்.
பாடும் வல்லமை படைத்தவர்களை நிச்சயமாக அன்போடு வரவேற்கின்றோம்.
பயணத்தில் பயணிகளை மகிழ்ச்சிப்படுத்தி மகிழ்விப்பவருக்கு தகுந்த பரிசும் வழங்கப்படும்.
மலரும் புதிய ஆண்டினை அழகிய அலங்கார ஒளிக்கதிர்களை யும் வான வேடிக்கைகளையும் கண் குளிர கண்டு மகிழ ஒரு முறை வந்து பாருங்கள். எவ்வளவு மகிழ்ச்சியான பயணம் என்று.




1. **வேர்ஜினியா**வில் Luray Caverns (குகை), இயற்கைக் காட்சிகள்.
2. **யோஜியாவில்** உலகிலேயே மிகப் பெரிய மீன் தடாகம்
3. *Orlando Disney World* (மூன்று நாட்கள்)
4. *Daytona Beach*
5. *South Carolina Sight Seeing*
6. *Pennsylvania - Grove city outlet mall. Shopping Center*

பத்து வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கு $250 மட்டுமே. சிறுவர்கள் கட்டாயமாக அவர்கள் பெற்றோருடன் தங்கவேண்டும்.

தை 03ஆம் திகதி இரவு பத்து மணிக்கு முன்பதாக Toronto வை வந்தடைவோம்
**விலை விபரம்** : தங்குமிடம், பேருந்து, காலை உணவு உட்பட நான்கு பேர் தங்குவதாயின் நபருக்கு : ***$490/*** மூன்று பேர் தங்குவதாயின் நபருக்கு : ***$580*** / இரண்டு பேர் தங்குவதாயின் நபருக்கு:***$640*** / ஒரு King கட்டில்.

இந்தியச் சுற்றுலா - 15 நாட்கள்

கனடிய குளிர்காலத்தை முன்னிட்டு ***AVM MAX 2000*** நிறுவனத்தின் இந்திய சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா ஸ்தலங்கள் சென்னை, காஞ்சிபுரம், மகாபலிபுரம், பாண்டிச்சேரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, செட்டிநாடு, பெரியார், கொச்சின் மற்றும் படகுச் சவாரி, விமான கட்டணம் (போய்வர), தங்குமிடம், 3 வேளை உணவு, Shopping, உள்ளூர் Transit மற்றும் 24 மணிநேரமும் தமிழில் உரையாடக்கூடிய தமிழ் கனடியன் சுற்றுலா வழிகாட்டியுடன் (Tourist Guide) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

***Price $2999. Date - December 5 to December 20. 2009.***

மேலதிக தொடர்புகளுக்கு ***AVM MAX 2000***

விபரங்களுக்கு: 416-609-2542